# சிவசத்ரபதி

(நம்மைச் சுற்றியுள்ள உலகம் - பகுதி இரண்டு)

வகுப்பு நான்கு



# டெலி மானஸ் ஹெல்ப்லைன்

**டெலி- மானஸ் (டெலி மனநல உதவி மற்றும் மாநிலங்கள் முழுவதும் நெட்வொர்க்கிங்)**

**(14416 / 9800 - 89 - 14416)**

தேசிய மனநலத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டமான டெலிமானஸ், மகாராஷ்ட்ரா மாநிலத்தில் அக்டோபர் 2022 முதல் செயல்படுத்தப்படுகிறது. டெலிமானஸ் திட்டத்தின் கீழ், 14416 என்ற ஹெல்ப்லைன் எண் மூலம் 24 X 7 இலவச ஒருங்கிணைந்த மற்றும் விரிவான மனநல சேவைகள் வழங்கப் படுகின்றன. இதில் பல்வேறு மனநலப்பிரச்சனைகளுக்கு நிபுணர்களால் சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை அடங்கும். டெலிமானஸ் ஹெல்ப்லைன் அழைத்த பிறகு நீங்கள் வழங்கும் தகவல்கள் முற்றிலும் ரகசியமாகவே இருக்கும். எனவே மாணவர்கள் தங்கள் பிரச்சனைகளை தொலைபேசியில் (அழைப்பதன் மூலம்) ஹெல்ப்லைன் எண்ணுக்கு தெரிவிக்கவும், தங்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால் கேட்கவும், தங்கள் பிரச்சனைகள் குறித்து உதவி பெறவும், மற்றவர்களை உதவிப்பெறச் சொல்லவும் தயங்க வேண்டாம்.

## மனோதர்பன்

வாரத்தின் அனைத்து நாட்களிலும் காலை 8.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உளவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதற்காக, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் மனோதர்பன் செல் மூலம் கல்வி அமைச்சகத்தால், மனோதர்பன் (8448440632) என்ற இலவச தொலைபேசி சேவை ஜூலை 2020 முதல் தொடங்கப் பட்டுள்ளது. தேவையான வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த ஹெல்ப்லைனையும் அழைக்கலாம்.

கல்வித்துறை அனுமதி எண்
தொ.க.இ./2014-15/2102/அனுமதி-505/755 நாள் 04.02.2014

இப்பாடநூல் மகாராஷ்டிரா மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புனே அமைப்பினால் தயாரிக்கப்பட்ட கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டத்தின்படி உருவாக்கப்பட்டது, சரிபார்க்கப்பட்டது. அரசாணை எண் : அபயாஸ் - 2116/(ப்ர.க்ர. 43/16) எஸ்டி - 4 நாள் 25.04.2016-ன் கீழ் அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 19.05.2026 ஆன்று நடைபெற்ற கூட்டத்தில், இப்பாடநூலை கல்வி ஆண்டு 2026-2027 முதல் பாடத்திட்டமாக நிர்ணயம் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

# சிவசத்ரபதி

## (நம்மைச் சுற்றியுள்ள உலகம் - பகுதி இரண்டு)

## வகுப்பு நான்கு

மகாராஷ்டிர மாநிலப் பாட நூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே-411 004.

அருகில் உள்ள கட்டத்தில் உள்ள (Q.R. Code) -ஐ ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கேன் செய்வதன் மூலம் உங்களுக்கு டிஜிட்டல் பாடநூலும் பாடநூலிலுள்ள பாடங்கள் தொடர்புடைய கற்றல் மற்றும் கற்பித்தலுக்கான பயனுள்ள ஒலி -ஒளி உபகரணங்களைப் பெறலாம்.

முதல் பதிப்பு: 2014
மறு பதிப்பு: மே 2026

© மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே 411004.
மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், இப்பாட நூலின் அனைத்து உரிமைகளையும் கொண்டுள்ளது. மகாராஷ்டிரா மாநில பாடநூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழக இயக்குநரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி இப்புத்தகத்தின் எந்தப் பகுதியையும் மேற்கோள் காட்டக்கூடாது.

**வரலாற்றுப் பாடக் குழு:**
டாக்டர். சதானந்த் மோரே, தலைவர்
டாக்டர். கணேஷ் ராவுத், உறுப்பினர்
டாக்டர். தின்கர் முர்குடே, உறுப்பினர்
திரு. முகல் ஜாதவ், உறுப்பினர்
செல்வி. வர்ஷா சரோதே, உறுப்பினர்-செயலாளர்

**ஒருங்கிணைப்பாளர்:**
செல்வி. வர்ஷா சரோதே
சிறப்பு அதிகாரி, வரலாறு மற்றும் குடிமையியல்

**தமிழ் மொழியாக்கம்:**
திரு. ஜான் பீட்டர்
திரு. அமல் ராஜரிகம்

**ஆய்வு :**
திரு. ஆறுமுகப்பெருமாள்
திருமதி. ஜூலியட் ராஜன்

**மொழியாக்க ஒருங்கிணைப்பாளர்:**
முனைவர் துளசி பாரத் பூஷன்
(சிறப்பு அதிகாரி தெலுங்கு )
பாடநூல் கழகம் புனே.

**படங்கள் மற்றும் அலங்காரம்:**
பேராசிரியர். திலீப் கதம்,
திரு. தேவதத்த பால்கவடே, திரு. சஞ்சய் ஷேலார்

**புகைப்படங்கள்:**
திரு. பிரவீன் போஸ்லே

**வரைபடவியலாளர்:**
திரு. ரவிகிரண் ஜாதவ்
டாக்டர். நீரஜ் சாலுங்கே

**தயாரிப்பு:**
திருமதி. மித்தாலி ஷிதப், பொறுப்பு தலைமைத் தயாரிப்பு அதிகாரி
திரு. ஷஷாங்க் கனிக்தலே, தயாரிப்பு அதிகாரி

**அச்சு கோர்ப்பு:** கேசன் லாங்வேஜ் பியூரோ, மும்பை

**தாள்:** 70 ஜிஎஸ்எம், கிரிம்வோவ்

**அச்சு ஆணை:**

**அச்சுப்பொறியாளர்:**

**வெளியிடுவோர்:**
திரு. ஹேமந்த் பாபர்,
பொறுப்பு கட்டுப்பாட்டு அதிகாரி, பாடநூல் கழகம்
பிரபாதேவி, மும்பை-25.

## முன்னுரை

மகாராஷ்டிரா மாநிலம், 21 ஆம் நூற்றாண்டின் முதல் தேசியக் கல்விக் கொள்கை 2020-இன் கலைத்திட்டத்தைத் தயாரித்துள்ளது. கூறப்பட்ட கலைத்திட்டத்தில் உள்ளவாறே நான்காம் வகுப்புக்கான பாடத்திட்டத்தைக் கொண்டு, 'சிவ சத்ரபதி' என்ற பாடநூலை மீண்டும் உங்கள் கைகளில் வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் இப்பாடநூலை 'நம்மைச் சுற்றியுள்ள உலகம் பகுதி 2'-இல் படிப்பீர்கள்.

நான்காம் வகுப்புக்கான இப்பாடநூல், 2012-ஆம் ஆண்டு தொடக்கக் கல்விப் பாடத்திட்டத்தின் கீழ் பாடநூல் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது. கற்றல்-கற்பித்தல் செயல்முறை குழந்தையை மையமாகக் கொண்டிருக்க வேண்டும், சுய படிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும், தொடக்கக் கல்வியின் முடிவில் மாணவர்கள் 'நிர்ணயிக்கப்பட்ட திறனை' அடைய வேண்டும், மேலும் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறை மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற பரந்த கண்ணோட்டத்தை மனதில் கொண்டு இப்பாடநூல் தயாரிக்கப்பட்டது.

தற்போதைய பாடப்நூலில், சத்ரபதி சிவாஜி மகாராஜின் எழுச்சியூட்டும் வரலாற்றை எளிய மற்றும் பயனுள்ள பாணியில் மாணவர்களுக்கு முன்வைக்க ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சத்ரபதி சிவாஜி மகாராஜின் வாழ்க்கை வரலாறும் சாதனைகளும் மகாராஷ்டிரா முழுவதற்கும் நாட்டிற்கும் ஒரு உத்வேகத்தின் ஆதாரமாகக் கருதப்படுகின்றன. இப்பாடநூல் சத்ரபதி சிவாஜி மகாராஜின் ஆளுமையில் பல்வேறு எழுச்சியூட்டும் சம்பவங்களை வழங்கியுள்ளது. இப்பாடநூல் தொடர்பாக பல்வேறு சமூக அமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் மற்றும் ஆலோசனைகளை குழு முறையாக ஆய்வு செய்து, தற்போதைய பாடநூலை மீண்டும் எழுதியுள்ளது. மேலும், தேவைப்படும் இடங்களில் சில பொருத்தமான திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

பாடப்நூலை முடிந்தவரை பிழையற்றதாகவும் மிக உயர்ந்த தரத்திலும் உருவாக்குவதற்காக, மகாராஷ்டிராவைச் சேர்ந்த சில கல்வியாளர்கள் மற்றும் பாட வல்லுநர்களால் இப்பாடநூல் மதிப்பாய்வு செய்யப்பட்டது. பெறப்பட்ட ஆலோசனைகளும் கருத்துக்களும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு, இப்பாடநூலின் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. வரலாற்றுப் பாடக் குழு, ஓவியர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் கடின உழைப்புடனும் இப்பாடநூலை தயாரித்துள்ளனர். வாரியம் அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இப்பாடநூலை மீண்டும் வரவேற்பார்கள் என்று நம்பப்படுகிறது.

புனே:

**தேதி:** 1 மே 2026

**இந்திய சூரிய ஆண்டு:**
**வைசாக் ஷு. 11, ஷாக் 1948,**
**மகராஷ்டிர தினம்**

**(அனுராதா ஓக்)**
இயக்குநர்
மகாராஷ்டிர மாநில பாடநூலாக்கம்
மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம்,
புனே.

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம்,** இந்திய நாட்டினை
**இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச்**
**சார்பின்மையும் மக்களாட்சி முறையும்** அமைந்ததொரு
குடியரசாக நிறுவவும்,
அதன் குடிமக்கள் அனைவரும் சமுதாய,
பொருளியல், அரசியல் **நீதி,** எண்ணம், அதன்
வெளியீடு, கோட்பாடு, சமய நம்பிக்கை, வழிபாடு
இவற்றில் **தன்னுரிமை,** சமுதாயப்படிநிலை,
வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை** ஆகியவற்றை
எய்திடச் செய்யவும், அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும் உள்ளார்ந்த
உறுதியுடையராய்,
**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர்
இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால் இந்த**
**அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே**
**வழங்கிக்கொள்கிறோம்.**

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

பகுதி 4A

# குடிமகனின் அடிப்படைக் கடமைகள்

பிரிவு **51A**

**அடிப்படைக் கடமைகள் - ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் உரிய கடமைகள் பின்வருமாறு-**

a) அரசியலமைப்புக்குக் கீழ்ப்படிந்து அதன் நோக்கங்களையும், ஸ்தாபனங்களையும் மதிப்பதுடன் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்து நடத்தல்;
b) நமது சுதந்திரப் போராட்டத்திற்குத் தூண்டுகோலாக அமைந்த உன்னதமான நோக்கங்களைப் பேணிக்காத்து பின்பற்றி நடத்தல்;
c) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்தல்;
d) நாட்டைக் காப்பதுடன், தேவையானபோது நாட்டு நலப்பணிகளையும் செய்தல்;
e) சமய, மொழி, வட்டார, பிரிவினை வேறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய மக்கள் அனைவரிடையேயும் சகோதர உணர்வையும் நல்லிணக்கத்தையும் வளர்த்தல்; பெண்களின் கண்ணியத்தைக் குறைக்கின்ற செயல்களை விட்டொழித்தல்;
f) பல்வேறு கூறுகளுடைய நமது பண்பாட்டின் வளமான பாரம்பரியத்தை மதித்துப் போற்றிக் காத்தல்;
g) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கைச் சூழலை மேம்படுத்திப் பாதுகாத்தல், உயிரினங்களிடையே பரிவுடன் இருத்தல்;
h) அறிவியல் மனப்பாங்கு, மனிதாபிமானம், ஆராய்ச்சி உணர்வு, சீர்திருத்த மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்தல்;
i) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல்; வன்முறையை விட்டொழித்தல்;
j) தொடர்ச்சியாக நம் நாடு தன்னுடைய முயற்சியில் பல முன்னேற்றங்களைக் காணவும் சாதனைகளைப் படைக்கவும் தனிமனித மற்றும் கூட்டு முயற்சிகள் அனைத்திலும் திறமையை வளர்க்கப் பாடுபடுதல்;
k) 6 முதல் 14 - வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை பெற்றோர்களும், காப்பாளர்களும் வழங்கவேண்டும்.

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன்.

இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

## राज्यगीत

जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।धृ।।

भिती न आम्हा तुझी मुळी ही गडगडणाऱ्या नभा
अस्मानाच्या सुलतानीला जबाब देती जिभा
सह्याद्रीचा सिंह गर्जतो शिव शंभू राजा
दरी दरीतून नाद गुंजला महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा ।।१।।

काळ्या छातीवरी कोरली, अभिमानाची लेणी
पोलादी मनगटे खेळती, खेळ जीवघेणी
दारिद्र्याच्या उन्हात शिजला
निढळाच्या घामाने भिजला
देश गौरवासाठी झिजला
दिल्लीचे ही तख्त राखितो, महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा, गर्जा महाराष्ट्र माझा
जय जय महाराष्ट्र माझा ।।२।।

| கற்றலில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கற்றல்-கற்பித்தல் செயல்முறைகள் | கற்றல் விளைவுகள் |
|---|---|
| **அனைத்து மாணவர்களும் குழுவாகவோ/இணையாகவோ/ தனியாகவோ செயல்ககளைச் செய்வதற்கு வாய்ப்புகள் வழங்கி கீழ்காண்பவற்றை ஊக்குவிக்க வேண்டும்.**<br>• குடும்பத்தின் பெரியவர்கள்/ உறுப்பினர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் வினாக்கள் வினவுதல். எவ்வாறெனில், குடும்பத்தில் சிலர் ஒன்றிணைந்து வாழ்கின்றனர் எனில், சிலர் தொலைவில் வாழ்கின்றனர் என்பதை உரையாடல் மூலம் புரிந்து கொள்ளுதல், தொலைவில் வசிக்கும் உறவினர், நண்பர்களுடன் கலந்துரையாடுதல் மூலம் அவர்களின் வீடுகள், போக்குவரத்து வசதிகள் மற்றும் அவ்விடத்து மக்களின் வாழ்க்கைமுறை பற்றி அறிதல்.<br>• பயம் மற்றும் தயக்கமின்றி, அனுபவங்கள் பற்றிய வினாக்களை உருவாக்குதல் மற்றும் எடுத்துரைத்தல்.<br>• பெற்றோர்/பொறுப்பாளர்/பாட்டி-தாத்தா, அண்டை வீட்டு பெரியவர்களுடன் கலந்துரையாடி அவர்கள் தங்கள் வாழ்நாளில், கடந்த காலத்தில் மற்றும் தற்காலத்தில் அன்றாடம் பயன்பாட்டிலுள்ள பொருள்கள் எ.கா. உடைகள், பாத்திரங்கள், வேலைகளின் இயல்பு, விளையாட்டுகள், சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளை ஒப்பீடு செய்தல்.<br>• சிவாஜியின் வாழ்க்கை வரலாற்றில் நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் பாத்திரம் ஏற்று நடித்தல்.<br>• குழு விவாதத்தின் மூலம் பொறுமை, விடாமுயற்சி மற்றும் சூழ்நிலை விழிப்புணர்வு ஆகியவற்றின் உதவியுடன் நெருக்கடியை எவ்வாறு சமாளிக்கலாம் என்பதைக் கண்டறிதல்.<br>• சிவாஜி வரலாற்றிலுள்ள எடுத்துக்காட்டுகளிலிருந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, சமத்துவம், நீதி போன்றவை குறித்த விழிப்புணர்வை வளர்த்தல்.<br>• வீட்டில், பள்ளியில், சமூகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல்வேறு கலாச்சார/ தேசிய/ சுற்றுச்சூழல் திருவிழாக்கள்/பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றல். எ.கா. காலை நேர அல்லது சிறப்புக் கூட்டம்/ கண்காட்சி/ தீபாவளி/ ஓணம்/ புவிநாள்/ ஈத் போன்ற விழாக்களில் நடனம், நாடகம், நடிப்பு, படைப்பாற்றலுள்ள எழுத்து அல்லது செயல்களைச் செய்தல். (எ.கா. விளக்குகள்/வண்ணக் கோலங்கள்/ பட்டம் செய்தல், கட்டட மாதிரி, ஆற்றின் மீதுள்ள பாலங்களின் மாதிரியை உருவாக்குதல் முதலியன.) கதைகள், பாடல்கள், விளம்பர முழக்கங்கள், நிகழ்ச்சி அறிக்கை, படைப்பாற்றலுள்ள எழுத்து அல்லது செயலை வழங்குதல்.<br>• பாடநூலுடன் பிற வளங்களையும் வாசித்தல்/கண்டறிதல், அதாவது செய்தித்தாள் கத்தரிப்புகள், கேட்டல் உபகரணங்கள்/ கதைகள்/ பாடல்கள்/படங்கள்/ படத் தொடர்கள்/ தொடுதல் மூலம் உணரக்கூடிய இலக்கியங்கள், இணையம்/நூலகம் இவற்றிற்கு இணையான வேறு வளங்கள்.<br>• பாரம்பரிய மற்றும் நவீன உடைகளுக்கிடையேயான வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளுதல்.<br>• மாநிலத்திலுள்ள மொழிகள், பேச்சு வழக்குகள், திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல். | **கற்போர் –**<br>04.95B.013 பெரிய குடும்பதிலுள்ள உறுப்பினர்களின் ஒருவருக்கொருவருடனான உறவு முறைகளை அடையாளம் காணுதல்.<br>04.95B.023 இடங்களை உற்றுநோக்கி/ அனுபவித்த பிரச் னைகள் குறித்து தங்கள் சொந்த கருத்துகளைக் கூறுதல். (எ.கா. ஒரே மாதிரி/ பாகுபாடு/ குழந்தை உரிமை).<br>04.95B.03 குழுவில் ஒன்றாக வேலை செய்யும்போது ஒருவருக்கொருவர் அக்கறை, சக உணர்வு, தலைமைப்பண்பு ஆகியவற்றில் தன்னூக்கம் மற்றும் சுறுசுறுப்புடன் பங்கேற்றல். எ.கா. உள்ளரங்க / வெளியரங்க / உள்ளூர் / சமகால செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுகள். மேலும், தாவரங்களைப் பராமரித்தல், விலங்குகள், பறவைகளுக்கு உணவளித்தல், சுற்றுப்புறத்திலுள்ள பொருள்கள் / பெரியவர்கள் / மாற்றுத் திறனாளிகளுக்காக செயல்திட்டங்கள் செய்தல்/ தமது பங்கை அளித்தல்.<br>04.95B.04 சத்ரபதி சிவாஜி மகாராஜ் ஆளுமையில் உள்ள பல்வேறு தூண்டுதல்களை ஏற்படுத்தும் நிகழ்வுகளைக் கூறுதல்.<br>04.95B.05 புத்திசாலித்தனம், வீரம், விவேகமுடன் நெருக்கடியை சமாளிக்கும் திறனைப் பெறுதல். இதனை சிவாஜி வரலாற்றின் மூலம் கற்றல்.<br>04.95B.06 புவியியல் மற்றும் கலாச்சார காரணங்களால் உடையில் காணப்படும் பல வகைகளைக் கூறுதல். |

# பொருளடக்கம்


| வரிசை எண் | பாடத் தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1. | சிவாஜிக்கு முன் மகாராஷ்டிரம் | 1 |
| 2. | திருத்தொண்டர்களின் பங்களிப்பு | 3 |
| 3. | மராத்தியப் படைத் தளபதிகள்; புகழ்மிக்க போஸ்லே குடும்பம் | 8 |
| 4. | சிவாஜியின் குழந்தைப் பருவம் | 12 |
| 5. | சிவாஜியின் கல்வி | 17 |
| 6. | சுயராஜ்யத்தை நிறுவுவதற்கான உறுதிமொழி | 21 |
| 7. | சுயராஜ்யம்: முதல் வெற்றி | 25 |
| 8. | உள்நாட்டுப் பகைவர்களை அடக்குதல் | 29 |
| 9. | வரலாற்றில் பிரதாப்காட் | 32 |
| 10. | வீரத்துடன் காக்கப்பட்ட கோட்கணவாய் | 37 |
| 11. | செயிஷ்டகானின் படுதோல்வி | 42 |
| 12. | புரந்தர் முற்றுகை மற்றும் உடன்படிக்கை | 45 |
| 13. | பேரரசரிடமிருந்து சிவாஜி தப்பித்துக் கொள்ளல் | 50 |
| 14. | கோட்டை மீண்டது; ஆனால் சிங்கம் மாண்டது | 53 |
| 15. | மறக்க முடியாத விழா | 57 |
| 16. | தென்னகப் படையெடுப்பு | 60 |
| 17. | கோட்டைகள் மற்றும் கடற்படைகளின் மேலாண்மை | 65 |
| 18. | மக்கள் நலனுக்கான சுயராஜ்யத்தின் நிர்வாகம் | 70 |



**முகப்புப்பக்க படம் உதவி** - பேராசிரியர். பிர. கே. கானேகர்

‘சிவாஜி மகாராஷ்டிராவிற்கு மட்டுமின்றி இந்திய நாடு முழுமைக்கும் சொந்தமானவர். சிவாஜி தனக்காக ஒரு பேரரசை அமைத்துக் கொள்ள வேண்டும் எனும் பேராசை உடையவரல்லர். பண்டைக்காலத் தத்துவ அறிஞர்கள் கற்பித்த அரசியல் நெறிகள் அவரை ஒரு நாட்டுப் பற்றுடையவராக உருவாக்கியது. அக்கால அரசுகளில் நடைமுறையிலிருந்து வந்த நிர்வாக அமைப்பின் நிறை குறைகளைக் கற்று, அதன் மூலம் தான்பெற்ற அறிவினை விளக்காகக் கொண்டு, தனது கொள்கைகளையும் நிர்வாக அமைப்பையும் ஒளிபெறச் செய்தார். இந்து சமயத்தவரான அவர் பிற சமயத்தவரையும் மதித்தார். புனித வழிபாட்டு இடங்களைப் பாதுகாக்கப் பல அற நிலையங்களை நிறுவினார். இந்திய வரலாற்றிலுள்ள சிறந்த படைத்தலைவர்களுள் இவரும் ஒருவர் என்பதில் ஐயமில்லை. தனது கடற்கரைப் பகுதிகளைக் பாதுகாப்பதன் தேவையை உணர்ந்து கப்பற்படை ஒன்றை உருவாக்கி ஆங்கிலேயரையும், டச்சுக்காரரையும் எதிர்த்துப் போராடினார். கி.பி. 1656 இல் கட்டப்பெற்ற அவரது போர்த் பிரதாப்காட் கோட்டை திறனுக்கு நினைவுச் சின்னமாய் இன்றும் நம்மிடையேத் திகழ்கிறது. பெருமைக்குரிய சிவாஜி, பல நற்பண்புகளின் சின்னம். குறிப்பாகத் தனது நாட்டின் மீது மிகுந்த அன்பு கொண்டவர்.’

**-ஜவஹர்லால் நேரு**



**இவ்வோவியம் சிவாஜி காலத்து ஓவியர் மீர் முகமதுவால் வரையப்பட்டது.**

(பாரீசு அருங்காட்சியகத்திலிருந்து எடுக்கப்பட்ட நகல்)

# 1. சிவாஜிக்கு முன் மகாராஷ்டிரம்

மாமன்னர் சிவாஜி ஒரு மாமனிதர் ஆவார். அவரது பிறந்த நாள் விழாவை ஆண்டுதோறும் மிகுந்த ஆடம்பரத்துடனும் மரியாதையுடனும் கொண்டாடுகிறோம். குழந்தைகளான உங்களுக்கு அது ஒரு மகிழ்ச்சியான நாள் ஆகும். அவரது புகழ் கூறும் பாடல்களையும் கதைப் பாடல்களையும் நீங்கள் பாடுகிறீர்கள்.அவரது படத்திற்கு மாலை சூட்டுகிறீர்கள். மாமன்னர் சிவாஜிக்கு வெற்றி ! என்று உரக்கக் கூறுகிறீர்கள். யார் இந்த மாமன்னர் சிவாஜி? அவர் என்ன அரும்பணி செய்தார்?

மாமன்னர் சிவாஜி வாழ்ந்த காலம் வரலாற்றின் இடைக்காலம் ஆகும். அந்நாட்களில் எல்லா இடங்களிலும் ஏகாதிபத்திய ஆட்சி அல்லது மன்னராட்சி வழக்கத்தில் இருந்தது. பல அரசர்கள் தங்கள் குடிமக்கள் நலனில் அக்கறை செலுத்தவில்லை. தங்கள் மனம் போன போக்கில் சென்றனர். மகிழ்ச்சி நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால் அந்த நாட்களிலும் கூட சில அரசர்கள் தங்கள் குடிமக்கள் நலனைக் கவனித்துப் பாதுகாத்தனர்.

மாமன்னர் சிவாஜி மகாராஷ்டிராவில் சுயராஜ்யத்தை ஏற்படுத்தினார். சுயராஜ்யம் என்பது தன்னாட்சி, அதாவது நமது சொந்த ஆட்சி ஆகும். மாமன்னர் சிவாஜிக்கு முன் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளாக மகாராஷ்டிரா விடுதலையின்றி இருந்தது. அதனுடைய பெரும் பகுதி அஹில்யாநகர் (அகமதுநகர்) நிஜாம்ஷா மற்றும் பிஜப்பூர் அடில்ஷா ஆகியோரின் ஆளுகையின் கீழ் இருந்தது. இந்த இரு சுல்தான்களும் மகாராஷ்டிராவை தங்களிடையே பிரித்துக் கொண்டனர். அவர்கள் தரும சிந்தனை அற்றவர்களாக இருந்தனர் தாங்கள் ஆண்ட பகுதிகளிலுள்ள மக்களைக் கொடுமைப் படுத்தினர். ஒருவருக்கொருவர் பரம விரோதிகளாகவும் இருந்தனர். எப்பொழுதும் ஒருவர் மற்றவரோடு சண்டை போட்டு வந்தனர். அதன் விளைவாக மக்கள் துன்புறுத்தப்பட்டு அலைகழிக்கப்பட்டனர். மக்களுக்கு உண்ண போதிய உணவு கிடைக்கவில்லை. அவர்களால் திருவிழாக்களைக் கொண்டாட முடியவில்லை. அவர்களது தெய்வங்களை வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் வழிபடமுடியாதநிலை ஏற்பட்டது. தங்களது சொந்த வீடுகளில் கூட பாதுகாப்பு இன்றி இருக்கவேண்டியிருந்தது. எங்கும் அநீதி நிலவியது. மகாராஷ்டிராவில் வத்தன்தார்களைப் போல தேஷ்முக்குகளும் தேஷ்பாண்டேக்களும் சொந்த ஜாகீர்களை உடையவர்களாக இருந்தனர். அவர்கள் தங்கள் ஜாகீர்கள் மீது மட்டுமே நாட்டம் கொண்டிருந்தனர். நாட்டை நேசிக்கவில்லை. அவர்களுக்கு இடையேயான இடைவிடாத சண்டை மக்களுக்குப் பெருந்துயரை விளைவித்தது. எங்கும் கொடுங்கோல் ஆட்சி நிலவியது. இதனால் மக்கள் சலிப்படைத்தனர். மகிழ்ச்சி இழந்து காணப்பட்டனர்.

மாமன்னர் சிவாஜி இவை அனைத்தையும் கண்டார். அவர் மகாராஷ்டிராவில் மக்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் சுயராஜ்யத்தை உருவாக்கும் உயரிய பணியை மேற்கொண்டார். அவர் முதலில் தங்களிடையே சண்டையிட்டுக் கொண்டிருந்த வத்தன்தார்களை தனது அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்தார். சுயராஜ்யத்தை உருவாக்கும் தனதுதிட்டத்தில்அவர்களையும்பயன்படுத்தினார். மக்களைக் கொடுமைப்படுத்திய சக்திகளை எதிர்த்தும் போரிட்டார். அவர்களைத் தோற்கடித்தார். நீதி, நியாயம் மற்றும் சமத்துவம் அடிப்படையில் இந்தவி சுயராஜ்யத்தை நிறுவினார். மாமன்னர் சிவாஜி இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஒற்றுமையை உருவாக்கினார். அனைத்து மதத் துறவிகளையும் மதித்தார்.மாமன்னரின் இந்த உயரிய பணிகளில் இருந்து நாம் எழுச்சியூட்டப்படுகிறோம்.

மாமன்னர் சிவாஜிக்கு முன் ஏறக்குறைய முன்னூறு முதல் நானூறு ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தில் மகாராஷ்டிராவில் பல திருத்தொண்டர்கள் பிறந்தனர். இத்திருத்தொண்டர்களின் தொண்டு சிவாஜியின் சுயராஜ்ய முயற்சிக்கு மிகவும் உதவியது. இத்தொண்டர்களின் பணி பற்றி அடுத்த பாடத்தில் காண்போம்.

**1. பொருத்தமான வார்த்தையைத் தேர்ந்தெடுத்து கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(அ) மாமன்னர் சிவாஜி வாழ்ந்த காலம் வரலாற்றின்............ ஆகும். (பழங்காலம், இடைக்காலம், தற்காலம்)

(ஆ) சிவாஜி சுயராஜ்யத்தை ........................ இல் நிறுவினார். (மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம்)

**2. சோடிகளை இணைக்கவும்.**

| | (அ) | | (ஆ) |
|---|---|---|---|
| (அ) | அஹில்யாநகர் சுல்தான் | (1) | அடில்ஷா |
| (ஆ) | பிஜப்பூர் சுல்தான் | (2) | நிஜாம்ஷா |
| | | (3) | குதுப்ஷா |

**3. ஒரே வாக்கியத்தில் விடை எழுதுக.**

(அ) மாமன்னர் சிவாஜி மேற்கொண்ட உயரிய பணி யாது?

(ஆ) மாமன்னர் சிவாஜி யாருடன் போரிட்டார்?

**4. குழுவில் பொருந்தாதவற்றைக் கண்டுபிடித்து எழுதுக.**

(அ) சுயராஜ்யம், அடிமைத்தனம், விடுதலை

(ஆ) மக்கள், குடிமக்கள், அரசன்

**செயல்**

(அ) சிவாஜி ஜெயந்தி விழாவை உங்களது வகுப்பறையில் கொண்டாடுக.

(ஆ) உங்களது பள்ளியில் நடைபெறும் பண்பாட்டு கலாச்சார நிகழ்ச்சியில் வரலாற்றுப் பாடல்கள் மற்றும் கதைப்பாடல்களைப் பாடுக.



# 2. திருத்தொண்டர்களின் பங்களிப்பு

மகாராஷ்டிராவில் திருத்தொண்டர்களின் பரம்பரையானது ஸ்ரீசக்ரதர் சுவாமி திருத்தொண்டர்கள் நாம்தேவ், ஞானேஷ்வர், சோக்கா மேளா ஆகியோரோடு தொடங்கியது. இவர்களைத் தொடர்ந்து சமூகத்தின் பல பிரிவுகளிலிருந்து திருத்தொண்டர்கள் கோரோபா, சாவத்தா, நர்ஹரி ஏக்நாத், சேக் மகமது, துக்காராம், நிளோபா ஆகியோர் வந்தனர். அதுபோலவே, துறவிகள் ஜனாபாய், சோய்ராபாய், நிர்மலாபாய், முக்தாபாய், கானோபாத்ரா மற்றும் பஹிணாபாய் சிவுர்கர் போன்றோரும் இக்குழுவில் அடங்குவர்.

அவர்கள் மக்களுக்கு இரக்கம், அகிம்சை, ஈகை, சேவை,சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்ற பல நற்பண்புகளைப் போதித்தனர். எவரும் தாழ்ந்தவரும் அல்லர்; உயர்ந்தவரும் அல்லர்; அனைவரும் சமம் என்னும் இத்தகைய உணர்வு திருத்தொண்டர்களால் மக்கள் மனதில் உருவாக்கப்பட்டது. அதுபோலவே, சமர்த்த ராம்தாஸ் மகாராஷ்டிராவில் சமூக விழிப்பணர்வு பணியைச் செய்தார்.

**ஸ்ரீ சக்ரதர் சுவாமி :** ஸ்ரீசக்ரதர் சுவாமி குஜராத்திலுள்ள ஓர் இளவரசர் ஆவார். இவர் துறவு மேற்கொண்டு மகாராஷ்டிராவுக்கு வந்தார். மகாராஷ்டிரா முழுவதும் சென்று சமத்துவத்தைப் போதித்தார். ஆண், பெண் வேற்றுமை மற்றும் சாதி அடிப்படையிலான எந்த ஒரு பாகுபாட்டையும் இவர் நம்பவில்லை. எனவே, அநேக ஆண்களும், பெண்களும் இவரது சீடர்கள் ஆயினர். இவர் ஏற்படுத்திய மதப்பிரிவு 'மகானுபாவ் பந்த்' ஆகும். இவருடைய வாழ்வில் மறக்கமுடியாத நிகழ்வுகள் 'லீலாசரித்ரா' என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன.

**திருத்தொண்டர்நாம்தேவ்:** திருத்தொண்டர் நாம்தேவ் விட்டலின் சிறந்த பக்தன் ஆவார். இவர் நரசி கிராமத்தில் வாழ்ந்தார். கடவுளைப் புகழ்ந்து பல்வேறு பக்திப் பாடல்களை



ஸ்ரீசக்ரதர் சுவாமி



திருத்தொண்டர் நாம்தேவ்

இயற்றினார். கீர்த்தனைகளைப் பாடினார். மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். மகாராஷ்டிரா முழுவதும் சென்று 'பகவத் தர்மத்தை' பரப்பினார். கடவுளிடத்தில் ஆழ்ந்த பக்தி கொள்ளுமாறு போதித்தார். தங்களுடைய மதத்தைப் பாதுகாக்கும் ஆசையை உட்புகுத்தினார். பின்னர் இவர் இந்தியா முழுவதும் சென்று மனிதநேயத்தைப் பரப்பினார். பஞ்சாப்பிற்கு சென்று அங்குள்ள மக்களுக்கு சமத்துவத்தைப் பரப்பினார். இந்தியில் பாடல்கள் இயற்றினார். இவரது சில பாடல் வரிகள் இன்றும் சீக்கியர்களின் புனித நூலான 'குருகிரந்தசாகிப்பில்' இடம் பெற்றுள்ளன. இவரது பாடல்கள் இன்றும் மகாராஷ்டிரா முழுவதும் பெரும் பக்தியுடன் பாடப்படுகின்றன.

### திருத்தொண்டர் ஞானேஷ்வர்:

திருத்தொண்டர் ஞானேஷ்வர் ஆபேகாவில் வாழ்ந்தார். நிவ்ருத்திநாத் மற்றும் சோபான்தேவ் ஆகியோர் இவரின் சகோதரர்கள் ஆவர். இவரின் சகோதரி முக்தாபாயி ஆவார். அக்காலத்தில் குறுகிய நோக்கம் கொண்ட மனிதர்கள் இக்குழந்தைகளை ஏளனமாகப் பார்த்தனர். ஏனெனில் இவர்கள் ஒரு துறவியின் குழந்தைகள் ஆவர். இவர்களின் தந்தை துறவு பூண்டு உலக வாழ்க்கையில் இருந்து விலகி வீட்டை விட்டு வெளியேறினார். பின்னர், அவருடைய குருவின் கட்டளைக்குப் பணிந்து வீட்டுக்குத் திரும்பினார். தன் மனைவியுடன் சேர்ந்து வாழ்ந்தார். இவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்தன. ஒரு துறவிக்கு குழந்தைகள் இருப்பதைக் குறுகிய எண்ணம் கொண்ட மதத் தலைவர்கள் தவறாக கருதினர். எனவே, மக்கள் இக்குழந்தைகளை துன்புறுத்தினர். பொது சமூகத்திலிருந்து விரட்டினர்.

ஒரு சமயம் ஞானேஷ்வர் பிச்சை எடுக்க வீதிவீதியாகச் சென்றார். ஆனால் ஒருவரும் அவருக்குப் பிச்சை இடவில்லை. பதிலாக, அவர் இழிவான வார்த்தைகளைக் கேட்க வேண்டியதாயிற்று. இந்நிகழ்ச்சியால் ஞானேஷ்வர் பெருந்துயர் அடைந்தார். தன் குடிலுக்குச் சென்று கதவை உட்புறமாகத் தாழிட்டார். தனது விதியை எண்ணி வருந்தினார். முக்தாபாய் வந்து கதவைத் தட்டினார். ''ஞானேஷ்வரா, கதவைத் திற'' என்று கூறினாள். ''நாம் நமது சொந்த துக்கத்தில் எப்படி இருக்க முடியும்? பின்பு, நாட்டின் பொதுநலனை யார் கவனிப்பர்?'' என்ற சகோதரியின் வார்த்தைகள் ஞானேஷ்வருக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுத்தது. அவர்தனது சொந்த துக்கத்தை மறந்தார். தனது பணியைத் தொடங்கினார். எல்லா இடங்களிலும் ஏழை மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மதத்தின் பெயரால் துன்புறுத்தப்பட்டனர். ஞானேஷ்வர் அவர்களிடம் சென்று கடவுள் மேல் நம்பிக்கை கொள்ளுமாறு போதித்தார். எல்லோரையும் சமமாக நடத்துங்கள். துன்பத்தில் இருப்போருக்கு உதவுங்கள். அவர்கள் துயரத்தைப் போக்குங்கள் என்பதே ஞானேஷ்வரின் சுருக்கமான அறிவுரை ஆகும். இவை கடந்த எழுநூறு ஆண்டுகளாக மூலை முடுக்குகள் எல்லாம் ஒலித்த வண்ணம் இருக்கின்றன.

அந்நாட்களில் எல்லா மத போதனைகளும் சமஸ்கிருத மொழியில் இருந்தன. சாதாரண மக்களின் மொழி மராத்தி ஆகும். எனவே, இவர் தனது பிரபலமான ''ஞானேஷ்வரி'' புத்தகத்தை மராத்தி மொழியில் எழுதினார். இவ்வாறு அவர் செல்லும் இடங்களில் எல்லாம் அறிவுக்



**திருத்தொண்டர் ஞானேஷ்வர்**

கண்களைத் திறந்தார். சகோதரத்துவத்தைப் போதித்தார். ஞானேஷ்வர் தனது இளம் வயதில் புனேவிற்கு அருகில் உள்ள ஆலந்தியில் உயிரோடு சமாதி ஆனார். இன்றும் கூட, ஆசாட் மற்றும் கார்த்திகை மாதங்களின் பதினோராவது நாளில் இலட்சக்கணக்கான புனிதப் பயணிகள் பக்தியோடு ஆலந்தி- பண்டரி செல்கின்றனர்.

எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துமாறு மக்களைத் தூண்டினார். தான் போதித்தவற்றை அவரும் கடைப்பிடித்து ஒழுகினார்.

ஒரு நாள் அவர் கோதாவரி ஆற்றுக்குக் குளிப்பதற்காகச் சென்றார். அது மிகவும் வெப்பமான நண்பகல் நேரம். ஆற்றின் கரையில் உள்ள மணற்பரப்பு மிகவும் சூடாக இருந்தது. அதில் அமர்ந்து இருந்த ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்டார். அங்கு விரைந்தார். அதன் பெற்றோரை சுற்றிலும் தேடினார். பின்னர் அக்குழந்தையை கைகளில் ஏந்தி, அதன் கண்ணீரைத் துடைத்து, அதன் வீட்டில் சேர்த்தார். இவ்வாறு தனது சுய உதாரணத்தின் மூலம் அன்பு, மற்றும் சமத்துவத்தை மக்கள் மனதில் பதியச் செய்தார்.



திருத்தொண்டர் ஏக்நாத்

### திருத்தொண்டர் ஏக்நாத்:

திருத்தொண்டர்கள் நாம்தேவ் மற்றும் ஞானேஷ்வர் தொடங்கிய பணியை திருத்தொண்டர் ஏக்நாத் தொடர்ந்தார். இவர் பைதானில் வாழ்ந்தார். பக்தி மார்க்கத்தைப் போதித்தார். பல பக்திப் பாடல்களான துதிப்பாடல்கள், வெண்பாக்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவற்றை எழுதினார். மக்களிடையே உயர்வு, தாழ்வு என்ற எந்தவித பாகுபாடும் பார்க்கக் கூடாது என்று அறிவுரை செய்தார். ஏழை மற்றும் கடைநிலை மக்களிடம் நட்பு கொண்டு தெய்வ பக்தியை அவர்களுக்குப் போதித்தார். அவரது அன்பு வாயில்லா ஜீவன்கள் மீதும் இருந்தது.

### திருத்தொண்டர் துக்காராம்:

சிவாஜி மகாராஜாவின காலத்தில் துக்காராம் மற்றும் ராம்தாஸ் ஆகிய இரு பெரும் திருத்தொண்டர்கள் வாழ்ந்தனர். துக்காராம் புனேக்கு அருகிலுள்ள தெகு கிராமத்தைச் சேர்ந்தவர். இவருக்குச் செ ாந்தமாக ஒரு பண்ணையும் மளிகைக் கடையும் இருந்தது. இவரது முன்னோர்கள் மக்களுக்கு



திருத்தொண்டர் துக்காராம்

கடனாக பணத்தைக் கொடுத்து வந்தனர். ஆனால் துக்காராம் தன்னிடம் இருந்த அனைத்து கடன் காகிதப் பதிவுகளையும் இந்திராயனி ஆற்றில் அமிழ்த்தி அழித்தார். இவ்வாறு பலரை கடன் தொல்லையிலிருந்து விடுவித்தார். இவர் அருகிலுள்ள குன்றுக்குச் சென்று, விட்டல் கடவுளை வாழ்த்திப் பாடுவார். ஆஷாட் மற்றும் கார்த்திகை மாதங்களில் இவர் பண்டர்பூர் செல்வார். அங்கு இவர் கீர்த்தனைகளைப் பாடுவார். மற்றும் துதிப்பாடல்களை இயற்றி மக்களுக்கு அவற்றைப் பாடியும் காட்டுவார். இவரது பாடல்களைக் கேட்க பல ஆயிரம் மக்கள் கூடினர். மாமன்னர் சிவாஜி கூட இவரது கீர்த்தனைகளைக் கேட்க வருகை தந்தார். திருத்தொண்டர் துக்காராம் இரக்கம், மன்னிப்பு மற்றும் மன அமைதி ஆகிய நற்பண்புகளைப் போதித்தார். சமத்துவம் பற்றிய செய்திகளை அளித்தார். ‘‘எவன் ஒருவன் நலிவுற்ற மற்றும் கொடுமையாய் நடத்தப்பட்ட மக்களைத் தனது சொந்த மக்களாக நடத்துகிறானோ அவனே திருத்தொண்டன் ஆவான் என்றார். மேலும், கடவுள் அவனிடமே வசிக்கிறார்’’ என்ற உண்மையை மக்கள் மனதில் பதியச் செய்தார். மக்கள் இவரை ஒரு சிறந்த மதத் தலைவராக ஏற்று வாழ்த்திப் போற்றினர். இன்றும் கூட மகாராஷ்டிரா முழுவதும் இந்த திருத்தொண்டர்களை ‘க்யான்பா-துக்காராம்’ என்று போற்றுகின்றனர். ஞானேஷ்வர் ’க்யான்பா’ என்று அழைக்கப்படுகிறார். மகாராஷ்டிராவின் ஒவ்வொரு வீட்டிலும் இன்று கூட ’துக்காராம் கதைகள்’ படிக்கப்படுகின்றது.

**சமர்த்த ராம்தாஸ்:** அதே காலத்தில் திருத்தொண்டர் இராமதாஸின் ’ஜெய் ஜெய் ரகுவீர் சமர்த்த’ என்ற முழக்கம் மகாராஷ்டிராவின் பள்ளத்தாக்குகளிலும் குன்றுகளிலும், எதிரொலித்தது. ராம்தாஸ் மராத்வாடாவில் உள்ள கோதாவரி நதிக்கரையில் அமைந்த ‘ஜாம்ப்’ என்ற கிராமத்தில் ‘இராம நவமி’ அன்று பிறந்தார். இவரது இயற்பெயர் நாராயணன் ஆகும். ஆனால், இவர் தனது பெயரை இராமனின் அடியார் என்று பொருள்பட ‘ராமதாஸ்’ என்று



**சமர்த்த ராம்தாஸ்**

மாற்றினார்.தனது ’தஸ்போத்’ புத்தகத்தின்மூலம் நல்வாழ்க்கைக்கான வழிகளை, மக்களுக்கு கற்பித்தார். இவரது ‘மனாட்சே சுலோக்’ மூலம் மக்களுக்கு நற்சிந்தனை மற்றும் நன்னடத்தையைப் பற்றி கற்பித்தார். மக்கள் வலிமையைப்போற்ற மக்களுக்குவலிமையுள்ள கடவுளான அனுமான் கோயில்களைக் கட்டினார். மக்களை வலிமையாக இருக்க வற்புறுத்தினார். ஒன்றுபட்ட மக்களிடமே ச க்தி குடியிருக்கிறது என்று கூறினார். மக்கலை தங்களுக்குள் ஒருங்கிணைந்து அநீதிக்கு எதிராகப் போராடக் கற்பித்தார். அது அக்கால மக்களுக்குத் துணிவைக் கொடுத்தது.

திருத்தொண்டர்களின் சேவையினால் மக்களிடையே விழிப்புணர்வு பெருகியது. மதத்தைப் பற்றி மக்கள் மனதில் தன்னம்பிக்கை ஏற்பட்டது. திருத்தொண்டர்களால் மக்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்ச்சி சிவாஜி மகாராஜாவின் சுயராஜ்யப் போராட்டத்திற்கு உதவியாக இருந்தது.

## சுயகற்றல்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

(அ) திருத்தொண்டர் நாம்தேவ் .......... இன் சிறந்த பக்தன் ஆவார்.

(ஆ) ஞானேஷ்வர் தனது இளம் வயதில் புனேக்கு அருகிலுள்ள ............ இல் உயிரோடு சமாதி அடைந்தார்.

(இ) திருத்தொண்டர் துக்காராம்.............
ஆற்றில் தன்னிடம் இருந்த கடன் காகிதப்பதிவுகளை அமிழ்த்தினார்.

(ஈ) மக்களின் வலிமையைப் போற்ற சமர்த்த ராம்தாஸ்............................. கோயில்களைக் கட்டினார்.

## 2. ஒரு வாக்கியத்தில் விடைகளை எழுதுக.

(அ) எந்த பாகுபாட்டை திருத்தொண்டர் ஸ்ரீ சக்ரதார் நம்பவில்லை?

(ஆ) திருத்தொண்டர் நாம்தேவ் எந்த ஆசையை மக்கள் மனதில் புகுத்தினார்?

(இ) திருத்தொண்டர் ஏக்நாத் மக்களுக்குக் கூறிய அறிவுரை யாது?

(ஈ) சமர்த்த ராமதாஸால் மக்களுக்கு தெரியப்படுத்தப்பட்ட செய்தி யாது?

## 3. மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் விடை தருக.

(அ) திருத்தொண்டர் ஞானேஷ்வர் குடிலுக்குள் சென்று கதவை உட்புறமாகத் தானே தாழிட்டுக் கொண்டது ஏன்?

(ஆ) திருத்தொண்டர் துக்காரம் அளித்த போதனைகள் யாவை?

## செயல்

இப்பாடத்தில் சேர்க்கப்படாத மற்ற திருத்தொண்டர்களின் படங்களை சேகரித்து, அவர்களது போதனைகளை எழுதவும்.

# 3. மராத்திய படைத் தளபதிகள்- புகழ்மிக்க போஸ்லே குடும்பம்.

**குழப்பமான காலம் :** மக்கள் மனதில் திருதொண்டர்கள் கடவுள் பக்தியைப் போதித்தது போல மராத்தா தளபதிகள் வீரப் பரம்பரைக்கு வித்திட்டனர்.

அக்காலம் பெருங்குழப்பமான காலம் ஆகும். பிஜப்பூர் அடில்ஷா மற்றும் அஹில்யாநகர் நிஜாம்ஷா ஆகிய இரு சுல்தான்களும் இடைவிடாது தங்களுக்குள் போரிட்டு வந்தனர். இப்போர்களில் அவர்கள் மராத்திய தளபதிகளின் படைகளைப் பயன்படுத்தினர்.

**வீர மராத்திய படைத் தளபதிகள்:** மராத்தியர்கள் தைரியமும் மன உறுதியும் உடையவர்கள். அவர்கள் பயமற்றவர்களாகவும் தங்கள் தலைவருக்கு உண்மையானவர்களாகவும் இருந்தனர். போர்க்களத்தில் தங்களுடைய சாதனைகளைப் பற்றி மிகவும் பெருமிதம் கொண்டனர். குதிரைப்படையில் மராத்தா வீரங்ள் கையில் ஈட்டியுடனும் இடுப்பில் வாளுடனும் தளபதியுடன் செல்வர். எல்லா மராத்திய படைத் தளபதிகளும் தங்களுக்கென சொந்தமாக தனிப் படைகளை வைத்திருந்தனர். இப்படிப்பட்ட ஒரு படைத்தளபதி தன் படையுடன் சுல்தானிடம் சென்றால் சுல்தான் அவருக்கு வேலை கொடுப்பார். அவர் தனது ராஜ்யத்தின் படைத்தலைவர் ஆக்கப்படுவார். சில நேரங்களில் அவருக்கு ஜாகீரைக் கூட கொடுப்பதுண்டு. அப்படி ஜாகீரைப் பெற்ற அப்படைத் தளபதி தன்னை ஒரு அரசராகவே கருதிக் கொள்வார்.

அஹில்யாநகர் மற்றும் பிஜப்பூர் சுல்தான்களிடம் பல புகழ் பெற்ற மராத்திய படைத் தளபதிகள் இருந்தனர். அவர்களில் அதிகமாகப் புகழ் பெற்றவர்கள் சிந்த்கேட்டின் ஜாதவர்கள், பால்டனின் நிம்பால்கர்கள், முதோலின் கோர்படேக்கள், ஜாவலியின் மோரேக்கள், வெரூலின் போஸ்லேக்கள் போன்றோர் ஆவர். சிந்த்கேட்டின் ஜாதவர்கள், தேவ்கிரி யாதவ்களின் மரபு வழிவந்தவர்கள் ஆவர். மாமன்னர் சிவாஜியின் அன்னையாகிய ஜீஜாபாய் சிந்த்கேட்டின் லக்குஜிராவ் ஜாதவின் மகள் ஆவார்.

**வீரப்பரம்பரை:** இந்தப் படைத்தளபதிகள் அனைவரும் வீரமானவர்கள். ஆனால் அவர்களில் பலர் ஒருவருக்கொருவர் ஜென்ம விரோதிகளாக இருந்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் சொந்த மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று ஒருபோதும் நினைத்தது இல்லை. அவர்களது வீரமும் துணிவும் அடுத்தவர் நன்மைக்கே பயன்பட்டது. இருப்பினும் அவர்கள் தங்களிடையே குறிப்பாக இளைஞர்கள் இடையே போர் புரியும் ஆர்வத்தை வளர்த்தனர். அவர்களுடைய குடும்பத்தில் வீரமரபைத் துடிப்பாகக் கொண்ட பல வீரர்கள் தோன்றினர். இத்தகைய பிரபலமான குடும்பங்களுக்கு இடையே வெரூலின் போஸ்லேக்கள் பெரும் வீர, தீர செயல்களைச்செய்து வந்தனர்.

**குருஷ்னேஷ்வர் கோயில்:** ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வெரூல் குகைகளுக்கு அருகில் குருஷ்னேஷ்வர் கோயில் ஒன்று இருந்தது. அக்கோயில் சிறிது சிறிதாக உடைந்து விழத் தொடங்கியது. சுவர்களில் பிளவுகள் தோன்றி அவை பெரிதாகத் தொடங்கின. கோயில் குரு கூட கோயிலைக் கைவிட்டுவிட்டு ஓடி விட்டார். பெருங்கடவுளின் மரியாதைக்குரிய சின்னமான அக்கோயில் மொத்தத்தில் கவனிக்கப்படாமல் அலட்சியப் படுத்தப்பட்டது. அங்கே வந்த பக்தர்கள் அனைவரும் கோயிலின் பரிதாப நிலையைக் கண்டு துக்கம் அடைந்தனர். ஆனால் யாருக்கும் அதனைப் பழுது பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழவில்லை.

ஒரு பெரும் சிவனடியார் இக்கோயிலுக்கு வழக்கமாக வந்து சென்றார். அவர் அங்குள்ள லிங்கத்தின் மீது மலர்களைத் தூவி அன்றாடம் வழிபட்டு வந்தார். தனது ஆழ்ந்த எண்ணங்களைக் கடவுளிடம் கூறுவார். அக்கோயிலையும் பழுதுபார்த்து அதனைப் பழைய நிலைக்கு கொண்டு வந்தார்.



சகாஜி ராஜே

கோயிலைப் பராமரிக்கத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்தார். இப்போது அக்கோயிலின் உள்ளும் புறமும் விளக்கு ஏற்றப்பட்டன. அக்கோயில் தான் இழந்த தோற்றப் பொலிவை மீண்டும் பெற்றது. இதை எல்லாம் செய்த பக்தன் மாலோஜி ராஜே போஸ்லே ஆவார்.

**வெரூலின் போஸ்லேக்கள்:** சிறந்த சிவபக்தரான மாலோஜி ராஜே போஸ்லே வெரூலின் பாட்டீல் ஆவார். பாபாஜி ராஜேவிற்கு இரு புதல்வர்கள் இருந்தனர். மாலோஜி ராஜே மூத்தவர் ஆவார். விட்டோஜி ராஜே இளையவர் ஆவார். பாபாஜிராஜே போஸ்லே வெரூல் கிராமத்தின் பாட்டீல் உரிமைகளைப் பெற்றிருந்தார்.

மாலோஜியும் விட்டோஜியும் வீர தீரச் செயல் புரிபவர்களாக திகழ்ந்தனர். அவர்களிடம் ஏராளமான ஆயுதம் தாங்கிய மராத்தியப் படைகள் இருந்தன. அது ஒரு குழப்பமான காலம். டெல்லியில் இருந்து மொகலாயப் பேரரசர், நிஜாம்ஷாவின் ஆட்சிப் பகுதியை தாக்கினார். அப்போது தௌலதாபாத் நிஜாம்ஷாவின் தலைநகராக இருந்தது. அவரது முதல் அமைச்சராக (வசீராக) மாலிக் ஆம்பர் இருந்தார். மாலிக் ஆம்பர் திறமையும் நுண்ணறிவும் மிக்கவர். இந்த இரு சகோதரர்களும் மாலிக் ஆம்பரின் கவனத்தை ஈர்த்தனர். அவருடைய பரிந்துரைப்படி மாலோஜி ராஜேவிற்கு நிஜாம்ஷா புனே, சுபே, பர்கானாக்களின் ஜாகீரை அளித்தார்.

இதனால், போஸ்லேக்கள் செல்வமும் வலிமையும் மிக்கவர்களாயினர். மாலோஜி ராஜேவின் மனைவி உமாபாய் ஆவார். இவர் பால்டனின் நிம்பல்கர் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்களுக்கு சகாஜி, சரிப்ஜி என இரு புதல்வர்கள் இருந்தனர். இந்தாப்பூரில் நடந்த போரில் மாலோஜி ராஜே கொல்லப்பட்டார். அந்நேரம் சகாஜிக்கு ஐந்து வயது தான் ஆகியிருந்து. எனவே விட்டோஜி ராஜே குழந்தைகளையும் ஜாகீரையும் கவனிக்க வேண்டியதாயிற்று. பின்னர் சகாஜிக்கு மணமுடிக்க எண்ணி லக்குஜிராவ் ஜாதவின் மகளைப் பெண் கேட்டார். லக்குஜிராவ் ஜாதவின் மகளான ஜீஜாபாய் கடவுள் அருள் பெற்றவராக இருந்தார். விட்டோஜி ராஜேவின் திருமணப் பேச்சை லக்குஜிராவ் ஏற்றுக் கொண்டார். லக்குஜிராவ், நிஜாம்ஷா அவையில் இருந்த துணிவும் வீரமும் மிக்க ஒரு படைத் தளபதி ஆவார். அவர் தனக்குச் சொந்தமாக ஒரு பெரும் படையை வைத்திருந்தார். அவருக்கு நிஜாம்ஷா அவையில் பெரும் புகழும் மரியாதையும் இருந்தது. அவர் சகாஜி ராஜே மற்றும் ஜீஜாபாய் திருமணத்தை மிக ஆடம்பரமாக நடத்தினார். ஜீஜாபாய் போஸ்லே குடும்பத்தின் அதிர்ஷ்ட தேவதை ஆனார்.

**சகாஜி ராஜே:** நிஜாம்ஷா மாலோஜி ராஜேவிற்கு அளித்திருந்த ஜாகீரை சகாஜி ராஜேவிற்கு மாற்றினார். வீரமும் திறமையும் மிக்க சகாஜி ராஜேவிற்கு நிஜாம்ஷாவின் அவையில் பெரும் மரியாதை இருந்தது. மொகலாயப் பேரரசர் நிஜாம்ஷாவின் ராஜ்யத்தை கைப்பற்ற முடிவு செய்தார். இதற்காக அவர் பிஜப்பூர் அடில்ஷாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்தார். மாலிக் ஆம்பரும், சகாஜி ராஜேவும் நிஜாம்ஷாவைக் காப்பாற்ற வீரமுடன் போரிட்டனர். அவர்களின் இரு படைகளையும் இவர்கள் தோற்கடித்தனர். இந்தப் போர் அஷில்யாநகருக்கு அருகில் உள்ள பாத்வாடியில் நடந்தது. இப்போரில் சரிப்ஜி கொல்லப்பட்டார். சகாஜி வீரத்தளபதி எனப் புகழப்பட்டார். அவரது புகழ் மாலிக் ஆம்பரும் பொறாமை கொள்ளும் அளவுக்கு அவையில் உயர்ந்தது. இது படிப்படியாக அவர்களிடையே பகைமையை உருவாக்கியது. இதன் காரணமாக சகாஜி ராஜே நிஜாம்ஷாவை விட்டு விலகி பிஜப்பூர் அடில்ஷா அவையில் சேர்ந்தார். அடில்ஷா அவரை ‘சர்லாஷ்கர்’ (படைத் தலைவர்) என்ற பட்டம் அளித்து பெருமைப் படுத்தினார். பின்னர் நிஜாம்ஷா அவையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. முதல் அமைச்சர் மாலிக் ஆம்பர் இறந்தார். அவரது மகனான பத்தேகான் நிஜாம்ஷாவின் முதலைமச்சர் ஆனார். அவரது காலத்தில் நிஜாம் ஷா ஆட்சி வீழ்ச்சியுறத் தொடங்கியது. அதே வேளையில் மொகலாய ஆக்கிரமிப்புக்கான அச்சுறுத்தல் அங்கே இருந்தது. எனவே, நிஜாம்ஷாவின் அன்னை சகாஜி ராஜேயிடம் நிஜாம்ஷாவின் ராஜ்யத்தைக் காக்கும்படி வேண்டுகோள் விடுத்தார். எனவே சகாஜி ராஜே அடில்ஷாவை விட்டு நிஜாம்ஷாவிடம் திரும்ப வந்தார்.

**1. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக:**

(அ) பிரபலமான குடும்பங்களுக்கு இடையே வெரூலின் ........... பெரும் வீர, தீரச் செயல்களைச் செய்து காட்டினர். (மோரேக்கள், கோர்படேக்கள், போஸ்லேக்கள்)

(ஆ) பாபாஜி ராஜே போஸ்லேவுக்கு மாலோஜி மற்றும் ........ என இரு புதல்வர்கள் இருந்தனர். (விட்டோஜி, சகாஜி, சரிப்ஜி)

(இ) நிஜாம்ஷாவின் திறமை வாய்ந்த முதலமைச்சராக ........... இருந்தார். (மாலிக் ஆம்பர், பத்தேகான்,சரிப்ஜி)

**2. இருவருக்கும் இடையே உள்ள உறவை எழுதுக.**

(அ) மாலோஜி ராஜே - விட்டோஜி ராஜே ................

(ஆ) சகாஜி ராஜே - லக்குஜிராவ் ஜாதவ் ...........

(இ) சகாஜி ராஜே - சரிப்ஜி...................

(ஈ) பாபாஜி ராஜே - விட்டோஜி ராஜே.................

**3. சோடிகளைப் பொருத்துக.**

| 'அ' | | 'ஆ' | |
|---|---|---|---|
| (அ) | சிந்த்கேட் | (1) | நிம்பால்கர் |
| (ஆ) | பால்டன் | (2) | கோர்படே |
| (இ) | ஜாவலி | (3) | போஸ்லே |
| (ஈ) | முதோல் | (4) | மோரே |
| | | (5) | ஜாதவ் |

**4. ஒரே சொல்லில் விடை தருக.**

(அ) குருஷ்னேஷ்வர் கோயிலை அதன் பழைய நிலைக்குக் கொண்டு வந்தவர் யார்?

(ஆ) நிஜாம்ஷா, மாலோஜி ராஜேவிற்கு அளித்த ஜாகீர் எது?

(இ) நிஜாம்ஷாவைக் காப்பாற்ற வீரமுடன் போரிட்டவர் யாவர்?

(ஈ) அடில்ஷா, சகாஜி ராஜேவிற்கு எந்தப் பட்டத்தை அளித்து பெருமைப் படுத்தினார்?

(உ) சகாஜி ராஜே அடில்ஷாவிடமிருந்து நிஜாம்ஷாவிடம் திரும்பி வந்தது ஏன்?

**செயல்:**

மகாராஷ்டிரா நிலப்படத்தில் அஹில்யாநகர், பால்டன் வெரூல், சுபே, மற்றும் புனே ஆகிய இடங்களைக் குறிக்கவும்.

**குறிப்பு :** இங்கே 'மராத்தா' என்ற சொல் எந்த ஒரு தனிப்பட்ட நபரின் குறிப்பிட்ட சாதியைக் குறித்து பொருள் தருவதில்லை. அது மராத்தி மொழி பேசும் மக்கள் அல்லது மராட்டியர்கள் என்று பொருள்படுகிறது.

# 4. சிவாஜியின் குழந்தைப்பருவம்



**மாமன்னர் சிவாஜி பிறந்த சிவனேரிக் கோட்டை**

**சிவாஜியின் பிறப்பு :** அந்நாட்கள் மிகவும் நிம்மதியற்றதாக இருந்தன. ஷாஜஹான் தக்காணத்தை வெற்றி கொள்ள வடக்கிலிருந்து ஒரு பெரும் படையை அனுப்பியிருந்தார். பிஜப்பூர் அடில்ஷாவால் சகாஜி ராஜே ஜாகீரின் முக்கிய நகரமான புனே தரைமட்டம் ஆக்கப்பட்டது. சகாஜி ராஜே பெருந்தொல்லைக்கு உள்ளானார். செய்வது அறியாது இருதலைக் கொள்ளி எறும்பாகத் திகைத்தார்.

ஜீஜாபாய் கருவுற்று இருந்தார். அவர் எந்த இடத்தில் இருந்தால் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் இருப்பார் என்ற பெருங்கேள்வி சகாஜி ராஜேவை வருத்தியது. அப்போது சிவனேரிக் கோட்டை அவரது நினைவிற்கு வந்தது. ஜீஜாபாயை அங்கு அனுப்ப முடிவு செய்தார். சிவனேரிக் கோட்டை புனே மாவட்டத்தில் உள்ள ஜுன்னாருக்கு அருகில் அமைந்த ஒரு பலமான கோட்டை ஆகும். அது நாற்புறமும் செங்குத்தான குன்றுகளாலும் பலமான அரண்களாலும் கனத்த பெரிய கதவுகளாலும் ஆனது. போஸ்லேக்களின் உறவினரான விஜயராஜின் பொறுப்பில் அக்கோட்டை இருந்தது. அவர் ஜீஜாபாய்க்குப்

பாதுகாப்பு கொடுக்க சம்மதித்தார். எனவே, சகாஜி ராஜே ஜீஜாபாயை அவரிடம் ஒப்படைத்து விட்டு மொகலாயர்களுக்கு எதிராகக் கிளம்பினார்.

அந்தப் பொன்னாள் புலர்ந்தது. சக ஆண்டு 1551 இல் அதாவது 1630 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19 ஆம் நாள், சிவனேரியிலுள்ள முரசுக் கொட்டகையில் பேரிகை நாதஸ்வரம், போன்ற இசைக்கருவிகள் ஒலித்துக் கொண்டிருந்த மங்களகரமான வேளையில் ஜீஜாபாய் ஓர் அழகான ஆண் குழந்தையை ஈன்றெடுத்தார். கோட்டையில் இருந்த அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர். குழந்தை பிறந்த பன்னிரெண்டாம் நாள், அதற்குரிய பெயர் சூட்டுவிழா நடைபெற்றது. சிவனேரிக் கோட்டையில் குழந்தை பிறந்ததால் 'சிவாஜி' எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர்.

**சிவாஜியின் குழந்தைப் பருவம் :** சிவாஜியின் முதல் ஆறு ஆண்டுகால வாழ்க்கை மிகவும் வேகமாக ஓடியது. இந்த காலகட்டத்திலும் ஜீஜாபாய் சிவாஜிக்குச் சிறந்த கல்வியைப் புகட்டினார். அவர் ஒவ்வொரு மாலையும் வீட்டு விளக்கை ஏற்றி வைத்து சிவாஜியைத் தன்னருகே அழைத்து அன்போடு ராமன், கிருஷ்ணன், பீமன் மற்றும் அபிமன்யூ ஆகியோரின் கதைகளைக் கூறுவார். இவற்றைப் போன்று சுவாமி நாம்தேவ், சுவாமி ஞானேஷ்வர், சுாவமி ஏக்நாத் போன்றோர்களின் பக்திப் பாடல்களையும் பாடிக் காட்டுவார். வரலாற்றுப் புகழ் பெற்றவர்களின் வீர தீரச் செயல்களைக் கேட்க சிவாஜி மிகவும் ஆர்வமாக இருந்தார். அவர்களைப் போலவே தானும் வளர்ந்த பின் வீரசாகசம் செய்து காட்ட வேண்டும் என எண்ணினார். ஜீஜாபாய் வழக்கமாக சிவாஜிக்குப் பக்திமான்கள் மற்றும் திருத்தொண்டர்கள் கதைகளைக் கூறுவார். அது அவருக்கு திருத்தொண்டர்கள் மற்றும் பெரியவர்களிடம் பக்தியோடும் மரியாதையோடும் நடக்கும் பண்புகளை உருவாக்கியது.

ஏழைமாவளக் குடும்பத்துக் குழந்தைகள் சிவாஜியுடன் விளையாட வந்தனர். சில நேரங்களில் சிவாஜி அவர்களின் குடில்களுக்குச்



**அன்னை ஜீஜாபாய் வீர மனிதர்களின் கதைகளை சிவாஜிக்குக் கூறுகிறார்**



**நண்பர்களுடன் சிவாஜி**

சென்று எளிய உணவாகிய வெங்காயம், ரொட்டி ஆகியவற்றை மிகுந்த விருப்பத்துடன் உண்டார். பொழுதுபோக்கிற்காக அவர்கள் வேடிக்கை விளையாட்டுகளை விளையாடினர். மாவளக் குழந்தைகள் காட்டிலுள்ள பறவைகளைப் போல் சுதந்திரமாக இருந்தனர். அவர்கள் குயில், கிளி, புலி போன்று ஒலிகளை எழுப்பினர். மண்ணால் சிறிய கோட்டைகளைக் கட்டுதல், யானைகள் மற்றும் குதிரைகளைச் செய்தல் போன்றவை அவர்களது பொழுதுபோக்காக இருந்தது. கண்ணாமூச்சி விளையாட்டு, பந்தாட்டம், பம்பரம் விடுதல் போன்றவை அவர்களது அன்றாட விளையாட்டுகளாயின. சிவாஜியும் அந்தக் குழந்தைகளுடன் சேர்ந்து எல்லா விளையாட்டுகளையும் விளையாடுவார். சிவாஜியை மாவளக் குழந்தைகள் மிகவும் அதிகமாக விரும்பினார்.

**மொகலாயர்களை நோக்கி சகாஜி ராஜே :** சகாஜி ராஜே நிஜாம்ஷாவிடம் பாதுகாப்பாகத் திரும்பினார். ஆனால் அவருக்கு அங்கே அமைதி கிடைக்கவில்லை. நிஜாம்ஷா திடமான மனநிலை இல்லாதவராக இருந்தார். எனவே, எல்லா விதமான வீண்பேச்சுகளையும் உடனுக்குடன் நம்பினார். இதனால் பல ரகசிய திட்டங்களும் பூசல்களும் அவையில் எழும்பின. நிஜாம்ஷாவின் தூண்டுதலால் லக்குஜிராவ் ஜாதவ் வெளிப்படையாகவே அவையில் வைத்து கொல்லப்பட்டார். இதை சகாஜி ராஜேவால் தடுக்க இயலவில்லை. அதனால் மிகுந்த கோபமுற்ற சகாஜி ராஜே நிஜாம்ஷாவை விட்டு விலகி மொகலாயர்களுடன் சேர்ந்தார். மொகலாயப் பேரரசர் ஷாஜகான் தனது அரசின் படைத் தளபதியாக சகாஜி ராஜேவை நியமித்தார்.

அதே நேரத்தில் மறைமுகமாக மொகலாயர்களுடன் கைகோர்த்த பத்தேகான் நிஜாம்ஷாவைக் கொன்றார். இதனால் நாடு முழுவதும் அமைதியற்ற சூழ்நிலை உருவானது. நிஜாம்ஷாவின் பகுதிகளை மொகலாயர்கள் கைப்பற்ற பத்தேகான் தீட்டிய

சதி அம்பலமானது. அதற்குக் கைமாறாக மொகலாயர்கள் பத்தேகானுக்கு கட்டுப்பாட்டில் சகாஜி ராஜேவின் உள்ள பகுதியைக் கொடுத்தனர். அதனால் சகாஜி ராஜே மிகுந்த கோபமுற்றார். மொகலாயர்களிடம் பணியாற்றுவதிலிருந்து விலகினார். தனது முழு பலத்தையும் பயன்படுத்தி, அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட தீர்மானித்தார்.

**புதிய நிஜாம்ஷா ஆட்சியை ஏற்படுத்துதல்:** மொகலாயப்பேரரசர் மற்றும் முதலமைச்சர் செயல்களை பத்தேகான் ஆகியோரது முடக்க சகாஜி ராஜே நினைத்தார். ஜுன்னார் அருகிலுள்ள பெம்கிரி கோட்டையில் உள்ள நிஜாம்ஷா குடும்பத்தில் இருந்து ஒரு குழந்தையை வாரிசாகத் தேர்ந்தெடுத்து அவரை புதிய நிஜாம்ஷாவாக அறிவித்தார். கோதாவரி, நீரா, ஆகிய நதிகளுக்கு இடையே உள்ள பகுதியை உள்ளடக்கிய முற்றிலும் புதிய அரசை ஏற்படுத்தினார். இந்தப் புதிய அரசைக் காப்பாற்ற மிகுந்த வீரத்துடன் போரிட்டார். ஆரம்பத்தில் இம்முயற்சியில் அடில்ஷா அவருடன் இருந்தார்.

ஆனால் பின்னர் மொகலாயப் பேரரசர் ஷாஜகான் தெற்கே சகாஜி ராஜேவை நோக்கி படையுடன் முன்னேறி, அடில்ஷாவைப் பயமுறுத்தினார். அப்போது அடில்ஷா அவருடன் சேர்ந்து சகாஜிக்கு எதிராக ஒரு நட்பு உடன்படிக்கையில் கையொப்பம் இட்டார்.

சகாஜி ராஜே தற்போது மொகலாய அடில்ஷாவின் கூட்டுப் படைகளை எதிர்த்து கொரில்லா போர் முறையைப் பயன்படுத்தி போரிட்டார். ஆனால் அவரால் தனித்து நின்று போரில் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எனவே விருப்பமின்றி 1636-ஆம் ஆண்டு மொகலாயர்களிடம் ஓர் அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டார். அன்றைய காலசூழ்நிலை அவருக்கு சாதகமாக இல்லாததால் அவரால் தனது சொந்த ராஜ்யத்தை அமைக்க முடியவில்லை. ஆனால் அவரது துணிச்சல் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கொழுந்து விட்டு எரியச் செய்தது. இது சில ஆண்டுகளுக்குப் பின் சிவாஜி சுயராஜ்யத்தை ஏற்படுத்த உதவியாக இருந்தது.

**கர்நாடகத்தில் ஜீஜாபாயும் சிவாஜியும்:** சகாஜி ராஜே நிறுவிய நிஜாம்ஷா ஆட்சி வீழ்ச்சியுற்றது. அதன் பகுதிகளை மொகலாயர்களும் அடில்ஷாவும் பிரித்துக் கொண்டனர். அடில்ஷாவின் பங்கில் சகாஜி ராஜேயின் ஜாகீரிலுள்ள புனேயும் சுபேயும் வந்தது. அவர் தனது சார்பாக சகாஜிக்கு அவற்றைக் கொடுத்தார். இப்போது சகாஜி, அடில்ஷாவுடன் சேர்ந்தார். அடில்ஷா சகாஜியிடம் புனேயிலிருந்து வெகுதொலைவில் அமைந்த கர்நாடகாவில் உள்ள பகுதிகளைக் கைப்பற்றும் பொறுப்பினைக் கொடுத்தார். கர்நாடகாவிற்கு சகாஜி சென்ற சில நாட்களில் அவருடன் ஜீஜாபாயும், சிவாஜியும் சேர்ந்து கொண்டனர்.

மகாராஷ்டிராவில் சிவாஜியின் குழந்தைப் பருவம் நெருக்கடியாக இருந்தது. ஜீஜாபாயும் அவரும் அடிக்கடி ஒரு கோட்டையிலிருந்து வேறு ஒரு கோட்டைக்குச் செல்ல வேண்டியிருந்தது. அந்நேரம் இளம் சிவாஜி தனது தந்தையின் வீரதீரச் செயல்களைப் பற்றிக் கேட்பது வழக்கம். கர்நாடகா சென்ற

**1. கோடிட்ட இடங்களில் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக:**

(அ) சிவாஜி ......... கோட்டையில் பிறந்தார். (புரந்தர், சிவனேரி, பன்ஹாலா)

(ஆ) அடில்ஷா ........... பகுதியில் உள்ள பிரதேசங்களை வெற்றி கொள்ளும் பணியை சகாஜி ராஜேவிடம் அளித்தார். (கர்நாடகா, காந்தேஷ், கொங்கண்)

**2. ஒரே வாக்கியத்தில் விடை எழுதுக.**

(அ) ஜீஜாபாயின் போதனையால் சிவாஜியின் மனதில் என்னென்ன எண்ணங்கள் தோன்றின?

(ஆ) சிவாஜி மாவளக் குழந்தைகளுடன் என்னென்ன விளையாட்டுகளை விளையாடினார்?

(இ) சகாஜி ராஜே நிஜாம்ஷாவை விட்டு ஏன் விலகினார்?

**3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக.**

(அ) ஜீஜாபாய் யார் யாருடைய கதைகளை சிவாஜிக்குக் கூறினார்?

(ஆ) நிஜாம்ஷா குடும்பத்திலிருந்து வந்த குழந்தை வாரிசை சகாஜி ராஜே புதிய நிஜாம்ஷா என்று அறிவித்தது ஏன்?

**செயல்**

(அ) சிவனேரிக் கோட்டையைச் சுற்றிப் பார்த்து அதில் சிவாஜியின் பிறப்பிடம் பற்றிய செய்திகளைச் சேகரி.

(ஆ) நீ விளையாடும் விளையாட்டுகளின் பாரம்பரிய பெயர்களை எழுதுக. அதில் ஏதேனும் ஒரு விளையாட்டைப் பற்றி பத்து வாக்கியங்கள் எழுதுக.



சிவனேரிக் கோட்டை முதன்மை நுழைவாயில்.

# 5. சிவாஜியின் கல்வி

**சிவாஜியின் கல்வி ஆரம்பம்:** சகாஜி ராஜே ஒரு சமஸ்கிருத கல்விமானாக இருந்தார். பெங்களூர் அவையில் தனது ஆதரவின் கீழ்க் கலைஞர்களையும் பன்மொழிப் பண்டிதர்களையும் வைத்திருந்தார். சிவாஜிக்காக நுண்ணறிவு மிக்க ஆசிரியர்களை நியமித்தார். சிவாஜியின் கல்வி ஏழு வயது ஆனபோது தொடங்கியது. குறுகிய காலத்தில் சிவாஜி படித்தல் மற்றும் எழுதுதல் கலைகளில் மிகத் தேர்ந்தவர் ஆனார். தாமாகவே இராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை ஆகியவற்றில் உள்ள கதைகளைப் படிக்கத் தொடங்கினார். அவருக்கு போர்க்கலையைப் பயிற்றுவிக்க சகாஜி ராஜே சில ஆசிரியர்களை நியமித்து இருந்தார். அவர்கள் அவருக்கு குதிரை ஏற்றம், மற்போர், வாள் வீச்சு மற்றும் கத்திச் சண்டை ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்தனர். இவ்வாறு தனது பன்னிரெண்டாம் வயதில் சிவாஜி கல்வி அறிவின் பல்வேறு பிரிவுகளிலும் கலைகளிலும் திறன் பெற்றவர் ஆனார்.

இந்த சூழ்நிலையில் அடில்ஷா கர்நாடகாவிலுள்ள நாயக்கர்கள் (உள்ளூர்த் தலைவர்கள்) ராஜ்யத்தின் மீது படையெடுக்க சகாஜி ராஜேவை அனுப்பினார். போருக்குச் செல்லும் முன் சகாஜி ராஜே சிவாஜியையும் ஜீஜாபாயையும் புனேவிற்கு அனுப்பினார். அவர்களோடு யானைகள். குதிரைகள், காலாட்படை, கஜானா, கொடி ஆகியவற்றோடு நம்பிக்கைக்கு உரிய அமைச்சர்கள், வீரத்தளபதிகள் மற்றும் புகழ்பெற்ற ஆசிரியர்கள் ஆகியோரையும் அனுப்பினார்.



**சகாஜி ராஜேவின் மேற்பார்வையின் கீழ் சிவாஜியின் கல்வி.**

**புனே மீண்டும் பொலிவு பெறல் :** ஜீஜாபாயும் சிவாஜியும் புனேவிற்கு வந்தனர். சிவாஜி தான் சிவனேரியில் கழித்த குழந்தைப் பருவ நாள்களை மீண்டும் நினைத்துப் பார்த்தார். சயாத்திரி மலையின் உயரமான சிகரங்களைத் திரும்பவும் பார்த்ததும் மகிழ்ச்சி கொண்டார். அப்போது புனே ஒரு பெரிய நகரமாக இல்லை. அது மொத்தமாக சகாஜி ராஜேவின் எதிரிகளால் பாழ்படுத்தப்பட்டு இருந்தது. சொத்துக்கள் சேதம் அடைந்திருந்தன. வீடுகள் இடிக்கப்பட்டிருந்தன. கோயில்கள் இடிந்து விழுந்திருந்தன. பயமுற்ற மக்கள் தங்களது கிராமத்தை விட்டு தப்பி ஓடி விட்டனர். வயல் வெளிகள் வளமற்றுப் போயிருந்தன. காடுகள் அடர்ந்து வளர்ந்திருந்தன. கிராமப் புறங்களில் ஓநாய்கள் சுற்றி அலைந்தன. இவ்வாறு புனே மொத்தமாக பொலிவற்ற தோற்றத்தோடு பாழ்பட்டுக் கிடந்தது.

சிவாஜியுடன் ஜீஜாபாய் புனேவிற்கு வந்திருப்பதை அறிந்த சுற்றுப்புற மக்கள் துணிவடைந்தனர். ஜீஜாபாய் அவர்கள் அனைவரையும் அழைத்து புனேயில் நீங்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்று நம்பிக்கை அளித்தார். அதனால் மக்கள் புனேயில் குடியேறத் தொடங்கினர். தங்களது நிலங்களில் பயிரிட்டனர். ஜீஜாபாய் பாழடைந்த கோவில்களை மீட்டுருவாக்கம் செய்தார். காலையிலும் மாலையிலும் கோவில்களில் வழிபாடு தொடங்கியது. நகரம் மீண்டும் சுறுசுறுப்புடனும் பொலிவுடனும் காணப்பட்டது. இவ்வாறு புனே முற்றிலுமாக மாறியது.

**தாதாஜி கொண்டதேவின் சாதனைகள்:** ஜீஜாபாயும் சிவாஜியும் கர்நாடகாவில் இருந்த போது தாதாஜி கொண்டதேவ் புனே ஜாகீரைக் கவனித்து வந்தார். அவர் கொண்டானாவின் சுபேதாராகவும் இருந்தார். தனது பணியில் உண்மை, கண்டிப்பு, திறமை, நேர்மை மற்றும் ராஜ பக்தி உடையவராக இருந்தார். மேலும் கண்டிப்பான ஒழுங்குமுறையை நிலைநாட்டுபவராகவும் இருந்தார். ஏறக்குறைய இக்காலத்தில் சகாஜி ராஜேவின் உத்தரவுப்படி புனேயில் ஒரு பெரிய வசிப்பிடம் (வாடா) கட்டப்பட்டது. அது லால்மஹால் என்று அழைக்கப்பட்டது. தாதாஜி உழவர்களை ஊக்குவிக்க எண்ணினார். எனவே, சில ஆண்டுகளுக்கு நில வரியில் சலுகைகளை அளித்தார். கிராமப்புறங்களில் உழவர்களைத் துன்புறுத்திய ஓநாய்களை அழிப்பவர்களுக்குப் பரிசுகள் அளித்தார். இதனால் ஏராளமான ஓநாய்கள் கொல்லப்பட்டன. கிராமப் புறங்களில் சுற்றித் திரிந்த கள்வர் கூட்டங்களில் இருந்து உயிரையும் சொத்துகளையும் காப்பாற்ற ஊர்காவலர் படையை உருவாக்கினார். மண்ணின் வளத்திற்கு ஏற்ப நிலவரியை நிர்ணயம் செய்தார். இவ்வாறு மக்களை மகிழ்ச்சி அடையச் செய்தார். வேளாண் சீர்திருத்தம் மற்றும் வரிவசூலிப்பு துறைகளில் தாதாஜி கொண்டதேவ் மற்றும் வசீர் மாலிக் அம்பரின் பணி மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

**சிவாஜியின் கல்வி:** சிவாஜியின் கல்வி, புனேயில், ஜீஜாபாயின் மேற்பார்வையின் கீழ்த் தொடர்ந்தது. ஜீஜாபாயும் சிவாஜியும் பெங்களூரில் இருந்து திரும்பும்போது அவர்களுடன் திறமை வாய்ந்த ஆசிரியர்களையும் சகாஜி ராஜே அனுப்பி வைத்தார். அவர்கள் அவருக்கு பல்வேறு சாஸ்திரங்களையும் கல்வியறிவின்பல பிரிவுகளையும் பிற மொழிகளையும் கற்பித்தனர்.

சிவாஜி சிறந்த ஆட்சி பற்றிய அறிவு, போர் தந்திரங்கள், கோட்டை நிர்மாணக்கலை, குதிரைகள், யானை யானைகள் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்தல், கடினமான எதிரிகளின் பகுதிகளில் இருந்து தப்பித்துச் செல்லும் வழிகள் மற்றும் பல கல்விகளைப் பெற்றார். கல்வியில் சிவாஜியின் முன்னேற்றம் ஜீஜாபாயை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்தது.

**வீர அன்னை ஜீஜாபாய் சிவாஜிக்குக் கற்பித்தவை :** ஜீஜாபாய் ஒரு சாதாரணப் பெண் அல்ல. அவர் பலமிக்க படைத்தளபதி லக்குஜிராவ் ஜாதவின் மகளும் வீரமிக்க சகாஜி ராஜேவின் மனைவியும் ஆவார். அவர் குழந்தைப் பருவத்திலிருந்தே அரசியல் மற்றும் போர் பற்றிய அறிவினை பரம்பரை மூலமாகப் பெற்றிருந்தார்.

அவர் புகழ் வாய்ந்த ஜாதவ் மற்றும் போஸ்லே குடும்பங்களின் பரம்பரை போர் திறமையின் சங்கமத்திற்குச் சான்றாக விளங்கினார். இவர் பெருமிதத்துடன் சுதந்திர வேட்கை உடையவராகவும் இருந்தார். மராத்திய படைத் தளபதிகள் எவ்வளவு வீரத்தைக் காட்டினாலும் அவை சுல்தான்களின் அவையில் போற்றப்படுவது இல்லை என்ற கசப்பான அனுபவத்தை அவர் அறிவார். நிஜாம்ஷாவின் தூண்டுதலின் பேரில் தனது தந்தை அரசவையில் கொல்லப்பட்ட அதிர்ச்சியை அவர் துணிவுடன் எதிர் கொண்டிருந்தார். தனது மகன் சிவாஜி ஒரு போதும் அடுத்தவர்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது என்று தீர்மானித்து இருந்தார். சிவாஜி தனது சொந்த மக்களின் ஆட்சியான சுயராஜ்யத்தை நிறுவ வேண்டும் என்னும் குறிக்கோளை அவரிடம் வளர்த்து வந்தார்.

மாவளப் பகுதியில் வாழ்ந்த மக்கள் மாவளர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் உண்மை, உழைப்பு, துரித நடை ஆகியவற்றை உடையவர்கள் ஆவர். சுலபமாக யாரும் அவர்களை விஞ்ச முடியாது. ஆனால், அவர்கள் சுல்தான்களின் ஆட்சியில் துன்புறுத்தப்பட்டனர். சுல்தான்களின் படைகள் அவர்களுடைய கிராமங்களைச் சூறையாடின. மக்களைத் தங்கள் வசிப்பிடங்களை கைவிட்டுவிட்டுத் தப்பியோடக் கட்டாயப்படுத்தின. எவரும் மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தவில்லை. துன்புற்ற இந்த ஏழை மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று சிவாஜி விரும்பினார்.

வீடு திரும்பியதும் சிவாஜி இதைப் பற்றித் தனது அன்னையிடம் கூறுவார். அதற்கு ஜீஜாபாய், ‘சிவ்பா! போஸ்லேக்களின் முன்னோர் ஸ்ரீ இராமச்சந்தரா ஆவார். ஸ்ரீஇராமர் இராவணனைக் கொன்று அவரது மக்களை மகிழ்ச்சிப்படுத்தினார். ஜாதவ்களின் முன்னோடி ஸ்ரீகிருஷ்ணன் ஆவார். அவர் கம்சனைக் கொன்று அவரது மக்களுக்கு நிம்மதியைத் தந்தார். ஸ்ரீஇராமர் மற்றும் ஸ்ரீகிருஷ்ணரின் வம்சவழியில் பிறந்திருக்கிறாய். நீயும் கெட்டவர்களை அழித்து உனது குடிமக்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்ய முடியும்.‘ என்று கூறுவார்.



**வீர அன்னை ஜீஜாபாய்**

ஜீஜபாயின் இவ்வார்த்தைகள் இளம் சிவாஜிக்கு உந்து சக்தியாக அமைந்தது. புராணகால வீரச்செயல்களின் நாயகர்களான இராமன், கிருஷ்ணன், பீமன், அர்ஜுனன் போன்றோரை அவர் நினைப்பார். கனவிலும் நினைவிலும் அவர்களைப் பற்றியே எண்ணுவார். அவர்களைப் போலவே அநீதியை எதிர்த்துப் போராட வேண்டும் என எண்ணினார். தீயவர்களை அழித்து தமது குடிமக்களுக்கு மகிழ்ச்சியை அளிக்க விரும்பினார். அவர்களைப் போலவே தானும் துணிவும் வீரமும் மிக்கவனாக மாற வேண்டும் என்று உறுதி எடுத்து கொண்டார்.

**சிவாஜியின் புதிய ஆட்சி:** புனே ஜாகீரில் சிவாஜியின் புதிய ஆட்சி ஜீஜாபாயின் வழிகாட்டுதலின் கீழ் நடந்தது. சகாஜி ராஜே

இதற்கான முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார். சகாஜி ராஜே சிவாஜியை பெங்களூரிலிருந்து புனேவிற்கு அனுப்பும்போது வலிமையும் கௌரவமும் மிக்க பெரியவர்களையும் கூடவே அனுப்பினார். அவர்கள் சாம்ராஜ் நீல்கண்ட் பேஷ்வே, பாலகிருஷ்ண ஹன்மந்தே முஜூம்தார், மாண் கோஜி தஹாதோண்டே சர்னோபத், ரகுநாத் பல்லாள்சப்னீஸ், மற்றும் சோனோபந்த் தபீர் போன்றவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் திறமை மிக்கவர்களும் சுயராஜ்யத்தை நிர்வகிக்கப் பொருத்தமானவர்களும் ஆவர். எனவேதான் சிவாஜியின் ஜாகீரைத் திறமையாக ஆட்சி புரிய இவர்களை சகாஜிராஜே பிரத்யேகமாகப் புனேவிற்கு அனுப்பி இருந்தார். இவர்களின் உதவியுடன் மக்களின் பெருந்துயரை நீக்கும் வகையில் சிவாஜி தனது ஜாகீரை நிர்வாகம் செய்து வந்தார். உழவர்களுக்கு அநீதி செய்தவர்கள் தண்டிக்கப்பட்டனர். இவ்வாறாக, சகாஜி ராஜேவின் ஜாகீரானது மாற்றம் அடைந்து கொண்டிருந்தது, மாவளர்கள் வருங்கால சுயராஜ்யத்தின் காட்சியைக் காண ஆரம்பித்தனர். இதுவே சுயராஜ்யத்தின் அருணோதயமாக இருந்தது.

**சிவாஜியின் திருமணம் :** அ ந் த நாள்களில் மிகக் குறைந்த வயதில் மக்கள் திருமணம் செய்து வந்தனர். எனவே, ஜீஜா அன்னை, 'நாம் இப்போது சிவ்பாவுக்கு திருமணம் செய்ய வேண்டும்.' என்று கூறினார். சிவ்பாவுக்குப் பொருத்தமான மணப் பெண்ணைத் தேடும் வேலை ஆரம்பமானது. ஜீஜாபாய் தமக்கு ஏற்றப் பெண்ணைக் கண்டுபிடித்தார். அவர் பெயர் சயிபாய் ஆகும். சயிபாய் பல்டனின் நிம்பல்கர் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆவார். திருமணம் சீரும் சிறப்புடன் நடைபெற்றது.

## சுயகற்றல்

**1. கோடிட்ட இடங்களைச் சரியான செ ால்லைக் கொண்டு நிரப்புக.**

(அ) சகாஜி ராஜே ......... மொழியில் கல்விமானாக இருந்தார். (சமஸ்கிருதம், கன்னடம், தமிழ்.)

(ஆ) மாவளப் பகுதியில் வாழ்ந்த மக்கள் ........... என்று அழைக்கப்பட்டனர். (உழவர்கள், படைவீரர்கள், மாவளர்கள்)

**2. ஒரே வாக்கியத்தில் விடையளி:**

(அ) சிவாஜிக்கு ஆசிரியர்களை நியமித்தவர் யார்? எங்கே நியமித்தார்?

(ஆ) ஆசிரியர்கள் சிவாஜிக்கு என்னென்ன கற்றுக் கொடுக்கத் தொடங்கினர்?

(இ) தாதாஜி கொண்டதேவ் உழவர்களுக்கு நிலவரியில் ஏன் சலுகை அளித்தார்?

**3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக.**

(அ) புனே எவ்வாறு மீண்டும் புதுப்பொலிவு பெற்றது?

(ஆ) சிவாஜி என்னென்ன கல்வி அறிவினைப் பெற்றிருந்தார்?

(இ) ஜீஜாபாய் செய்த தீர்மானம் என்ன?

**செயல்**

(அ) சிவாஜிக்கும் வீரமாதா ஜீஜாபாய்க்கும் இடையிலான உரையாடலை நடித்துக் காட்டுக.

(ஆ) வீர அன்னை ஜீஜாபாயின் வரலாற்றைப் படித்தறிக.

# 6. சுயராஜ்யத்தை நிறுவுவதற்கான உறுதிமொழி

**ராய்ரேஷ்வரின் கோயில் :** புனேவிற்கு தென்மேற்கிலுள்ள ராய்ரேஷ்வரின் கோயில் மனதைக் கவரும் அழகிய இடமாக இருந்தது அங்கே கி.பி.1645-இல் ஓர் அசாதரணமான நிகழ்ச்சி நடந்தது. சிவாஜியும் அருகில் உள்ள பள்ளத்தாக்கில் இருந்து வந்த சில மாவளர்களும் முக்கியத் திட்டம் தீட்டுவதற்காக அங்கே குழுமி இருந்தனர். அடர்ந்த காட்டின் புதர்களுக்கிடையே மறைந்துள்ள ராய்ரேஷ்வரின் கோயிலில் மாவளர்கள் சிவாஜியுடன் எந்த இரகசிய ஆலோசனையை நடத்தினர்? அவர்கள் சிவபெருமானிடம் என்ன வேண்டினர்?

**இளம் சிவாஜியின் உற்சாகப் பேச்சு:** சிவாஜி வயதில் சிறியவராக இருந்தபோதிலும் அவர் மனதளவில் பெரிய செயல்களைத் திட்டமிடுவதில் திறன் மிக்கவராக இருந்தார். கோவிலில் கூடியிருந்த தோழர்களிடம் அவர், ''எனதருமை நண்பர்களே, இன்று நான் என் மனதில் உள்ள ஒன்றைப் பற்றி உங்களிடம் பேசலாமா? எனது தந்தை சகாஜி ராஜே பிஜப்பூர் அரசவையின் படைத் தளபதியாக இருக்கிறார். அவர்தான் எனக்கு இந்த ஜாகீரின் பொறுப்பை அளித்திருக்கிறார். எல்லாம் நேர்த்தியாகவும் நலமாகவும் நடந்து கொண்டு இருக்கின்றன. ஆனால் நண்பர்களே, இதில் நான் கொஞ்சம் கூட மகிழ்ச்சியாய் இல்லை. நாம் எப்போதுமே சுல்தானிடம் அடிமையாயிருந்து மனநிறைவு அடைய வேண்டுமா? எப்போதும் அடுத்தவரிடம் கையேந்தி நிற்க வேண்டுமா? எப்போதும் போரிட ஆயத்தமாய் இருக்கும் அந்நிய அரசுகளால் நாம் நாலாபுறமும் சூழப்பட்டு இருக்கிறோம். இப்போரினால் நம் மக்கள் ஒன்றுமில்லாத காரணத்திற்காக கொல்லப்படுகிறார்கள். குடும்பம் குடும்பமாக வேரோடு அழிக்கப்படுகிறார்கள். நமது நாடும் அழிந்து கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றிலுமிருந்து நமக்கு கிடைத்தது என்ன? அடிமைத்தனத்தைத் தவிர வேறொன்றும் இல்லையே. எவ்வளவு காலம் நாம் நமது உயிரை மற்றவர்களுக்காக கொடுக்க முடியும் ? ஒரு சிறிய வதனுக்காக நாம் இந்நிலை தொடர அனுமதிக்கலாமா? இதற்கு நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?,' என்று கூறினார்.

சிவாஜி மிகுந்த உணர்ச்சிப்பெருக்குடன் பேசிக் கொண்டிருந்தார். அவரது முகம் கோபத்தால் சிவந்து காணப்பட்டது. அவர் பேச்சை இடையே நிறுத்தித் தன் நண்பர்களை உற்று நோக்கினார். ராய்ரேஷ்வர் கோயிலினுள் கூடி இருந்த இளம் மாவளர்கள் சிவாஜியின் உணர்ச்சிகரமான பேச்சைக் கேட்டு மெய் சிலிர்த்தனர். அப்போது அவர்கள் அங்கே ஒரு புதிய காட்சியைக் கண்டனர். அவர்களுள் ஒருவர், ''எங்கள் இளம் இளவரசே! தங்கள் மனதில் உள்ளதைத் தெளிவாக எமக்குக் கூறுங்கள். தங்களின் கட்டளையை நிறைவேற்ற நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தயாராக இருக்கிறோம்,'' என்று கூறினார். அங்கிருந்த திடமான இளம்வீரர்கள் அனைவருமே ஒருமித்த குரலில், ''சரி அரசே! நீங்கள் கூறியவற்றை நாங்கள் நிறைவேற்றுகிறோம். தேவையானால்எங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்,'' என்று முழங்கினர்.

**சுயராஜ்ய உறுதிமொழி:** மாவளர்களின் இந்த வார்த்தைகளினால் சிவாஜி புத்துணர்ச்சி பெற்றார். அவர்கள், ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியாகப் பார்த்து, 'நண்பர்களே! நமது பாதை தெளிவானது. நாம் அனைவரும் நமது குறிக்கோளை அடைய பாடுபடுவோம். அதை அடையும்வரை அயராது உழைப்போம், எல்லோரும் உயிரைக் கூடத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். 'இந்தவி சுயராஜ்யம்!' என்பதே நமது குறிக்கோளாகும். எனது, உங்களது மற்றும் எல்லோருடையதுமான சுயராஜ்யத்தை நிறுவுவோம். அடுத்தவரிடம் அடிமையாக இனி இருக்க வேண்டாம். எழுந்திருங்கள்! இந்த ராய்ரேஷ்வரை சாட்சியாக வைத்து நாம் இந்த உறுதிமொழியை எடுப்போம். நமது சுயராஜ்யத்தை நிறுவுவதற்காக இனி நம்மை நாமே



சுயராஜ்யத்தை நிறுவுவதற்கான உறுதிமொழி

அர்ப்பணித்துக் கொள்வோம்.'' என்றார்.

சிவாஜியின் சொற்கள் கோயில் முழுவதும் எதிரொலித்தது. ''இந்த அரசு இந்தவி சுயராஜ்யமாக மாற வேண்டும் என்று கடவுள் நினைக்கிறார். கடவுளின் விருப்பத்தை நாம் நிறைவேற்றுவோம்,'' என்று சிவாஜி கடைசியில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

சுயராஜ்ய உறுதிமொழி எடுத்தபின் மாவளர்கள் கோயிலை விட்டு அகன்றனர். சிவாஜியின் மனம் பெருமகிழ்ச்சியில் நிறைந்தது. அவர் புனேயை அடைந்ததும் தன் அன்னையைப் பார்க்க நேராக லால்மஹாலுக்குச் சென்றார். ராய்ரேஷ்வரில் நிகழ்ந்தவை அனைத்தையும் அன்னையிடம் விளக்கினார். ஜீஜாபாய் பெருமகிழ்ச்சி உற்றார். தன் மனதில் இருந்த எண்ணத்தைத் தனது மகன் செய்து முடிப்பான் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது.

**மாவளப் பள்ளத்தாக்கில் ஒன்று கூடுதல்:** சிவாஜி விரைவாக தனது புதிய செயல்களில் முனைப்புடன் ஈடுபட்டார். தனது தோழர்களுடன் வாட்போர், குதிரை ஏற்றம், குன்றுகளில் இரகசியப் பாதைகளைக் கண்டறிதல், நில அமைப்பினைக் கண்டறிதல், பள்ளத்தாக்குகள், கணவாய்கள் மற்றும் மாற்று வழித்தடங்களைக் கண்டறிதல் போன்ற அத்தியாவசியமான செயல் திட்டங்களைச் செய்யத் தொடங்கினார். இதனால் தனக்காக உயிரையே தியாகம் செய்யத் துணிந்த மாவளர்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். கடல் அலை பொங்கியது போல சிவாஜியின் செயல்களிலும் ஆர்வம் பொங்கியது. அவர் புனேயைச் சுற்றியுள்ள கோட்டைகள், படைத்தளங்கள் பற்றி உற்றுநோக்கி ஆராய்ந்தார். நாளடைவில் ஒவ்வொரு தளங்களிலும் உள்ள இரகசிய வழிகள், சுரங்கப் பாதைகள் போர்க்கருவிகள் மற்றும் வெடிமருந்துகளின் சேமிப்புக் கிடங்குகள், நிலத்தடி ஆயுத சேமிப்புக் கிடங்குகள் பற்றிய புள்ளி விவரங்களையும் தெளிவாகத் தெரிந்து கொண்டார்.

**மாவள நண்பர்கள் :** பன்னிரெண்டு மாவளப் பகுதியின் ஒவ்வொரு இடத்திலும் சில தேஷ்முக்குகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட வதன்களைப் பாதுகாத்து வந்தனர். வதனுக்காக அவர்களுக்கிடையே நிலவிய இடைவிடாத பூசலால் மராட்டியர்களின் செல்வமும் வலிமையும் வீணாகியது. இந்த வீண் அழிவை முடிவுக்குக் கொண்டுவர சிவாஜி தீர்மானித்தார். சிவாஜி தேஷ்முக்குகளின் கிராமங்களுக்குச் சென்று அவர்களைச் சந்தித்துப் புரியவைத்து அவர்களின் நம்பிக்கையைப் பெற்றார். சுயராஜ்யக் குறிக்கோள்மூலம் அவர்களைத் தனது வசீகரமானப் பேச்சால் பலரைத் தன் பக்கம் ஈர்த்தார். இணங்காதவர்களைத் தம் படைபலத்தால் அடக்கினார். இவ்வாறு தேஷ்முக்குகள் தங்களுக்கிடையே சண்டையிடுவதை நிறுத்தினார். இந்த மகிழ்ச்சி கரமான முடிவைக் கண்டு ஒவ்வொரு வரும் மகிழ்ந்து சிவாஜியின் புகழ் பாடினர். மாவள பள்ளத்தாக்கில் ஜீஞ்ஜாராவ் மரள், ஹைபத்ராவ் சிளம்கர், பாஜி பாசல்கர், விட்டோஜி சிதோளே, ஜேதே, பாய்குடே, பாந்தல் ஆகிய தேஷ்முக்குகள் சிவாஜியை ஏற்றுக் கொள்ளத் தொடங்கினர். சுயராஜ்யக் கனவு நனவாகும் நாள் மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருந்தது.

**சிவாஜியின் அரச முத்திரை:** சிவாஜியின் பெயரால் ஜாகீரின் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டது. சகதஜி ராஜே சிவாஜிக்காக ஒரு தனிப்பட்ட அரச முத்திரையை உருவாக்கினார். அது பின்வருமாறு:



அரச முத்திரை

பிரதிபச்சந்திரலேகேவ
வர்திஷ்ணுர் விஸ்வவந்திதா ॥

ஷாஹஸுனோஷ் சிவஸ்யைஷா
முத்ரா பத்ராய ராஜதே ॥

‘‘வளர்பிறை போல் எப்போதும் வளரும் சகாஜியின் மைந்தன் சிவாஜியின் அரசு எப்பொழுதும் மக்கள் நலனையே நாடும்.’’ என்பதை இம்முத்திரையின் மூலம் சிவாஜி மக்களுக்கு உறுதியளித்திருந்தார். இந்த அரச முத்திரை என்பது சுயராஜ்ய அடித்தளத்தின் அடையாளமாகும்.

அந்நாட்களில் பெரும்பான்மையான அரச முத்திரைகள் பாரசீக மொழியில் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் சிவாஜியினுடைய அரச முத்திரை சமஸ்கிருதத்தில் இருந்தது. இது ஒரு முக்கிய மாற்றமாகும். சொந்த மொழியும் சொந்த மதமும் இன்றி சுயராஜ்யம் இருக்க முடியாது. ஆனால் அதேவேளையில் பிற மதங்களுடன் வெறுப்புக் கொள்ளவும் கூடாது. மக்களின் நலனுக்காகவே சிவாஜி தனது செயல் திட்டங்களை ஆரம்பித்தார். இவை அனைத்தும் மாவளர்களின் கவனத்திற்கு வந்தது.

## சுயகற்றல்

### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) புனேவிற்கு தென்மேற்கிலுள்ள ........... கோயில் மனதைக் கவரும் அழகிய இடமாக இருந்தது.

(ஆ) மாவளப் பகுதியின் ஒவ்வொரு இடத்திலும் சில ........... தங்களுக்கு அளிக்கப்பட்ட வதன்களை பாதுகாத்து வந்தனர்.

(இ) சகாஜி ராஜே சிவாஜிக்காக ஒரு தனிப்பட்ட......... உருவாக்கினார்

### 2. ஒரே வாக்கியத்தில் விடையளிக்கவும்.

(அ) ராய்ரேஷ்வரின் கோயிலில் சிவாஜி உறுதியாகக் கூறியது என்ன?

(ஆ) ஜீஜாபாய்க்கு என்ன நம்பிக்கை ஏற்பட்டது?

(இ) சிவாஜி எந்த விபரங்களை விரைவாகத் தெரிந்து கொண்டார்?

(ஈ) சிவாஜி எதை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானித்தார்?

### 3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக.

(அ) சிவாஜியின் குறிக்கோள் என்ன?

(ஆ) சிவாஜி செய்ய ஆரம்பித்த அதியாவசியமான செயல் திட்டங்கள் யாவை?

### செயல்

ஆசிரியரின் உதவியுடன் சுயராஜ்யம் நிறுவுவதற்கான நிகழ்வை விளக்கும் படத்தை வரைந்து வண்ணமிடுக.

# 7. சுயராஜ்யம்: முதல் வெற்றி

சிவாஜியும் அவரது தோழர்களும் ராய்ரேஷ்வர் கோயிலில் சுயராஜ்ய உறுதிமொழி எடுத்துக் கொண்டனர் என்பது ஐயமற்ற உண்மை. ஆனால் இதைச் செயல்படுத்துவது மிகவும் கடினமானது ஆகும். அந்நாட்களில் மகாராஷ்டிராவை நான்கு பெரும் சக்திகளான டெல்லி மொகலாய அரசர்கள், பிஜப்பூர் அடில்ஷா, கோவா போர்த்துக்கீசியர், ஜன்ஜிரா சித்திகள் ஆகியோர் ஆட்சி செய்து வந்தனர். பலமான எதிரிகளான இவர்கள் தமது அதிகாரத்தில் உறுதியானவர்களாக இருந்தனர். இவர்களை எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேச யாரும் துணியவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில் சிவாஜி சுயராஜ்ய உறுதிமொழி எடுத்துக் கொண்டார். எதிரிகளின் மிகப்பெரிய படைகளுக்கு ஈடாக சிவாஜியின் மாவளப் படைகளை ஒப்பிட முடியாது. ஆனால் சிவாஜியின் திடமான மனமே அவரின் மிகப்பெரிய வலிமைக்கு மூல காரணமாக இருந்தது.

**தோர்ணா கோட்டை:** சிவாஜி புனே, சுபே, சாக்கன், இந்தாப்பூர் போன்ற ஜாகீர்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டிருப்பினும் ஜாகீரிலுள்ள அனைத்துக் கோட்டைகளும் பிஜப்பூர் அரசு அதிகாரிகள் பொறுப்பில் இருந்தன.

கோட்டைகளை யார் ஆட்சி செய்கிறாரோ அவரேசுற்றியுள்ள பகுதிகளையும் ஆட்சி செய்வார். எனவே கோட்டைகள் இல்லாத சுயராஜ்யம் அர்த்தமற்றது ஆகும். மலைக்கோட்டைகள் ஒரு ராஜ்யத்திற்கு பலமும், போர்த் தந்திர உதவியும் அளிக்கும். எனவே தக்க சமயத்தில் ஒரு கோட்டையைக் கைப்பற்ற தீர்மானித்தார். இதற்காக அவர் தோர்ணா கோட்டையைத் தேர்ந்தெடுத்தார். இது புனேவிற்கு தென்மேற்குத் திசையில் 'கானத்' பள்ளத்தாக்கில் உள்ளது. இது புகழ்பெற்றதும் பாதுகாப்பிற்கு உகந்ததுமான கோட்டை ஆகும். இக்கோட்டைக்குச் செல்லும் வழியில் இரு பலமான மாச்சிகள் இருந்தன. மாச்சி என்பது மலைச் சரிவில் இயற்கையாகவே அமைந்த ஓர் அரணான சமதளப் பகுதி ஆகும். அந்த மாச்சி களில் ஒன்று 'ஜூஞ்ஜார் மாச்சி' மற்றொன்று 'புத்லா மாச்சி' ஆகும். அதன் பெயரைப்



தோர்ணா கோட்டை ( ஜூஞ்ஜார் மாச்சி)

போலவே பலமுள்ளதாகவும் போர் செய்ய ஏற்றதாகவும் இருந்ததோடு எதிரிகளிடமிருந்து பாதுகாப்பு அளிப்பதிலும் சிறந்து விளங்கியது.

கோட்டைக்குச் செல்லும் ஒரே வழி ஜூஞ்ஜார் மாச்சியைக்கடப்பதே ஆகும். இது ஒருபுறத்தில் உயரமான குன்றுகளையும் மறுபுறத்தில் ஆழ்ந்த பள்ளத்தாக்குகளையும் உடைய மிகக் கடினமானபாதையாகும். அப்பாதையில் ஒருவர் செல்லும் பொழுது சிறிது கவனக் குறைவு ஏற்பட்டாலும் கீழே விழுந்து உயிர் இழக்க நேரிடலாம். மகாராஷ்டிராவில் உள்ள பலமான கோட்டைகளில் 'தோர்ணா' கோட்டையும் ஒன்றாகக் கருதப்பட்டது. இக்கோட்டையில் தோரஞ்சாயி என்னும் பெண் தெய்வத்தின் கோயில் ஒன்று இருந்தது. எனவே இக்கோட்டை தோர்ணா என்று அழைக்கப்பட்டது. ஆனால் வலிமையான இக்கோட்டை அடில்ஷாவினால் புறக்கணிக் கப்பட்டது விந்தையாக இருந்தது. கோட்டையின் பாதுகாப்பிற்குப் போதுமான படைகளோ யுத்த தளவாடங்களோ அங்கு இல்லை. தான் விரும்பியபடி அக்கோட்டை இருப்பதை சிவாஜி அறிந்தார். அக்கோட்டையைக் கைப்பற்றி ஹிந்தவி சுயராஜ்யத்திற்கு அடித்தளமிட முடிவு செய்தார்.

**சுயராஜ்ய முரசுகள் முழங்கத் தொடங்கின:** சிவாஜி தேர்ந்து எடுக்கப்பட்ட சில மாவளர்களுடன் கானத் பள்ளத்தாக்கினுள் இறங்கினார். மான்போன்ற வேகநடையுடனும், சிங்கத்தின் துணிவுடனும் கோட்டையின் உச்சிக்கு விரைந்து சென்று முக்கிய இடங்களை அவர்கள் பிடித்தனர். முக்கிய நுழைவாயிலில் தானாஜி மாலுசரே மராட்டியக் கொடியை ஏற்றினார். சிவாஜியின் நம்பிக்கைக்கு உரியவரும், உண்மை தோழருமாகிய ஏசாஜி கங்க் முக்கிய இடங்களில் தனது காவலர்களை நிறுத்தினார். ஏறக்குறைய எந்த ஒரு எதிர்ப்பும் இன்றி கோட்டை பிடிபட்டது. ‘மாமன்னர் சிவாஜிக்கு வெற்றி உண்டாகுக’’ என்ற முழக்கம் விண்ணில் பரவியது. ஹிந்தவி சுயராஜ்யத்தின் முதல் போர் முரசுகள் மற்றும் எக்காள ஒலிகள் அப்பள்ளத்தாக்கு முழுவதும் எதிரொலித்தன. சிவாஜி இக்கோட்டைக்கு பிரசண்ட்காட் என்று பெயரிட்டார்.

**பவானி தேவியின் அருள்:** தோர்ணா கோட்டை சிவாஜியின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. அவர் அதை மிகக் கவனமாக ஆய்வு செய்து, மராட்டா கில்லேதார், பிரம்மன் சப்னீஸ், பிரபு கர்கானிஸ் போன்ற அதிகாரிகளை நியமித்தார். கோட்டை காவல் படையில் மாவளர்கள், கோலிகள், ரமோஷிகள், மகர்கள் மற்றும் பல இனங்களில் வந்த வீரர்களும் அடங்குவர். சுயராஜ்யத்தில் அனைத்து ஜாதி இன மக்களும் சமமாக நடத்தப்பட்டனர். மேலும், சாதி அடிப்படையில் எந்த வேறுபாடுகளும் காணப்படவில்லை. கோட்டையைப் பழுது பார்க்கும் பணி நடந்தபோது மக்களுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. விளிம்புவரை தங்க நாணயங்கள் நிரம்பிய நான்கு உலோகப் பானைகளை அவர்கள் கண்டு பிடித்தனர். பணியாளர்கள் பெரிதும் மகிழ்ந்தனர். இப்பரிசு சிவாஜியின் முயற்சிக்காக பவானிதேவியால் அருளப்பட்ட கொடை என்று கூறினர். கண்டுபிடிக்கப்பட்ட செல்வம் அனைத்தும் சிவாஜியிடம் கொண்டுவரப்பட்டது. அதிலிருந்து எதையும் தனக்காக எடுக்க வேண்டும் என்று யாரும் எண்ணவில்லை. அச்செல்வம் அனைத்தும் சுயராஜ்யத்திற்குச் சொந்தமானது. சுயராஜ்யம் என்னும் தனது குறிக்கோளை அதிக ஆற்றலுடன் தொடர தமக்கு எதிர்பாராது கிடைத்த இப்பரிசை எண்ணி சிவாஜி பெருமகிழ்ச்சி கொண்டார். பவானி தேவியின் அருட்பார்வையின் கீழ் தான் செயல்படுவதாக அவர் எண்ணினார்.

சிவாஜி கோட்டையில் கண்டெடுக் கப்பட்ட செல்வத்தின் ஒரு பகுதியைப் போர்க்கருவிகள் மற்றும் யுத்தத் தளவாடங்கள் வாங்கப் பயன்படுத்தினார். மீதியைத் தன் மனதில் ஏற்கெனவே எண்ணியிருந்த திட்டத்திற்குப் பயன்படுத்த முடிவு செய்தார். தோர்ணாவிற்குக் கிழக்கே ஏறக்குறைய பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் முரும்பதேவ் குன்று உள்ளது. நீண்ட நாட்களாகவே சிவாஜி அதன்மேல் ஒரு கண் வைத்திருந்தார். அக்குன்று செங்குத்தாகவும் அதனை அடைவது மிகக் கடினமாகவும் இருந்தது. ஆனால் போர்ப் பணிகளுக்கு சிறந்த இடமாக இது திகழ்ந்தது.



**ராஜ்காட் -பாலி நுழைவாயில்**

அடில்ஷா அக்குன்றின் மேல் ஏற்கெனவே ஒரு கோட்டையைக் கட்டத் தொடங்கி முடிக்காமல் பாதியிலேயே விட்டிருந்தார். இக்கோட்டை சரியானபாதுகாப்பு அளிக்கப்படாமல் இருந்தது. இதனை சுயராஜ்யத்தின் தலைநகராக்க வேண்டி சிவாஜி அதைக் கைப்பற்ற முடிவு செய்தார்.

**சுயராஜ்யத்தின் முதல் தலைநகரம்:** ஒரு நாள் சிவாஜி தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர்களுடன் குன்றின்மேல் ஏறி முழுமையாக அக்கோட்டையைக் கைப்பற்றினார். தோர்ணா கோட்டையில் கிடைத்த செல்வம் முரும்பதேவ் கோட்டையை பலப்படுத்த உதவியாக இருந்தது. இக்கோட்டைக்கு சிவாஜி ராஜ்காட் என்று பெயரிட்டார். கொத்தர்கள், தச்சர்கள், கொல்லர்கள், நீர் சுமந்து வருபவர்கள் மற்றும் பிற பணியாளர்கள் போன்ற அனைத்து தரப்பு மக்களும் சுறுசுறுப்பாக இயங்கினர். ராஜ்மஹால், பாராமஹால் மற்றும் பதினெட்டு தொழிற்கூடங்களையும் கட்டினர். ராஜ்காட் சுயராஜ்யத்தின் முதல் தலைநகரமானது.

**சுயராஜ்யத்தின் வேகமான வளர்ச்சி:** இதற்குப் பின் சிவாஜி வேகமாகச் செயல்பட்டு பன்னிரெண்டு மாவளப் பகுதியில் உள்ள கோட்டைகளைக் கைப்பற்றினார். 'பாராமாவள்' அதாவது பன்னிரெண்டு மாவள்கள் என்று அழைக்கப்படும் முழு பகுதியும் மகிழ்ச்சியிலும் உற்சாகத்திலும் நிரம்பி வழிந்தது. பல கிராமங்களிலிருந்து வந்த பாட்டீல்களும் தேஷ்முக்குகளும் சிவாஜியிடம் ராஜ விசுவாச உறுதி மொழியை அளித்தனர். ஆயினும் மாவளத்திற்குள்ளும் சில வஞ்சகர்கள் இருந்தனர். அவர்கள் எந்த நேரமும் வேகமாகச் செல்லும் சுயராஜ்ய சக்கரத்திற்கு முட்டுக்கட்டை இட தயாராக இருந்தனர். சிவாஜியின் வெற்றி மீது பொறாமை கொண்ட அவர்கள் சிர்வலிலுள்ள அடில்ஷாவின் அதிகாரியிடம் சென்று முறையிட்டனர். அவர் தூதுவர்களை பிஜப்பூருக்கு அனுப்பி சிவாஜியின் வேகமான வளர்ச்சி பற்றி அடில்ஷாவிற்கு அறிவித்தார்.

**விவேகமுள்ள அரசியல் மேதை சிவாஜி:** இச்செய்தியைக் கேட்ட அடில்ஷா மிகவும் வியப்படைந்தார். அவர் சகாஜி ராஜேவிடம் விளக்கம் கேட்டார். இந்த இக்கட்டான நிலையைச் சமாளிக்க ஜாகீரை நல்ல முறையில் நிர்வாகிக்கவே ஒருவேளை சிவாஜி இக்கோட்டைகளைக் கைப்பற்றியிருக்கக் கூடும் என்று அவர் சுல்தானிடம் கூறினார். சிவாஜியும் சுல்தானுக்கு அனுப்பிய ஒரு செய்தியில் நான் கிராமப்புறத்தில் நல்ல நிர்வாகத்தை நிலைநாட்டவே இக்கோட்டையை

என் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளேன். இதை நாங்கள் சுல்தானின் நன்மைக்காகவே செய்தோம். இச்செயலுக்குப் பின்னால் எவ்வித சூழ்ச்சியும் இல்லை என்று கூறியிருந்தார்.

கொண்டானா மற்றும் புரந்தர் ஆகிய இரு கோட்டைகளும் போர் நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடமாக இருந்தன. சிவாஜி தனது அரசியல் திறமையால் இவ்விரு கோட்டைகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தார். அடுத்து ரொகிடா கோட்டையைக் கைப்பற்றினார். இவ்வாறு சுயராஜ்யம் மிக வேகமாக வளரத்தொடங்கியது. இப்போது சிவாஜியைத் தடுக்க எவராலும் இயலவில்லை.

## சுயகற்றல்

### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக :

(அ) சிவாஜி, புனே, சுபே, சாக்கன் மற்றும் ........ ஜாகீரை ஆட்சி செய்தார். (இந்தாப்பூர், சாஸ்வட், வெல்ஹே)

(ஆ) சிவாஜி .......... கோட்டையைக் கைப்பற்றி ஹிந்தவி சுயராஜ்யத்திற்கு அடித்தளமிடத் தீர்மானித்தார். (சிங்ககட், சிவனேரி, தோர்ணா)

(இ) சுயராஜ்யத்தின் முதல் தலைநகரமாக மாறியது. (ராஜ்காட், ராய்காட், பிரதாப்காட்)

### 2. ஒரே வாக்கியத்தில் விடையளிக்கவும்:

(அ) மகாராஷ்டிராவை ஆட்சி செய்த நான்கு பெரும் சக்திவாய்ந்த ஆட்சியாளர்கள் யாவர்?

(ஆ) தோர்ணா கோட்டையைப் பாதுகாக்க சிவாஜி நியமித்த அதிகாரிகள் யாவர்?

(இ) சிவாஜி அடில்ஷாவிற்கு அனுப்பிய செய்தி யாது?

### 3. காரணம் தருக:

(அ) சிவாஜி ஹிந்தவி சுயராஜ்யத்திற்கு அடித்தளமிட தோர்ணா கோட்டையைத் தேர்ந்தெடுத்தார்.

(ஆ)) தோர்ணா கோட்டையில் பணியாட்கள் கண்டெடுத்த தங்க நாணயங்களின் பானைகளை சிவாஜியிடம் கொடுத்தனர்.

### செயல்

உங்களது ஆசிரியர்களின் உதவியோடு மிக அருகிலுள்ள கோட்டைக்கு இன்பச் சுற்றுலா சென்று வர ஏற்பாடு செய்க.

# 8. உள்நாட்டுப் பகைவர்களை அடக்குதல்

**பணிவோடு அச்சத்தை ஏற்படுத்துதல்:** கூடிய அச்சத்தை பன்னிரெண்டு மாவளப் பகுதிகளிலும் உள்ள மாவளர்கள் சிவாஜியைச் சுற்றி ஒன்று கூடினர். அவர் கூறிய வேலைகளை உடனுக்குடன் நிறைவேற்றினர். அவர்கள் சுயராஜ்யத்திற்காகவே வாழ்ந்தனர். அதற்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருந்தனர். அவர்கள் எளிய மராத்திய மக்கள் ஆவர். அவர்கள் சிவாஜியைத் தங்கள் உயிரினும் மேலாக நேசித்தனர். எனினும் அவர்களில் சிலர் சிவாஜியின் சாதனைகளில் பொறாமை கொண்டனர். சிவாஜி அவர்களையும் கண்காணிக்க வேண்டியதாயிற்று.

கண்டோஜி மற்றும் பாஜி கோர்படே ஆகிய இரு படைத்தளபதிகள் அடில்ஷாவின் பணியில் இருந்தனர். அடில்ஷா, அவர்களை சிவாஜிக்கு எதிராகத் தூண்டினார். அவர்கள் கொண்டானா மாவட்டத்தில் பல பிரச்சனைகளை ஏற்படுத்தினர். ஆனால் அவர்களின் எண்ணம் நிறைவேறவில்லை. சிவாஜி அவர்களைத் தோற்கடித்து விரட்டியடித்தார்.

பால்டனின் பஜாஜி நாயிக் நிம்பால்கர் சிவாஜியின் சொந்த மைத்துனர் ஆவார். ஆனால் மாமன்னர் சிவாஜி அவரை எதிர்த்துப் பல சண்டைகள் போட வேண்டியதாயிற்று இருப்பினும் பின்னர் இக்குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் மாமன்னர் சிவாஜிக்கு ஆதரவாக இருந்தனர்.

சிவாஜியின் நெருங்கிய உறவினர் சம்பாஜி மோஹிதே ஆவார். இவர் அவருடைய சுபே பகுதியில் இருந்தார். சிவாஜிக்கு எதிராக சதி செய்யத் தொடங்கினார். சிவாஜி அவரை சுபே பகுதியில் வைத்து கைது கர்நாடகாவிற்குத் துரத்தினார். சிவாஜி செய்து உறவினர்களைவிட கடமைக்கு முதன்மை இடமளித்தார்.

**ஜாவலியைச் சேர்ந்த சந்திரராவ் மோரே:**

சிவாஜியின் சாதனைகளின் பெருமை எல்லா இடங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாராட்டப்பட்டது. அவர் மக்களின் மன்னர் ஆவார். இது சிலரின் கண்களை உறுத்தியது. ஜாவலியின் மோரே அப்படிப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார். மோரே ஜாவலியின் ஜாகீர்தாராக இருந்தார். இந்த ஜாகீர் ராய்காட்டில் இருந்து கொய்னா பள்ளத்தாக்கு வரை பரவி இருந்தது. அவர் பிஜப்பூர் அடில்ஷாவின் ஜாகீர்தாராக இருந்தார். அவருக்கு 'சந்திரராவ்' என்ற பட்டத்தை ஆடில்ஷா அளித்தார். ஜாவலி பகலில் கூட சூரியனின் கதிர்கள் நுழைய முடியாதபடி அடர்ந்த காடுகளைக் கொண்டது. அது கொடிய விலங்குகள் நிறைந்த பகுதி ஆகும். புலிகள், ஓநாய்கள், கரடிகள் மற்றும் பல காட்டுவிலங்குகள் ஜாவலி காட்டில் சுதந்திரமாக அலைந்து திரிந்தன. மோரேயின் ஜாவலி என்றாலே புலிகள் பதுங்கும் இடமாகவே இருந்தது. எனவே மோரேயின் பாதையில் யாரும் குறுக்கிட முடியவில்லை. வீர சிவாஜிக்கு மட்டுமே இத்துணிவு இருந்தது. காரணம்-

கி.பி. 1645 இல் தௌலத்ராவ் மோரே இறந்தார். அவருடைய வாரிசுகளுக்கிடையே உரிமைப் போர் நடந்தது. சிவாஜி யஷ்வந்த்ராவ் மோரேவிற்கு உதவி செய்தார். சிவாஜியின் ஆதரவுடன் யஷ்வந்த்ராவ், 'சந்திரராவ்' ஆக ஜாவலியின் அரியணையில் அமர்ந்தார். அந்தச் சமயத்தில் யஷ்வந்த்ராவ் சிவாஜிக்கு கப்பம் கட்டுவதாகவும் அவருடைய போர் நடவடிக்கைகளுக்கு உதவுவதாகவும் சம்மதித்தார். ஆனால் அரியணை ஏறியதும் இந்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் அலட்சியமாக இருந்தார். சுயராஜ்யத்தின் கோட்பாடுகளைத் தகர்த்து மக்களை மூர்க்கத்தனமாக துன்புறுத்தத் தொடங்கினார். மோரேயைத் தண்டிக்காவிடில் அவர் சுயராஜ்யத்திற்கு என்றும் ஆபத்தாக இருப்பார் என்று சிவாஜி உணர்ந்தார்.

**எதிர்த்தால் மடிந்து விடுவாய்:**

சிவாஜி முதலில் கடுஞ்சொற்கள் அடங்கிய செய்தியை யஷ்வந்த்ராவ் மோரேவிற்கு அனுப்பினார். ''உன்னை அரசன் என்று நீயே அழைத்துக் கொள்கிறாய். ஆனால் இப்பகுதியின் அரசன் நான்தான். இந்த ராஜ்யம் சிவபெருமானால் எனக்குக் கொடுக்கப்பட்ட கொடை. எனவே, இனி உன்னை அரசன் என்று நீயே அழைத்துக் கொள்ளாதே,''என்று அதில் எழுதி இருந்தார்.

மிகவும் மரியாதையற்ற முறையில் யஷ்வந்தராவ் ''நீ நேற்று மட்டுமே அரசனாக இருந்திருப்பாய். இந்த ராஜ்யத்தை உனக்குக் கொடுத்தது யார்? நீ ஜாவலி வந்தால் பிடிபடுவாய். கடவுளின் அருளால் நான் அடில்ஷாவிடம் இருந்து அரசன் என்னும் பட்டத்தைப் பெற்று இருக்கிறேன். அவரின் பெருந்தன்மை காரணமாக அரசனுக்குரிய அரியணையையும் வெண்கொற்றக் குடையையும் எனக்குக் கொடுத்து இருக்கிறார். எனக்கு எதிராக சூழ்ச்சி செய்தால் கடுமையாகத் தாக்கப்படுவாய்,' என்று எழுதினார்.

இதற்கு சிவாஜி, 'ஜாவலியை விட்டு வெளியேறி, உனது போலி அரச உரிமைகளையும் விட்டு உனது எஜமானாகிய என் முன் கட்டிய கைகளுடன் வந்து நான் கொடுக்கும் பணியை ஏற்றுக்கொள். எதிர்த்தால் நீ உயிருடன் இருக்கமாட்டாய்,' என்று மறுப்பு தெரிவித்து பதிலளித்தார்.

ஜாவலியை வெற்றி கொள்வது ஒரு கடினமான செயலாகும். அது அடர்ந்த காடுகளால் மூடப்பட்டதும் எளிதில் வெல்ல முடியாத பாதுகாப்புடன் கூடிய ராய்ரி கோட்டையைக் கொண்டதும் ஆகும். மோரேயிடம் ஏராளமான வீரர்கள் இருந்தனர். சிவாஜி தேவையான ஏற்பாடுகளைச் செய்த பின்னர் ஜாவலியைத்தாக்கினார்.யஷ்வந்த்ராவ் ஒரு மாதம் வரை தாக்குப் பிடித்தார். ஆனால், மிகுந்த இழப்புக்கு ஆளானார். பின்னர் தனது குடும்பத்துடன் ராய்ரிக்கு தப்பிச் சென்றார். சிவாஜி ஜாவலியை வெற்றி கொண்டு ராய்ரி கோட்டையை நோக்கி அணிவகுத்துச் சென்று, அதைவலிமையாக முற்றுகை இட்டார். யஷ்வந்த்ராவ் மூன்று மாதங்கள் கடுமையாகப் போராடி இறுதியில் கோட்டையைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.



**ராய்காட் கோட்டை**

**ராய்காட் கோட்டை:** ஜாவலியின் வெற்றி மிகவும் முக்கியமான ஒரு நிகழ்வாகும். இதனால் சிவாஜியின் சுயராஜ்யம் முன்பைவிட இரு மடங்கானது. யஷ்வந்த்ராவின் படையும் சிவாஜியின் படையுடன் சேர்ந்தது. பலம் வாய்ந்த ராய்ரி கோட்டை சுயராஜ்யத்தின் கீழ் வந்ததால் சிவாஜி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதன் பெயரை 'ராய்காட் என்று மாற்றினார். பின்னர் அவர் போர்பியா குன்றுக்கு அருகில் ஒரு புதிய கோட்டையைக் கட்டி அதற்கு 'பிரதாப்காட் ' என்று பெயரிட்டார்.

## சுயகற்றல்

**1. தவறான சோடிகளைக் கண்டுபிடி.**

(அ) பால்டன் ———— நிம்பால்கர்

(ஆ) ஜாவலி ———— மோரே

(இ) சுபே ———— ஜாதவ்

**2. ஒரே வாக்கியத்தில் விடையளிக்கவும்.**

(அ) ஜாவலி மோரேவிற்கு அடில்ஷாவால் அளிக்கப்பட்ட பட்டம் என்ன?

(ஆ) ஜாவலியின் வெற்றி ஒரு மிக முக்கியமான நிகழ்வாகும் ஏன்?

**3. இரண்டுஅல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக.**

(அ) மோரேயின் நடவடிக்கைகளில் எவரும் குறுக்கிடாதது ஏன்?

(ஆ) யஷ்வந்த்ராவ் மோரேக்கு சிவாஜி அனுப்பிய செய்தி யாது?

**செயல்**

(அ) ராய்காட் கோட்டையின் படங்களைச் சேகரிக்கவும்.

(ஆ) தீபாவளி விடுமுறையில் உங்களது நண்பர்கள் உதவியுடன் ராய்காட் கோட்டையின் மாதிரி ஒன்றை தயார் செய்க.

# 9. வரலாற்றில் பிரதாப்காட்

**அடில்ஷாவின் மனக் கலக்கம்:**

இது பிஜப்பூர் அவையில் நடந்த சம்பவம். சிவாஜியின் வளர்ச்சியைக் கண்டு பிஜப்பூர் அரசவையில் உள்ளவர்கள் கவலை அடைந்தனர். இச்சூழ்நிலையை எதிர் கொள்ள சுல்தான் தனது தளபதிகள் அனைவரையும் அவைக்கு அழைத்திருந்தார். அடில்ஷாவின் நிர்வாகத்தைத் தனிப்பட்ட முறையில் பிஜப்பூரிலிருந்து கவனித்து வந்த ராணியான தவாகர் தாமே அவைக்கு வந்திருந்தார். அந்தச் சபையின் முன் எழுந்த ஒரே கேள்வி சிவாஜியை எவ்வாறு ஒடுக்குவது என்பதே ஆகும்.

ராணி நேரடியாகவே படைத் தளபதிகளை நோக்கி 'சிவாஜியின் கிளர்ச்சியை ஒடுக்கயார் தயாராக இருக்கிறீர்கள்? சொல்லுங்கள்,'' என்று கேட்டார்.

அவை அமைதியானது. ஒவ்வொரு வரும் தங்கள் இருக்கையில் அமைதியாக இருந்து கொண்டு, சிவாஜியை வெல்லும் சவாலை ஏற்க யாருக்குத் துணிவு உள்ளது ? என்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர் ? அப்போது அரக்கனைப் போன்று உருவமுடைய ஒருவர் அரியணையின் முன்பு வந்து மரியாதையாக தலைவணங்கி நின்றார். அவர் பெயர் அப்சல்கான்.

**அப்சல்கான் சவாலை ஏற்றல்:**

அப்சல்கான் சவாலை ஏற்றுக் கொள்வதைக் குறிக்க தாம்பூலத்தில் இருந்த வெற்றிலையை எடுத்துக் கொண்டார். ''சிவாஜி! யார் இந்த சிவாஜி ? அவரைக் கைது செய்து இங்குகொண்டு வருவேன். அது நடக்கவில்லையாயின் அவரது பிணத்தையாவது கொண்டு வருவேன்,'' என்று முழங்கினார்.

பிஜப்பூர் அரசவையின் பலமிக்க படைத்தளபதிகளுள் அப்சல்கானும் ஒருவர். அவரது வலிமையும் ஆற்றலும் ஈடு இணையற்றது. வெறுங்கைகளால் ஒரு கடப்பாரையை அவரால் வளைக்க முடியும். அவர் எந்த வகையிலாவது தான் நினைத்த காரியத்தை செய்து முடிப்பவர். இந்த அப்சல்கான்தான் சிவாஜியை உயிருடனோ, பிணமாகவோ அவைக்குக் கொண்டுவருவேன் என்ற சவாலை ஏற்றுக் கொண்டார். அப்சல்கானின் இந்தச் சவாலைக் கேட்டு சபையில் உள்ள அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். அனைவரும் இதோடு சிவாஜி முடிந்தார் என்றும் அவர் உயிருடனோ அல்லது பிணமாவாகவோ பிஜப்பூர் கொண்டு வரப்படுவார் என்றும் எண்ணினர்.

அப்சல்கான் மிகுந்த கர்வத்துடனும் ஆரவாரத்துடனும். பிஜப்பூரை விட்டுப் புறப்பட்டார். அவர் தன்னுடன் ஒரு பெரிய படையையும் போர் கருவிகளையும் எடுத்துச் சென்றார். முன்னதாக அப்சல் கான் 12 ஆண்டுகள் வாய் பகுதியில் சுபேதராக இருந்தார். எனவே அவருக்கு அந்த இடம் நன்கு பரிச்சயமானது. மிகுந்த பெருமையுடன் அவர், மகாராஷ்டிரா நோக்கிய தனது பயணத்தைத் தொடங்கினார்.

**சுயராஜ்யத்திற்கு ஆபத்து:**

அச்சமயத்தில் சிவாஜி ராஜ்காட்டில் இருந்தார். அவருக்கு அப்சல்கானின் நடவடிக்கை பற்றிய செய்தி கிடைத்தது. சுயராஜ்யம் மிகுந்த ஆபத்தில் இருப்பதை உணர்ந்தார். எனினும் அவர் தனது துணிவை இழக்கவில்லை. அப்சல்கான் கபடமானவர் என்பதையும் அவருடைய படை மிகப்பெரியது என்பதையும் சிவாஜி அறிந்திருந்தார். ஆனால் அப்சல்கான் படையுடன் ஒப்பிடுகையில் சிவாஜியின் ராஜ்யமும் படையும் சிறியதே மிகச் ஆகும். சிவாஜி நேருக்கு நேராக அப்சல்கானை எதிர்க்க முடியாது என்பதை உணர்ந்திருந்தார். போர்த்தந்திர நடவடிக்கைகளால் மட்டுமே அப்சல்கானை வெற்றி கொள்ள முடியும் என்று நம்பினார். ஜீஜாபாயின் ஆலோசனையுடனும் ஆசீர்வாதத்துடனும் மாமன்னர் சிவாஜி தலைமையகத்தை ராஜ்காட்டில் இருந்து பிரதாப்காட்டிற்கு மாற்றினார்.

## அப்சல்கானின் எதிர் நடவடிக்கை:

சிவாஜி பிரதாப்காட் சென்று விட்டதை அறிந்த அப்சல்கான் கடுங்கோபமுற்றார். பிரதாப்காட்டை வெற்றி கொள்வதில் உள்ள இன்னல்களை அவர் அறிந்திருந்தார். அது அடர்ந்த காடுகளாலும் உயர்ந்த குன்றுகளாலும் சூழப்பட்டு இருந்தது. கோட்டைக்குச் செல்வதற்குச் சரியான பாதை கூட இல்லை. அவரது படைகள் செல்வது மிகக் கடினம். மேலும் அப்பகுதியில் காட்டு விலங்குகள் நிறைந்து காணப்பட்டன.

அப்சல்கான் சிவாஜியைக் கீழே சமவெளிக்குக் கொண்டு வர பல நடவடிக்கைகளைக் கையாண்டார். அதற்காக புனித நகரங்களான துல்ஜாப்பூர், பண்டர்பூர் ஆகியவற்றைத் தாக்கினார். இத்தந்திரச் செயல்களால் சிவாஜி சமவெளிக்கு வருவார் என நம்பினார். சிவாஜிக்கு அப்சல்கானின் சூழ்ச்சி புரிந்தது. எனவே பிரதாப்காட்டை விட்டு கீழே இறங்கவில்லை. இதன் பிறகு அப்சல்கான் தனது அடுத்த திட்டத்தை செயல்படுத்தினார். தோழமை உணர்வுடன், ''நீ எனது மகனைப் போன்றவன். என்னை வந்து பார். எங்களது கோட்டைகளைத் திரும்பக் கொடுத்து விடு. அடில்ஷாவிடம் உன்னைத் தமது படைத்தளபதியாக்கச் சொல்கிறேன்,'' என்று செய்தி அனுப்பினார்.

## பழிக்குப் பழி:

அப்சல்கான் தன்னுடன் கபட நாடகமாடுகிறார் என்பதை சிவாஜி உணர்ந்தார். அவர் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்டார். அவர் அப்சல்கானை வசப்படுத்தி கோட்டைக்கு இழுக்க முடிவு செய்தார். ''கான் சாகேப், நான் உங்களது கோட்டைகளைப் பிடித்து கொண்டது தவறு என ஒத்துக் கொள்கிறேன். அதற்காக நீங்கள் என்னை மன்னித்துவிட வேண்டும். தயவுசெய்து பிரதாப்காட் கோட்டையின் அடிவாரத்தில் என்னை வந்து சந்திக்க வேண்டும். நான் உண்மையிலேயே சமவெளியில் வந்து உங்களை சந்திக்க அஞ்சுகிறேன்,'' என்று சிவாஜி அப்சல்கானுக்குப் பதில் அனுப்பினார்.

மாமன்னர் சிவாஜியின் இப்பதில் அப்சல்கானுக்கு மனநிறைவு அளித்தது. தனது தாடியை விரல்களினால் தடவிவிட்டுக்கொண்டே புன்னகையுடன் ''இது ஒரு நல்ல செய்தி. இந்தப் பலசாலியான அப்சல்கானுக்கு எதிராக சிவாஜியால் என்ன செய்துவிட முடியும்?



**பிரதாப்காட் கோட்டை**




என்னோடு சண்டையிடும் துணிவு அவனுக்கு இல்லை. நானே பிரதாப்காட்க்குச் சென்று அவனை சந்திக்கும்போது அவனுடைய வாழ்வுக்கு ஒரு முடிவு கட்டுவேன்,' என்று கூறினார். எனவே சிவாஜியின் வேண்டுகோளுக்கு உடன்பட்டு சிவாஜியை பிரதாப்காட்டில் சந்திக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்.

**சந்திக்கும் இடம்:** பிரதாப்காட் மீதுள்ள ஒரு சமதளமே சந்திக்கும் இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. நாளும் பொழுதும் உறுதி செய்யப்பட்டது. இருவரும் தங்களுடன் ஒரு பணியாளரை அழைத்துச் செல்லவும் மற்றும் பத்து மெய்க்காப்பாளர்கள் சற்று தொலையில் பின்தொடரவும் தீர்மானிக்கப்பட்டது. அப்சல்கானுடைய வசதிக்காக ஒரு தனிப் பாதையும், இருவரின் சந்திப்பிற்காக ஒரு பெரிய கூடாரமும் அமைக்கப்பட்டது.

சிவாஜி தன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் மிகுந்த எச்சரிக்கையுடன் எடுத்தார். அவர் தனது படையைப் பல சிறுசிறு பிரிவுகளாகப் பிரித்தார். ஒவ்வொரு பிரிவும் எங்கு மறைந்திருப்பது எப்பொழுது எவ்வாறு செயல்படுவது எனக் கூறப்பட்டது. அவர் தனது பாதுகாப்பிற்கான அனைத்து நடவடிக்கைளையும் செய்து முடித்தார். அப்சல்கானின் பேச்சை நம்ப முடியாது. எனவே அவரை சந்திக்கும் முயற்சியைத் தவிர்க்கும்படி சிவாஜியின் ஆலோசகர்கள் பலர் கூறினர். ஆனால் சிவாஜி இந்த அறிவுரையை முன்னேற்பாட்டின்படி ஒதுக்கிவிட்டு அப்சல்கானை சந்திக்க முடிவு செய்தார்.

**சந்திப்பிற்கு முன் ஏற்பாடு:** சந்திப்பு நாளன்று காலையில் சிவாஜி பவானி கோவிலுக்குச் சென்று வழிபட்டார். பின்பு தகுந்த ஆடைகளை அணியத் தொடங்கினார்.

சர்வார் என்னும் ஆடையையும் மார்புக்கவசத்தையும் அணிந்தார். போர்க்கவசத்தின் மேலாக குர்தாவையும் ஒரு அலங்கார அங்கியையும் அணிந்தார். தலைக்கு தலைக்கவசம் அணிந்தார். அதைச் சுற்றி தலைப்பாகையையும் கட்டினார். தனது இடது கைவிரல்களில் புலிநகத்தைப் பொருத்தினார். இடது கை உள்பக்கம் மறைவாக ஒரு பிச்சு வாவை (உறைக்கத்தி) மறைத்து வைத்தார். பின்னர் தன் கையில் ஒரு பட்டாக்கத்தியை எடுத்துக் கொண்டு அப்சல்கானைச் சந்திக்கத் தயாரானார்.

எல்லா படைத்தளபதிகளும் வெளியே காத்துக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்து ''நண்பர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளைத் தவறாது செய்து முடியுங்கள். பவானி அன்னை நம்மை வெற்றியடையச் செய்வாள் என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் நிலைமை வேறு விதமாகச் சென்று ஒருவேளை நான் கொல்லப்பட்டால் மனம் தளர்ந்து விடாதீர்கள். சம்பாஜியை அரியணையில் ஏற்றி அன்னை ஜீஜாபாயின் ஆலோசனைப்படி செயல்படுங்கள். அதன் எல்லைகளை விரிவுபடுத்துங்கள். குடிமக்களை மகிழ்ச்சிப் படுத்துங்கள். நான் இப்பொழுது அப்சல்கானை சந்திக்கச் செல்கிறேன்,' என்று கூறினார். சிவாஜியுடன் அவரது வழக்கறிஞர் பந்தாஜி கோபிநாத்தும்



**சிவாஜி - அப்சல்கான் சந்திப்பு**

பத்து மெய்க்காப்பாளர்களான ஜீவாஜி மஹாலா, சம்பாஜி காவ்ஜி ஏசாஜி கங்க், கிருஷ்ணாஜி கெய்க்வாட், சித்தி இப்ராஹிம் மற்றும் பலரும் சென்றனர்.

சிவாஜி கூடாரத்தை அடைந்தபோது அப்சல்கான் ஏற்கெனவே வந்திருப்பதைப் பார்த்தார். அப்சல்கான் தனது வருங்கால நடவடிக்கைளைத் திட்டமிடுவதில் சுறுசுறுப்பாய் இருந்தார். அவரருகில் படாசையது என்னும் பெயருடைய ஆயுதம் தாங்கிய வீரன் ஒருவன் நின்றிருந்தான். அவன் பட்டாக்கத்தியைப் பயன்படுத்துவதில் மிகுந்த திறமை உடையவன். கூடாரத்தின் நுழைவாயிலுக்கு வந்த சிவாஜி படாசைய்யதைக் கண்டதும் மேலும் உள்ளே செல்லாமல் அங்கே நின்று விட்டார். சிவாஜி உள்ளே வருவதற்குப் பதிலாக ஏன் நுழைவாயிலில் நின்று விட்டார் என சிவாஜியின் வழக்கறிஞரிடம் அப்சல்கான் கேட்டார்.

வழக்கறிஞர், ‘அவர் படா சைய்யதுக்குப் பயப்படுகிறார். தயவுசெய்து அவனை அப்பால் போகச் சொல்லுங்கள்,‘ என்றார். படா சையத் வெளியேறியதும் சிவாஜி உள்ளே அடியெடுத்து வைத்தார். அப்சல்கான் எழுந்து, ‘‘வரவேண்டும் சிவாஜி மன்னரே! நமது நட்பிற்கு அடையாளமாக இருவரும் கட்டித் தழுவுவோம்,’’ என்று கூறினார்.

**அப்சல்கானுடன் போராட்டம்:** மாமன்னர் சிவாஜி மிகுந்த எச்சரிக்கையுடன் முன்னே அடியெடுத்து வைத்தார். அப்சல்கான் அவரைத் தன்னுடன் தழுவிக் கொண்டார். அரக்க உருவம் கொண்ட கானுடன் ஒப்பிடும்போது சிவாஜி குள்ளமாக இருந்தார். அக்கணமே அப்சல்கான் சிவாஜியின் கழுத்தை இரும்புப்பிடியாகப் பிடித்து தன்னுடைய பிச்சுவாவினால் குத்தினார். அது சிவாஜியின் மேலங்கியை ஒருபுறமாகக் கிழித்தது. ஆனால் உள்ளே அணிந்திருந்த கவசம் அவரைக் காத்தது. தன்னைக் கொல்ல முயற்சித்ததை அறிந்த சிவாஜி புலி நகத்தை வேகமாக கானின் வயிற்றினுள் செருகினார். வலது கையினால் பிச்சுவாவை வேகமாக வெளியே எடுத்து கானின் வயிற்றைக் குத்திக் கிழித்தார். காயமுற்ற அப்சல்கான் கீழேவி ழுந்தார். இதைக் கண்ட அப்சல்கானின் வழக்கறிஞர் கிருஷ்ணாஜி பாஸ்கர் தன் வாளுடன் முன்வந்து சிவாஜியைத் தாக்கினார். ஆனால் சிவாஜி தனது பட்டாக்கத்தியால் ஒரே

வீச்சில் அவரைக் கொன்றார். இக்கூக்குரலைக் கேட்ட படாசையத் கூடாரத்தினுள் விரைந்தார். அவர் சிவாஜியைத் தாக்கத் தயாராகும்போது இருவருக்குமிடையே சிவாஜியின் மெய்க்காப்பாளர் ஜிவாஜி மஹாலா புகுந்து அடித்து அவனைக் கொன்றார். ''ஜிவாவினால் சிவாஜி தப்பினார்'' என்ற வாக்கு பின்னாளில் நிலவியது. சம்பாஜி காவ்ஜி இச்ச ண்டையின்போது பெரும் வீரத்தை வெளிப்படுத்தினார்.

**அப்சல்கான் படையின் சீர்குலைவு:** இவ்வாறு வெற்றியுடன் சிவாஜி கோட்டைக்குச் சென்றார். கோட்டைக்குச் சென்ற அடையாளமாகக் குண்டுகள் முழங்கின. உடனே திட்டமிட்டப்படி மறைவிடங்களில் இருந்து சிவாஜியின் வீரர்கள் வெளிப்பட்டு அப்சல்கானின் படையைத் தாக்கினர். தாக்குதலுக்கு ஆயத்தமற்ற நிலையில் அப்சல்கானின் படைகள் இருந்ததால் அவை ஒரு கடினமானச் சூழலுக்குத் தள்ளப்பட்டன. அப்சல்கானின் படைவீரர்களால் தங்கள் உயிரைப் பாதுகாக்க தப்பித்து ஓட முடியவில்லை. மராத்தியப் படைகள் அவர்களை விரட்டிச் சென்று கானுடைய பலமிக்க படை முழுவதையும் அழித்தனர். அப்சல்கானின் மகன் பசல்கான் மிகுந்த சிரமத்துடன் தப்பி பிஜப்பூரைச் சென்றடைந்தான், அவன் அங்கு சென்று நடந்த போரின் பேரழிவுகளைப் பற்றிக் கூறினான். இதைக் கேட்ட பிஜப்பூர் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது.

இவ்வாறு சிவாஜி அதிக பலம் வாய்ந்த பிஜப்பூர் படைத்தளபதியை அடக்கினார். அவரது புகழ் எங்கும் பரவியது. அவருடைய வீரச் செயல்கள் குறித்த பாடல்கள் சயாத்திரியின் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் எதிரொலித்தன.

## சுயகற்றல்

**1. கொடுக்கப்பட்ட எழுத்துகளில் இருந்து சரியான வார்த்தையை உருவாக்குக.**

(அ) ர, தா, பி, ப், ட், கா ....................

(ஆ) வா, ஜி,சி ....................

(இ) ன், ல், ச, அ, ப்,கா....................

**2. ஒரே வாக்கியத்தில் விடையளி.**

(அ) அப்சல்கான் எந்தச் சவாலை ஏற்றுக் கொண்டார் ?

(ஆ) அப்சல்கான் தோழமை உணர்வுடன் சிவாஜிக்கு அனுப்பிய செய்தி யாது ?

**3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை தருக.**

(அ) அப்சல்கானிடம் சண்டையிட சிவாஜி சில போர்த்தந்திர நடவடிக்கைகளை எடுக்க நேரிட்டது ஏன்?

(ஆ) சிவாஜி அப்சல்கானிடம் செல்வதற்கு முன் தனது படைத்தளபதிகளுக்கு கூறியது யாது?

**4. காரணம் தருக.**

(அ) சிவாஜி பிரதாப்காட்டிற்கு சென்று விட்டதை அறிந்த அப்சல்கான் கடுங்கோபமுற்றான்.

(ஆ) பிஜப்பூர் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்தது.

**செயல்**

வரலாற்று நிகழ்ச்சி களோடு தொடர்புடைய சில மராத்திய பழமொழிகள் அல்லது கூற்றுகளைச் சேகரிக்கவும்.

எ.கா. ''ஜிவாவினால் சிவாஜி தப்பினார்''

# 10. வீரத்துடன் காக்கப்பட்ட கோட்கணவாய்

**பன்ஹாலாவின் வெற்றி, அடில்ஷாவின் கோபம்:** அப்சல்கானின் இறப்பாலும், அவருடைய படைகள் முற்றிலும் அழிந்ததாலும் பிஜப்பூர் மிகுந்த சோகத்தில் மூழ்கியிருந்த வேளையில் பிஜப்பூரின் கீழ் இருந்த பன்ஹாலா கோட்டையை சிவாஜி கைப்பற்றினார். இதனால் அடில்ஷா கடுங்கோபம் அடைந்தார். அவரால் உண்ணவோ உறங்கவோ முடியவில்லை. அடில்ஷா சிவாஜிக்கு எதிராக சித்தி ஜவுகரை அனுப்பினார். சித்தி ஜவுகர் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டார். பசல்கான் தன் தந்தையின் மரணத்திற்கு பழிக்குப் பழி வாங்குவதற்காக சித்தி ஜவுகருடன் சென்றார்.

**பன்ஹாலா கோட்டையின் முற்றுகை:** சித்தி ஜவுகர் வீரமிக்கவர். ஆனால் கொடூரமானவர். ஒழுங்கை நிலைநாட்டுவதில் மிகக் கடுமையானவராகவும் இருந்தார். அவர் பன்ஹாலா கோட்டையை நான்கு புறமும் முற்றுகையிட்டு அக்கோட்டைக்குள்ளேயே சிவாஜியைக் காவலில் வைத்தார். மழைக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. மழை ஆரம்பித்தும் சித்தி ஜவுகர் முற்றுகையை அகற்றி விடுவார் என்று சிவாஜி எண்ணினார். மாறாக சித்தி ஜவுகர் மழைக்காலம் ஆரம்பித்ததும் முற்றுகையை மேலும் தீவிரப்படுத்தினார். கோட்டைக்குள் இருந்த உணவுப் பொருள்கள் முற்றிலும் தீர்ந்துவிட்டன. இந்நிலையில் சக்தியால் வெல்ல முடியாது, யுக்தியால் மட்டுமே முற்றுகையிலிருந்து விடுபட முடியும் என சிவாஜி முடிவு செய்தார். அதன்படி ‘‘விரைவில் கோட்டையை உன்னிடம் ஒப்படைக்கிறோம்’’ என்று சித்தி ஜவுகருக்கு ஒரு செய்தி அனுப்பினார். சித்தி ஜவுகர் மகிழ்ச்சி அடைந்து அதை ஏற்றுக்கொண்டார்.

நெடுநாளைய முற்றுகையினால் சித்தியின் படைவீரர்கள் களைப்படைந்துவிட்டனர். ஏற்கனவே சிவாஜி கோட்டையை ஒப்படைக்க ஒப்புக் கொண்டதனால் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் தங்கள் காவலைத் தளர்த்தி, நன்றாக உண்டும் கேளிக்கைகளில் ஈடுப்பட்டும் மகிழ்ந்தனர்.

**சிவாஜி முற்றுகையிலிருந்து தப்பித்தல்:** சிவாஜி முற்றுகையிலிருந்து தப்பித்துச் செல்ல ஒரு திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி இரண்டு பல்லக்குகள் தயார்படுத்தப்பட்டன. ஒரு பல்லக்கில் சிவாஜி கடினமான மாற்றுப் பாதை வழியாக வெளியேறுவார். மற்றொன்றில் சிவாஜியைப் போன்று மாறுவேடம் போட்டவர் கோட்டை வாசல் வழியாக வெளியே செல்வார். இரண்டாவது பல்லக்கை எதிரிகள் எளிதாக கண்டு கொள்வதால் அதைக் கைப்பற்றி விடுவார்கள். எதிரிகள் சிவாஜியைப் பிடித்து விட்டதாக எண்ணி மகிழும் வேளையில் உண்மையான சிவாஜி கடினமான மாற்றுப்பாதை வழியாகச் சென்று தப்பித்து விடலாம் என்பதே அத்திட்டமாகும். ஆனால் சிவாஜியைப் போன்று மாறுவேடம் யார் போடுவார்? இப்படி கொள்பவர் மாறுவேடத்தை ஏற்றுக் மரணத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் ஒரு தைரியமிக்க இளைஞன் இதற்கு ஒப்புக் கொண்டான். அவன் தோற்றத்தில் சிவாஜியைப் போல் இருந்தான். அவன் பெயர் சிவா காஷித் இருந்தது. சிவாஜியின் சேவகர்களில் இவன் சிகை அலங்காரம் செய்யும் பணியில் இருந்தான். அவன் தைரியச ாலியாகவும் புத்திசாலியாகவும் இருந்தான்.

திட்டமிட்டப்படி, சிவாஜியைப் போன்று வேடமிட்டவரின் பல்லக்கு கோட்டை வாசலைக் கடந்தது. பலத்த மழை பெய்து கொண்டு இருந்தது. எனினும் எதிரிப்படைவீரர்கள் சிலர் காவல் காத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் அந்த பல்லக்கை கைப்பற்றினர். அவர்கள் சிவாஜியைப் பிடித்து விட்டதாக எண்ணி பல்லக்கை சித்தி ஜவுகருடைய முகாமிற்குக் கொண்டு சென்றனர். முகாமில் ஆரவாரம் ஆரம்பம் ஆனது. இதற்கிடையில், சிவாஜி கடினமான மாற்றுப்பாதை வழியாகக் கோட்டையை விட்டு வெளியேறினார். அவருடன் பாஜிபிரபு தேஷ்பாண்டேயும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட படை வீரர்களும் சென்றனர். இங்கே சிறிது நேரத்தில் சிவாஜியின் மாறு வேடம் வெளிப்பட்டது. ஆத்திரமடைந்த சித்தி உடனே அந்த இளைஞனைக் கொன்றார்.

சிவாஜிக்காகவும் சுயராஜ்யத்திற்காகவும் மாறுவேடமிட்ட இந்த சிவா காஷித் உயிர் தியாகம் செய்து வரலாற்றில் நீங்கா இடம் பெற்றான்.

சிவாஜி தன்னை ஏமாற்றியதை உணர்ந்த சித்தி கடுங்கோபமுற்றார். உடனே அவர் சித்தி மசௌளத்தைப் பெரிய படையுடன் விரைந்து சென்று சிவாஜியைப் பின் தொடர்ந்து செல்லும்படி அனுப்பினார். விரட்டிச் சென்ற குதிரைப்படை வீரர்கள் அதிகாலையில் பாண்டர்பாணி நீரோடையில் சிவாஜியை நெருங்கினர். இப்போது சிவாஜி உண்மையாகவே ஆபத்தில் சிக்கிக் கொண்டார். எப்படியோ மிகுந்த சிரமத்துடன் அவரும் அவருடன் இருந்தவர்களும் கோட் கணவாயைக் கடந்தனர்.

**வீரமுள்ள பாஜிபிரபு:** ஆத்திரமடைந்த சித்தியின் போர்ப்படைகள் கோட் கணவாயை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தனர். எதிரிகள் வருவதற்குள் விசால்காட்டை அடைவது கடினம் என்று சிவாஜி புரிந்து கொண்டார். அவர் பாஜிபிரபுவிடம், ‘பாஜி ! இது ஒரு சிக்கலான சூழலாகும். நாம் கடக்க இருக்கும் வழி செங்குத்தானது மற்றும் எதிரிகள் நம்மை நெருங்கிவிட்டனர். இப்பொழுது விசால் காட்டை அடைய முடியாது. ஆகவே நாம் எதிரிகளை எதிர்கொண்டு போரிடுவோம்’’ என்றார். சிவாஜியின் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் குழப்பத்தை பாஜிபிரபு புரிந்து கொண்டார். எதிரிகள் கோபத்துடன் வேகமாக கணவாயை நெருங்கிக் கொண்டிருக்கின்றனர். சிவாஜியின் உயிரும் அதனால் சுயராஜ்யமும் ஆபத்தான நிலையில் உள்ளது. பாஜிபிரபு மன உருக்கத்துடன் சிவாஜியை நோக்கி ‘‘மகாராஜா,நீங்கள்சில வீரர்களை அழைத்துக் கொண்டு விசால்காடுக்குச் செல்லுங்கள். மீதியுள்ள வீரர்களுடன் நான் கணவாயில் நின்று கொண்டு இருக்கிறேன். மகாராஜா ! என் உயிரைவிடுவேனே தவிர எதிரிகளை கணவாயைக் கடக்க விடமாட்டேன். ஒரு பாஜி இறந்தால் எனக்குப் பதிலாக பல பாஜிக்கள் கிடைப்பார்கள். ஆனால் நமது சுயராஜ்யத்துக்கு சிவாஜி மகாராஜா மிகவும் அவசியம். எதிரிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. நம்மிடம் இருக்கும் குறைந்த வீரர்களைக் கொண்டு நம்மால் ஈடு கொடுக்க முடியாது. தாங்கள் இங்கே நிற்க வேண்டாம். கணவாயின் நுழைவில் நாங்கள் எதிரிகளை தடுத்து நிறுத்துவோம். விஷால்காட்டை பாதுகாப்புடன் சென்றடையும்வரை அவர்களைத் தடுத்து நிறுத்துவோம். நீங்கள் பயப்படாமல் செல்லுங்கள்‘ என்று கூறினார். பாஜிபிரபுவின் ராஜ பக்தியைக் கண்டு சிவாஜியின் கண்களில் கண்ணீர் வடிந்தது. தன்னுடைய பாதுகாப்பிற்காக மனிதருள் மாணிக்கமாகிய பாஜிபிரபுவை ஆபத்தான சூழ்நிலையில் விட்டுச் செல்ல சிவாஜியின் மனம் பதறியது. ஆனால் சுயராஜ்யத்தை அடையும் வேட்கையால் அவர் மனதைக் கட்டுபடுத்திக் கொண்டார். அவர் பாசத்தோடு பாஜியை அரவணைத்து கூறியதாவது, ‘நாங்கள் விஷால்காட்டுக்குச் செல்கிறோம். நாங்கள் கோட்டையை அடைந்ததும் பீரங்கி முழக்கப்படும். பீரங்கி முழக்கம் கேட்டதும் கணவாயை விட்டுவிட்டு கோட்டைக்கு வரவும்.’’ என்றார்.

**பாஜி எதிரிகளை தடுத்தல்:** பாஜிபிரபுவை கணவாயில் விட்டு சிவாஜி விஷால் கோட்டையை நோக்கிச் சென்றார். சிவாஜியின் உருவம் கண்ணைவிட்டு மறையும் வரை பணிவான வணக்கத்தைத் தெரிவித்தார். பிறகு தன் கைகளில் வாளை ஏந்தி கணவாயின் வாயிலில் நின்றார். மாவள வீரர்களை சிறுசிறு குழுக்களாகப் பிரித்து பொருத்தமான இடங்களில் அவர்களை நிறுத்தினார். மாவளர்கள் பெரிய பாறைகளையும் கற்களையும் தங்களிடம் சேகரித்து வைத்து கொண்டு அவரவர் இடத்தில் தயாராக நின்றனர். கணவாயின் வாயில் பகுதியில் மாவளர்கள் பலமான தடுப்பாக நிறுத்தப்பட்டனர். அதற்குள் எதிரிகளின் போர் முழக்கம் கேட்டது. எதிரிகள் கணவாயின் அடிவாரத்தை அடைந்து விட்டனர். பாஜி தன் படை வீரர்களிடம் ‘துணிவுள்ள வீரர்களே எச்சரிக்கையாக இருங்கள்! நீங்கள் உயிரே போனாலும்கூட உங்களது இடத்தை விட்டு நகராதீர்கள். கணவாயை அடைய எதிரிகளை அனுமதிக்காதீர்கள்‘ என்று கூறினார். பாஜி பிரபுவும் அவருடைய மாவள வீரர்களும் கணவாயின் வாயிலில் அச்சமின்றி உறுதியுடன் எதிரிகளை எதிர் நோக்கி நின்றனர். கணவாயின் பாதை கரடுமுரடாகவும் வளைந்து நெளிந்தும் இருந்தது. ஒரே நேரத்தில் மூன்று நான்கு பேர் மட்டுமே மிகுந்த சிரமத்துடன் தான் மேலே ஏற முடியும்.



கோட் கணவாயில் சிவாஜி மற்றும் பாஜி பிரபு தேஷ்பாண்டே

மறுபுறத்தில் சிவாஜி விஷால் காட்டை நோக்கி புயல்வேகத்தில் சென்று கொண்டிருந்தார். அக்கோட்டை சற்று தூரத்தில் இருந்தாலும் அதை அடைவதற்குக் குறைந்தது இரண்டு மணி நேரம் தேவைப்பட்டது. அந்த இரண்டு மணி நேரமும் பாஜிபிரபு எதிரிகளைத் தடுத்து நின்றால் தான் சிவாஜியின் நோக்கம் வெற்றியாக முடியும்.

**கணவாய் போர் :** இங்கே கணவாயில் போரின் உச்சக்கட்டம் ஆரம்பமாயிற்று. எதிரிகள் கணவாயில் ஏறத் தொடங்கினர். எதிரிப்படையின் முதல் பிரிவினர் கணவாயின் மீது ஏறி கடுமையாகப் போரிட்டனர். கவண் எறிவதில் வல்லவர்களாகிய மாவளர்கள் கற்களை எறிந்தும் மழை பொழிந்தது போல பாறைகளை உருட்டியும் பகைவர்கள் பலரைக் கொன்றனர். எதிரிப் படையின் முதல் பிரிவு தோல்வி அடைந்து பின்வாங்கியது. அதன் பின்பு அடுத்த பிரிவு கடும் முயற்சியுடன் கணவாயில் ஏறத் தொடங்கியது. பாஜிபிரபு பகைவர்களின் படைகளைத் தாக்க மாவளர்களை உற்சாகப்படுத்தினார். மராட்டியப் போர் முழக்கமான 'ஹர ஹர மகாதேவ்' என்று கர்ஜித்துக் கொண்டு எதிரிகளைத் தாக்கி அழித்தனர். மறுபடியும் மழை பொழிந்தது போல பாறைகளை உருட்டி எதிரிகளின் படையைச் சின்னாபின்னமாக்கினர். பாஜி தனது வீரர்களை நோக்கி சபாஷ் என்னுடைய வீரர்களே! இன்னும் பாறைகளை உருட்டுங்கள், எதிரிகளைக் கடுமையாக தாக்குங்கள்! உங்களுக்குப் பாராட்டுக்கள்'' என்று மெய்மறந்து கத்தினார். பகைவர்களின் இரண்டாவது படைப் பிரிவும் தோற்கடிக்கப்பட்டது.

அங்கே சிவாஜி கிட்டதட்ட விஷால்காட்டை நோக்கி குதிரை வேகத்தில் சென்று கொண்டிருந்தார். கோட்டையின் அடிவாரத்தை நெருங்கி கொண்டிருந்தார். ஒவ்வொரு வினாடியும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. விஷால்காட்டின் அடிவாரத்திலும் எதிரிகள் முற்றுகையிட்டிருந்தனர். சிவாஜி தனது படைகளுடன் எதிரிகளைத் தாக்கினார். எதிரிகளுடன் போரிட்டுக் கொண்டே சிவாஜி முன்னேறிக் கொண்டிருந்தார். அவர் தனது மாவள வீரர்களுடன் எதிரிகளை முறியடித்து விஷால்காட்டின் நுழைவாயிலை நோக்கி ஓடினார்.

**பாஜியின் வீரச்செயல்:** கணவாயில் போர் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. சித்தி மசௌத் மிகவும் கோபம் அடைந்தார். அவருடைய மூன்றாவது படைப்பிரிவினர் கணவாயில் ஏற ஆரம்பித்தனர். மராத்தியர்கள் போரின் உச்சக்கட்டத்தை அடைந்தனர். எதிரிகள் பாஜிபிரபு மீது தாக்குதல் நடத்தினர். பாஜியை அவர்கள் சூழ்ந்து கொண்டனர். பாஜி மிகவும் ஆவேசமாய் போரிட்டார். அவர் தனது முழுபலத்தையும் பயன்படுத்திப் போரிட்டார். பாஜியினுடைய உடலில் பல இடங்களில் காயம் ஏற்பட்டது. உடலிலிருந்து இரத்தம் ஆறாக ஓடியது. இந்நிலையிலும் பாஜி கணவாயின் முகப்பை விட்டு நகரவில்லை. அவர் உடல் முழுவதும் இரத்தத்தால் தோய்ந்திருந்தும் அவர் பின்வாங்காமல் இருந்தார். அதே நேரத்தில் அவர் எதிரிகளைத் தாக்குவதற்கு மாவளர்களை வலியுறுத்தினார். மாவளர்கள் எதிரிகளை ஆவேசமாய் தாக்கினர். எதிரிகள் பின்வாங்கினர். பாஜிபிரபு மிகவும் படுகாயம் அடைந்திருந்தார். எனினும் மாவளர்களை விடாமல் போரிடும்படி ஊக்கப்படுத்தினார். அவருடைய முழு கவனமும் பீரங்கியினுடைய சத்தத்தின் பக்கமே இருந்தது.

**கோட் கணவாய் பாவன் கணவாய்ஆதல்:** பீரங்கியின் ஒலி முழங்கியது. பீரங்கியின் முழக்கம் போர்க்களத்தில் சிதைந்த பாஜியின் காதில் விழுந்தது. ''மாமன்னர் விஷால்காட்டை அடைந்து விட்டார். நான் என்னுடைய கடமையை நிறைவேற்றிவிட்டேன். இப்பொழுது நான் நிம்மதியாக உயிரை விடுவேன்,' என்று கூறிக்கொண்டே ராஜபக்தி கொண்ட பாஜிபிரபு உயிர் விட்டார். இச்செய்தியை விஷால்காட்டிலிருந்த சிவாஜி அறிந்ததும் அவர் மிகவும் வருத்தம் அடைந்தார். அவர், 'பாஜிபிரபு தேஷ்பாண்டே சுயராஜ்யத்திற்காக போர்க்களத்தில் தன்னுயிரை நீத்தார். பாவன் மக்கள் போரின் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டனர்,' என்றார்.

பாஜிபிரவுவைப் போன்று நாட்டுப்பற்று மிக்கவர்கள் பலர் இருந்தனர். எனவே சுயராஜ்யம் வெற்றியடைந்தது. இந்த தன்னலமற்றவர்களின் இரத்தத்தால் கோட்கணவாய் புனிதமாகியது. 'பாவன் கணவாய்' என்ற பெயருடன் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றது. நாம் நமது தொடர் வணக்கத்தை பாஜி பிரவுக்கும் அவருடைய வீரர்களுக்கும் செலுத்துகிறோம்.

## 1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) சித்தி ஜவுகர் ............. கோட்டையை முற்றுகையிட்டார்.

(ஆ) பாஜி பிரபுவின் ..................... கண்டு சிவாஜியின் கண்களில் கண்ணீர் வடிந்தது.

(இ) கோட்கணவாய் ........ என்ற பெயரில் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றது.

## 2. ஒரே வாக்கியத்தில் விடையளி.

(அ) பன்ஹாலா கோட்டையின் முற்றுகையிலிருந்து தப்பிப்பதற்காக சிவாஜி சித்தி ஜவுகருக்கு என்ன செய்தி அனுப்பினார் ?

(ஆ) சித்தி ஜவுகர் ஆத்திரமடைந்தது ஏன் ?

(இ) விஷால்காட்டை நோக்கிச் செல்லும்போது பாஜிபிரபுவிடம் சிவாஜி கூறியது யாது ?

## 3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளிக்கவும்.

(அ) பன்ஹாலா கோட்டையின் முற்றுகையிலிருந்து வெளியேற சிவாஜி என்ன திட்டம் தீட்டினார் ?

(ஆ) பாஜிபிரபு எதிரிகளை கோட்கணவாயிலேயே நிறுத்தி வைப்பதற்காக என்னென்ன ஏற்பாடுகள் செய்தார் ?

## 4. காரணம் கூறுக.

(அ) அடில்ஷா கடுங்கோபமுற்றார்.

(ஆ) சிவாஜி மகாராஜாவிற்காக செய்த தியாகத்தால் சிவா காஷித் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றான்.

(இ) பாவன்கணவாய் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றது.

## 5. யார் என எழுதுக.

(அ) வீரமிக்கவர் ஆனால் கொடூரமானவர்: .........................

(ஆ) கோட் கணவாயில் உச்சக்கட்டப் போர் புரிந்தவர்: .....................................

(இ) முற்றுகையிலிருந்து தப்பித்தவர்: ..................................

## செயல்

ஆசிரியரின் உதவியுடன் சிவாஜி மகாராஜாவிற்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்கள் பற்றி மேலும் பல தகவல்களைத் திரட்டுக.

# 11. செயிஷ்டகானின் படுதோல்வி

**செயிஷ்டகானின் போர்ப்பணி:**

பலமுறை முயற்சி செய்தும் பிஜப்பூர் அடில்ஷாவால் சிவாஜியைச் சரணடைய வைக்கமுடியவில்லை. சிவாஜிக்கு எதிராக அனுப்பப்பட்ட ஒவ்வொரு பிஜப்பூர் படைத்தலைவர்களும் தோற்கடிக்கப்பட்டனர். முடிவில் அடில்ஷா போரைக் கைவிட்டு சிவாஜியுடன் சமாதானத்தை ஏற்படுத்தி அவரது சுதந்திர அரசுக்கு அங்கீகாரம் அளித்தார். இதனால் சிவாஜி தனது தென் எல்லையில் சிறிது காலத்திற்கு நிம்மதியாக இருந்தார்.

இதற்கிடையே வடக்கிலிருந்து மொகலாயர் படை மகராஷ்டிராவைத் தொடர்ந்து தாக்கியது. இந்தத் தொடர் தாக்குதலால் மகாராஷ்டிரா நிலைகுலைந்து போனது. இந்த வேளையில் டில்லியில் ஔரங்கசீப் மொகலாயப் பேரரசராக இருந்தார். அவரது ஆட்சிக்குட்பட்ட பகுதியில் சிவாஜி தாக்குதல் நடத்தினார். இதனால் கோபமடைந்த ஔரங்கசீப் தனது மாமனான செயிஷ்டகானை, சிவாஜியை எதிர்த்துச் சண்டையிட்டு அவருக்கு ஒரு பாடம் கற்பித்து வரும்படி அனுப்பி வைத்தார். செயிஷ்டகான் 75,000 படை வீரர்கள், நூற்றுக்கணக்கான யானைகள், ஒட்டகங்கள் மற்றும் பீரங்கிகளுடன் புனேயை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் அவர் சிர்வல், சிவாப்பூர், சாஸ்வட் ஆகிய நகரங்களைக் கைப்பற்றினார். இறுதியாக புரந்தர் கோட்டையையும் முற்றுகை இட்டார். அவரது முன்னேற்றத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஒரு முறை ஒரு மலைக் கணவாயில் மராட்டியப் படைகள் அவரைச் சூழ்ந்து கொண்டன. மராட்டிய வீரர்கள் பீம்தடி குதிரையில் வேகமாகவும் எளிதாகவும் பயணம் செய்தனர். அவர்களால் தங்கள் படையின் உணவுப் பொருள்களான வெங்காயம், சோளரொட்டி போன்றவற்றுடன் மிகக் குறைந்த நேரத்தில் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் கடந்து செல்ல இயலும். மராட்டியர்கள் கையாளும் இத்தகைய போர்முறை செயிஷ்டகானுக்குத் தெரியாது. மராட்டியரின் தொடர் போராட்டத்தால் செயிஷ்டகான் புரந்தர் முற்றுகையை பலப்படுத்தினான்.

**பிரங்கோஜி நர்சாலா:** பின்னர் செயிஷ்டகான் தொடர்ந்து புனே நோக்கிச் சென்றார். முதலில் அவர் சாக்கன் கோட்டையைக் கைப்பற்றினார். கோட்டையைப் பாதுகாக்க பிரங்கோஜி நர்சாலா மிக வீரத்துடனும் திறமையுடனும் செயிஷ்டகானின் படைகளை எதிர்த்துச் சண்டையிட்டார். இரண்டு மாதங்களாக தொடர்ந்து போராடினார். எனினும் செயிஷ்டகானின் குண்டுகளுக்கு எதிராக அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பிரங்கோஜியின் வீரத்தைக் கண்டு வியந்த செயிஷ்டகான் மொகலாயப் பேரரசில் அவருக்கு வேலை வாங்கித் தருவதாக ஆசை காட்டினார். இருப்பினும் பிரங்கோஜி இணங்கவில்லை.

**லால்மஹாலில் செயிஷ்டகான்:** செயிஷ்டகான் புனே வந்து சிவாஜியின் உறைவிடமான லால்மஹாலைத் தனது தலைமையகமாக்கிக் கொண்டார். அவரது படை கோட்டையைச் சுற்றி இருந்தது. ஓரிரு ஆண்டுகள் கழிந்தன. செயிஷ்டகான் புனேயை விட்டு வெளியேறவில்லை. மாறாக, அவர் தம் படைகளை அனுப்பி சிவாஜியின் பகுதியைத் தாக்கிப் பயிர்களை அழிக்கவும் கால்நடைகளைக் கவர்ந்து வரவும் செய்தார். இவ்வாறு செயிஷ்டகான் லால்மஹாலைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களை நாசப்படுத்தினார்.

**துணிச்சலான திட்டம்:** செயிஷ்டகானுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்று சிவாஜி தீர்மானித்தார். ஒரு வழியில் செயிஷ்டகான் லால்மஹாலில் தங்கி இருந்தது நல்லதாகவே இருந்தது. சிவாஜிக்கு லால்மஹாலில் உள்ளும், புறமும், நுழைவாயிலும், வெளிவாயிலும், இரகசிய வழிகளும், ஜன்னல்களும் கதவுகளும் தெரியும். இதற்கிடையே சிவாஜியின் ஒற்றர்கள் செயிஷ்டகானின் போர் நடவடிக்கைகளைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தனர். எனவே, சிவாஜி ஓர் இரவு லால்மஹாலுக்குள் நுழைந்து செயிஷ்டகானை கொல்லத் தீர்மானித்தார். எவ்வளவு துணிச்சலான திட்டம் இது! லால்மஹாலின் உள்ளே ஓர் எறும்பு கூட நுழைய முடியாத அளவுக்கு காவல் பலமாக இருந்தது. அரண்மனையைச்சுற்றி 75,000 வீரர்கள்காவலில்



**சிவாஜி செயிஷ்டகானை தாக்குதல்.**

இருந்தனர். ஆயுதம் தாங்கிய எந்த மராட்டியனும் நகரத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. இருப்பினும் தனது எண்ணத்தில் சிவாஜி உறுதியாக இருந்தார்.

சிவாஜி தன் திட்டத்தை நிறைவேற்ற ஒரு நாளைக் குறித்தார். 1663 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5 ஆம் நாள் இரவு மேளதாளத்தோடு ஒரு திருமண ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. அந்த ஊர்வலத்தில் இன்னிசையும் வாணவேடிக்கையும் சேர்ந்து இருந்தது. நூற்றுக்கணக்கான மக்கள் நேர்த்தியான ஆடைகளை அணிந்திருந்தனர். சிலர் பல்லக்குகளிலும் சிலர் சிவிகைகளிலும் சென்றார்கள். சிலர் நடந்தும் சென்றனர். சிவாஜியும் அவருடைய நம்பிக்கைக்குரிய தோழர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். ஊர்வலம் லால்மஹாலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. லால்மஹால் அருகில் வந்ததும் சிவாஜியும் அவரது தோழர்களும் ஊர்வலத்தைவிட்டுப் பிரிந்து மெதுவாக லால் மஹால் பக்கம் சென்றனர். அந்நேரம் செயிஷ்டகான் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தார்.

**செயிஷ்டகான் பாடம் கற்றல்:**

சிவாஜி சுவரில் துளையிட்டு லால்மஹாலினுள் நுழைந்தார். அது சிவாஜியின் சொந்த உறைவிடமாக இருந்ததால் உள்ளே செல்லும் வழிகளைக் கண்டு பிடிப்பதில் எந்த இடையூறும் இருக்கவில்லை. கானுடைய மெய்க்காப்பாளர்கள் கண் அயர்ந்திருந்தனர். சிவாஜியின் வீரர்கள் அவர்களைக் கட்டிப் போட்டனர். சிவாஜி உட்புறம் வெகுதூரம் சென்றார். திடீரென ஒருவர் வாளோடு அவரை நோக்கிப் பாய்ந்து வந்தார். சிவாஜி அவரைக் கொன்றார். அப்போது அவர் கொன்றது செயிஷ்டகான் என்று நினைத்தார். ஆனால் அவர் செயிஷ்டகானின் மகனாக இருந்தார். அங்கே குழப்பமான சூழ்நிலை உருவானது. அதற்குள் மக்கள் விழித்துக் கொண்டனர்.

சிவாஜி நேராக கானின் அறைக்குச் சென்று தனது வாளை உருவினார். திடீரென சிவாஜியைக் கண்டதும் அஞ்சிப் போன கான் பேய்! பேய்! என அலறிக்கொண்டேஜன்னல்வழியாகத்தப்பமுயற்சித்தார். சிவாஜியும் அவர் பின்னாலேயே ஓடினார். செயிஷ்டகான் ஜன்னல் வழியாகக் குதிக்கும் வேளையில் சிவாஜி தனது வாளை வீசினார். அது செயிஷ்டகானின் மூன்று விரல்களை மட்டுமே வெட்டியது. கான் தனது உயிரை இழந்திருக்க வேண்டியது, ஆனால் மூன்று விரல்களை மட்டும் இழந்து ஜன்னலுக்கு வெளியே குதித்து தப்பித்தார். செயிஷ்டகானின் படைவீரர்களை ஏமாற்றுவதற்காக சிவாஜியும் அவரது வீரர்களும் ''சிவாஜி தாக்குகிறார்! ஓடுங்கள்! அவரைப் பிடியுங்கள்!'' எனக் கூச்சலிட்டவாறே ஓடத் தொடங்கினர். செயிஷ்டகானின் படைவீரர்களும் அஞ்சியப்படி எல்லாத் திசைகளிலும் ஓடத் தொடங்கினர். இக்குழப்பத்தைப் பயன்படுத்தி சிவாஜியும் அவரது வீரர்களும் தப்பியோடி சின்ஹாகாட்டை அடைந்தனர். செயிஷ்டகானின் வீரர்கள் இரவு முழுவதும் சிவாஜியையும் அவரது வீரர்களையும் தேடி அலைந்து களைப்புற்றனர். இச்செய்தி செயிஷ்டகான் மனதில் ஒரு அச்சத்தை ஏற்படுத்தியது. ''இன்று விரலை வெட்டினான், நாளை தலையை வெட்டுவான்,' என்று அவர் மிகவும் கலங்கினார். இந்நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்ற ஔரங்கசீப் மிகவும் கோபம் அடைந்தார். இதனால் பேரரசரின் நம்பிக்கையை செயிஷ்டகான் இழந்தார். ஔரங்கசீப் செயிஷ்டகானை வங்காளத்திற்கு மாற்றினார்.

இது மொகலாயப் பேரரசுக்கு முதல் பேரிடியாக இருந்தது. சிங்கத்தை அதன் குகையிலேயே சந்தித்து சிவாஜி வெற்றி கண்டார். சிவாஜி குண்டுகளின் பேரோசை இவ்வெற்றியைத் தெரிவித்தது. மகிழ்ச்சி அலை மகாராஷ்டிரா முழுவதும் வீசியது.

## சுயகற்றல்

### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

(அ) செயிஷ்டகான் ............... கோட்டையை முற்றுகை இட்டார்.
(புரந்தர், பன்காலா, சிவனேரி)

(ஆ) புனேயில் செயிஷ்டகான்.................. ஐ தனது தலைமையகமாக கொண்டார்.
(ஷனிவார்வாடா, லால்மஹால், பர்வதி)

(இ) ஔரங்கசீப் செயிஷ்டகானை ............. இக்கு மாற்றினார்.

### 2. ஒரே வாக்கியத்தில் விடை எழுதுக.

(அ) புனேக்கு செல்லும் வழியில் செயிஷ்டகான் எந்தெந்த நகரங்களைக் கைப்பற்றினார்?

(ஆ) செயிஷ்டகான் இறுதியாக புரந்தர் முற்றுகையை ஏன் பலப்படுத்தினான்?

(இ) செயிஷ்டகானுக்குப் பயத்தைக் கொடுத்தது எது ?

### 3. காரணம் தருக.

(அ) பேரரசர் ஔரங்கசீப் சிவாஜியின்மீது கோபம் அடைந்து செயிஷ்டகானை சிவாஜியிடம் அனுப்பினார்.

(ஆ) செயிஷ்டகான் ஜன்னல் வழியே தப்பிச் செல்ல முயற்சித்தார்.

### 4. சம்பவங்கள் அல்லது நிகழ்வுகளை காலக் கிரமப்படி எழுதுக:

(அ) சிவாஜியும் அவரது படைவீரர்களும் சின்ஹாகாட் கோட்டையை நோக்கிப் புறப்பட்டனர்.

(ஆ) செயிஷ்டகான் லால்மஹாலை தனது தலைமையகமாக மாற்றினார்.

(இ) செயிஷ்டகான் சாக்கன் கோட்டையைக் கைப்பற்றினார்.

(ஈ) சிவாஜி செயிஷ்டகானுக்கு ஒரு பாடம் கற்பித்தார்.

### செயல்

லால்மஹாலைச் சுற்றிப் பார்த்துவர ஒரு இன்பப் பயணத்தை ஏற்பாடு செய்க.

# 12. புரந்தர் முற்றுகை மற்றும் உடன்படிக்கை

**சூரத்தின் மீது தாக்குதல்:** சிவாஜி இந்த வெற்றிக்குப் பின் ஓய்ந்திருக்கவில்லை. ஔரங்கச்சீப்பின் படைகள் மகாராஷ்டிராவில் ஆங்காங்கே கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இதைப் பேரரசரின் கவனத்திற்குக் கொண்டுவர சிவாஜி துணிவுடன் சூரத்தில் தாக்குதல் நடத்தினார். சூரத் புனேயிலிருந்து வெகு தொலைவில் உள்ள ஒரு செழிப்பான நகரம் ஆகும். சூரத் மொகலாயப் பேரரசின் வர்த்தக மையமாகவும் செல்வம் கொழிக்கும் நகரமாகவும் விளங்கியது. சிவாஜி இத்தாக்குதலை வெற்றிகரமாக நடத்தி இலட்சக்கணக்கான பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றார். சிவாஜி சூரத் மீது தாக்குதல் நடத்துகையில் சமய நெறிமுறைகளை அவர் கைவிடவில்லை. அவர் மசூதி மற்றும் தேவாலயங்களைத் தாக்கவில்லை. பெண்களை அவர் அவமதிக்கவில்லை.

சூரத் தாக்குதல் ஔரங்கசீப்பை கடுங்கோபம் அடையச் செய்தது. எனவே அவர் மராட்டிய அரசுக்கு முடிவுகட்டத் தீர்மானித்தார். சிவாஜியை அடக்க பலம் வாய்ந்த தனது தளபதி மிர்சா ராஜேக்குத் துணையாக தனது நம்பிக்கைக்குரிய படைத் தளபதி திலேர்கானையும் அனுப்பி வைத்தார். இவ்விருவரும் பெரும் படையுடனும் செல்வத்துடனும் தக்காணத்தை வந்து அடைந்தனர். இப்போது சுயராஜ்யம் பெரும் ஆபத்தில் இருந்தது.

கி.பி 1664-இல் சூரத் படையெடுப்பில் இருந்து திரும்பிய உடன் சிவாஜி ஒரு துக்கமான செய்தியைக் கேள்வியுற்றார். வேட்டையாடும்போது தந்தை சகாஜிராஜே எதிர்பாராத விதமாக இறந்து விட்டார். சிவாஜியும் ஜீஜாபாயும் மிகுந்த கவலைக்குள்ளாயினர். தன் தாயை மார்போடு தழுவி சிவாஜி அவருக்கு ஆறுதல் அளித்தார்.

**மொகலாயப் படைகளின் புரந்தர் முற்றுகை:** புரந்தர் சிவாஜியின் பலமிக்க பெரிய கோட்டைகளுள் ஒன்றாக இருந்தது. இக்கோட்டையைக் கைப்பற்றினால் மட்டுமே சிவாஜியை அழிக்க முடியும் என்பதைத்



புரந்தர் கோட்டை

திலேர்கான் தெரிந்திருந்தார். இதனால் பலமிக்க இந்தக் கோட்டையை முற்றுகையிட்டார். அவரிடம் மிகப் பெரிய படை இருந்தது. அக்கோட்டையின் பொறுப்பாளரான முரார்பாஜி எந்த அச்சுறுத்தலுக்கும் அடிபணியாத துணிச்சலுள்ள போர்வீரர் ஆவார். அவருக்கு வீரம் மிகுந்த படைகள் துணை நின்றன. இந்த படைகளுடன் அவரும் போருக்குத் தயாரானார்.

திலேர்கானின் பீரங்கிகள் முழங்கின. பயங்கரமான பீரங்கிக் குண்டுகள் கோட்டையின் மேல் விழத்தொடங்கின. முரார்பாஜியும் அவருடைய துணிவான வீரர்களும் எதிர்த்து நின்றனர். துப்பாக்கியின் தோட்டாக்களினால் கோட்டையின்முகப்புபகுதிதரைமட்டமாக்கப்பட்டது. திலேர்கானின் படைகள் கோட்டையின் கீழ்த்தளத்தைக் கைப்பற்றின. மராட்டிய வீரர்கள் மேல் கோட்டையிலிருந்து தொடர்ந்து போரிட்டனர். திலேர்கான் தனது முகாமிலிருந்து போரைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

மிகுந்த சினமடைந்த முரார்பாஜி தேர்ந்தெடுத்த 500 வீரர்களுடன் மொகலாயப் படைகளைத் தாக்கத் தீர்மானித்தார். அவர் கோட்டையின் மேல் கதவுகளைத் திறந்து விட்டார். ''ஹர, ஹர, மகாதேவ்' என்னும் தங்களுடைய போர் முழக்கத்தை எழுப்பிக்கொண்டு மராட்டிய வீரர்கள் மொகலாயப் படைகளைத் தாக்கினர். சிறிது நேரத்துக்குள் முடிந்த அந்த பயங்கரப் போரில் மராட்டியர்கள் மிகப்பெரிய மொகலாயப் படைகளை விரட்டி அடித்தனர். அவை திலேகர்கானின் முகாமை நோக்கி ஓடின.

முரார்பாஜி தன் படைகளோடு அவர்களை மிக வேகமாகப் பின்தொடர்ந்து, திலேர்கானின் பாசறைக்குள் நுழைந்து நாசம் செய்தார். எதிரிப் படைகள் பயந்தோட மராட்டியர்கள் விரட்டித் தாக்கினர். பாசறை முழுவதும் அழுகையும் கூக்குரலும் நிரம்பியது. வெகு அவசரமாக திலேகர்கான் யானை மீதேறி போர்க் களத்தைப் பார்த்தார். அங்கு முரார்பாஜி எதிரிகளைக் கண்டந்துண்டமாக வெட்டி வீழ்த்திக் கொண்டிருந்தார். அவரது வாள் மின்னலைப் போல் சுழன்று எதிரிகளின் கழுத்தை வெட்டியது. தலையைப் பிளந்தது. மார்பைக் கிழித்தது. அவரைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியவில்லை. அவரது மாபெரும் வீரச் செயல்களைப் பார்த்து திலேர்கான் வாயடைத்து நின்றார்.

**முரார்பாஜியின் இணைற்ற வீரம்:** முழு வலிமையையும் பயன்படுத்தித் தாக்குங்கள் என்று தன் படையினருக்குக் கூறிய முரார்பாஜி திலேர்கானை நோக்கி முன்னேறிச் சென்றார். தன்னைத் தடுக்க முயன்ற ஒவ்வொருவரையும் வெட்டி வீழ்த்தினார். எனினும் இறுதியில் மொகலாயப் படையினர் அவரை சுற்றி வளைத்துக் கொண்டனர். உடனே திலேர்கான், ''பொறுங்கள்; உங்கள் வாள்களை கீழே போடுங்கள் என்று கூறியதும் மொகலாயப் படைகள் சிறிது பின் வாங்கின. பின்னர் திலேர்கான் முரார்பாஜியை நோக்கி, உன்னைப் போன்ற வாள் வீச்சில் ஈடு இணையில்லா வீரனை இந்நாள் வரை நான் கண்டதில்லை. நீ எங்களுடன் சேர்ந்துகொள். உன் முழு பாதுகாப்பிற்கு நான் உறுதியளிக்கிறேன். பேரரசர் உன்னைப் படைத்தளபதியாக்கி உனக்கு ஜாகீரும் அளிப்பார்,'' என்று கூறினார். இதைக் கேட்டதும் முரார்பாஜியின் கண்கள் சிவந்தன. நாங்கள் மாமன்னர் சிவாஜியின் நம்பிக்கைக்குரிய சேவகர்கள். உன்னிடமிருந்து பாதுகாப்பை யார் விரும்பியது? உன்னுடன் நாங்கள் ஏன் சேரவேண்டும்? உன் பேரரசின் ஜாகீர் யாருக்கு வேண்டும்? என்று கோபத்துடன் பதில் அளித்தார். பின்பு முரார்பாஜி திலேர்கானை நோக்கி முன்னேறி அவனுடைய வீரர்களைத் தாக்கத் தொடங்கினார். யானையின்மீது அமர்ந்து திலேர்கான் குறிபார்த்து எய்த அம்பு ஒன்று முரார்பாஜியின் கழுத்தில் பாய்ந்தது. முரார்பாஜி நிலத்தில் சாய்ந்தார். அவரது வீரர்கள் இறந்த அவரது உடலை கோட்டைக்கு எடுத்துச் சென்றனர். முரார்பாஜி மரணத்தால் அவரின் படைவீரர்கள் மிகவும் துக்கமடைந்தனர். எனினும் அவர்கள் தைரியத்தை இழக்கவில்லை. அவர்கள் ஒரு முரார்பாஜி இறந்தால் என்ன? நாங்களும் அவரைப் போலவே வீரமானவர்கள். நாங்களும் தைரியத்தைக் கைவிடாமல் துணிவுடன் போர் செய்வோம் எனக் கூறி திரும்பவும் போரில் ஈடுபட்டனர்.

முரார்பாஜி மரணமடைந்த செய்தியைக் கேள்வியுற்ற சிவாஜி மிகுந்த வருத்தமுற்றார். மொகலாயப் படையிடமிருந்து தங்கள் கோட்டைகளைப் பல ஆண்டுகள்வரை பாதுகாக்க முடியும் என்பதை சிவாஜி நம்பினார். ஆனால் தன்னுடைய வீரர்களின் உயிரைப் பணயம் வைத்து கோட்டைகளைப் பாதுகாப்பதில் சிவாஜிக்கு உடன்பாடில்லை.



**முரார்பாஜி தேஷ் பாண்டே- திலேர்கான் இடையிலான போர்**

**புரந்தர் உடன்படிக்கை:** சக்தி வாய்ந்த மொகலாயப் படையினரை எதிர்த்துப் போராட போதுமான படை பலம் அவரிடம் இல்லை. அரசியல் தந்திரங்கள் கூட அவருக்குப் போதிய பலனளிக்கவில்லை. எனவே தற்காலிகமாகப் போரை நிறுத்திவிட்டு மொகலாயர்களோடு ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளத் தீர்மானித்தார். அதனால் அவர் ஜெய்சிங்கை சந்தித்தார். இது மிக விவேகமான அரச தந்திரம் ஆகும். அவர் ஜெய்சிங்கிடம், ‘‘மிர்சா ராஜே! நீ ஒரு இராஜபுத்திரன் எங்களுடைய துன்பங்களை உன்னால் புரிந்து கொள்ள முடியும். ஔரங்கசீப்பின் படையெடுப்பால் மகாராஷ்டிரா சீரழிந்துள்ளது. மக்களும் பெருந்துன்பத்துக்கு உள்ளாகிறார்கள். மக்கள் மகிழ்ச்சியாக வாழ சுயராஜ்யப் பணியை நான் மேற்கொண்டுள்ளேன். இந்த உயரிய பணியில் நீயும் என்னுடன் சேர வேண்டும். எங்களுக்குத் தலைமை ஏற்று நடத்திச் செல்ல சம்மதித்தால் நானும் என்னைச் சார்ந்த மாவளர்களும் உனது நம்பிக்கைக்குரிய தோழர்களாக இருப்போம்,‘ என்று கூறினார். ஆனால் ஜெய்சிங் ராஜதந்திரம் மிக்கவன்.

அவன் சிவாஜியை ஒரு சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடும்படி வலியுறுத்தினான். சிவாஜியும் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு 23 கோட்டைகளையும் நான்கு இலட்சம் தங்க நாணயங்களையும் பேரரசருக்குக் கொடுத்தார். இந்தப் புரந்தர் உடன்படிக்கை கி.பி 1665 இல் கையெழுத்திடப்பட்டது.

உடன்படிக்கை கையெழுத்தானதும் ஆக்ராவுக்குச் சென்று பேரரசரை சந்தித்து வருமாறுஜெயசிங் சிவாஜியிடம் அறிவுறுத்தினார். சிவாஜி பாதுகாப்புடன் திரும்புவதற்கு உத்திரவாதம் அளிப்பதாகக் கூறினார்.



**சிவாஜி மகாராஜா - மிர்சா ராஜே ஜெய்சிங் சந்திப்பு**

சிவாஜி இதைப்பற்றிச் சற்று சிந்திந்தார். பேரரசர் நம்பிக்கையானவர் அல்லர் என்பது சிவாஜிக்குத் தெரியும். பேரரசர் தனது சொந்த சகோதரர்களிடமே மிகக் கொடூரமாக நடந்து கொண்டவர். ஆனால் இறுதியாக சிவாஜி இச்சூழ்நிலையைத் துணிவுடனும் எச்சரிக்கையுடனும் எதிர்கொள்ளத் தீர்மானித்தார். அவர் ஆக்ரா சென்று பேரரசரை சந்திக்க தயாராக இருப்பதாக ஜெய்சிங்கிற்குத் தெரியப்படுத்தினார்.

**1. சரியான சொற்களால் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(அ) .................. மொகலாயப் பேரரசின் சிறந்த வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. (புனே, சூரத், டெல்லி)

(ஆ) ..................புரந்தர் கோட்டையின் பொறுப்பாளராக இருந்தார். (பாஜி பிரபு, தானாஜி, முரார்பாஜி)

**2. ஒரே வாக்கியத்தில் விடையளி.**

(அ) சிவாஜி ஏன் சூரத்தைத் தாக்கினார்?

(ஆ) திலேர்கான் புரந்தர் கோட்டையை முற்றுகையிட்டது ஏன் ?

(இ) சிவாஜி மொகலாயப் பேரரசருடன் உடன்படிக்கை ஏற்படுத்தியது ஏன் ?

(ஈ) புரந்தர் உடன்படிக்கையின்படி எத்தனை கோட்டைகளை மொகலாயர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டியிருந்தது ?

**3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளி :**

(அ) முரார்பாஜியின் வீரத்தை அறிந்த திலேர்கான் கூறியது யாது?

(ஆ) முரார்பாஜி கூறிய பதில் யாது ?

**4. கொடுக்கப்பட்டுள்ள எழுத்துகளை முதல் எழுத்தாகக் கொண்டு பாடத்தில் வரும் பெயர்களை எழுதுக.**

(அ) ஔ .................

(ஆ) பு ..................

(இ) மு ..................

(ஈ) ஜெ .................

(உ) தி ..................

**செயல்**

அருகில் உள்ள கோட்டையைக் காண ஒரு இன்பச் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்க. ஆசிரியரிடமிருந்து அக்கோட்டையைப் பற்றிய விபரங்களைச் சேகரிக்கவும்.

# 13. பேரரசரிடமிருந்து சிவாஜி தப்பித்துக் கொள்ளல்

ஜெயசிங்மீது நம்பிக்கைக் கொண்டு பேரரசரை சந்திக்க சிவாஜி ஆக்ராவிற்குச் சென்றார். ஆக்ராவிற்குச் செல்லும் முன் தனது சுயராஜ்ய நிர்வாகத்தை அன்னை ஜீஜாபாயிடம் ஒப்படைத்து அவரிடம் ஆசி பெற்றார். அவரோடு அவரது மகன் சம்பாஜி ராஜேயும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில படைத் தலைவர்களும் நம்பிக்கைக்குரிய சில பணியாளர்களும் சென்றனர். அவர் தன்னோடு பெருஞ்செல்வத்தையும் கொண்டு சென்றார். படிப்படியாக அவர் ஆக்ராவைச் சென்றடைந்தார்.

**அரசரவையில் சிவாஜியின் துணிச்சலான செயல்:** குறித்த நாளில் பேரரசரின் அரசவையில் சிவாஜி கலந்து கொண்டார். அப்போது இளைஞர் சம்பாஜியும் சிவாஜியுடன் இருந்தார். அன்று ஔரங்கசீப்பின் ஐம்பதாவது பிறந்த நாளாகும். திவான்-இ-காஸில் கூடிய அவையை முடித்துக் கொண்டு நாட்டு நடப்புகள் பற்றி விவாதிக்கப்படும் பொது அறைக்குள் பேரரசர் நுழைந்தார். அவருக்கு முன்னால் அவருடைய தலைமைத் தளபதிகள் தங்களது தகுதிக்கு ஏற்றவாறு வரிசையாக நின்றுகொண்டிருந்தனர். சிவாஜியைப் பேரரசர் பின் வரிசையில் நிற்க வைத்தார். பல முறை மராட்டியர்களால் விரட்டி அடிக்கபட்ட ஜஸ்வந்த்சிங் ராத்தோட் சிவாஜிக்கு முன் வரிசையில் நின்றிருந்தார். ‘‘மகாராஷ்டிராவின் மன்னர் என்பதால் அவரது தகுதிக்கு அவரை முன் வரிசையில் வைத்திருக்க வேண்டும். ஆனால் பேரரசர் நம்மைக் கடைசி வரிசையில் நிற்க வைத்திருப்பது ஏன்?’’ என்று எண்ணிய அவரது கண்கள் சினத்தால் சிவந்தன. இந்த அவமானத்தை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. மிகுந்த கோபத்துடன்



பேரரசரின் அரசவையில் - சிவாஜி

அரசவையில் இருந்து வெளியேறி தன் இருப்பிடத்தை அடைந்தார். இதற்குப் பிறகு பேரரசர் முகத்தில் மீண்டும் விழிக்கக் கூடாது என்று தீர்மானித்தார்.

இவ்வாறு இச்சந்திப்பு தோல்வியில் முடிந்தது. இந்நிகழ்ச்சி பற்றிய செய்தி எல்லா இடங்களிலும் பரவியது.

### பேரரசரின் நம்பிக்கைத் துரோகம்:

சிவாஜி தங்கியிருந்த இடத்தைச் சுற்றிலும் பாதுகாவலர்களை நியமிக்க ஔரங்கசீப் ஆணையிட்டார். இப்போது சிவாஜியும் சம்பாஜியும் பேரரசரின் கைதிகள் ஆயினர். பேரரசரின் நம்பிக்கைத் துரோகத்தை சிவாஜி புரிந்து கொண்டார். பேரரசர் தன்னை மகாராஷ்டிராவுக்குத் திரும்பிச் செல்ல ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என்பதையும் அறிந்திருந்தார்.

நாள்கள் கடந்தன. சிவாஜி ஒரு நாள் மகாராஷ்டிரா செல்ல அனுமதி கேட்டுப் பேரரசருக்கு விண்ணப்பம் அனுப்பினார். அவர் திரும்பத் திரும்ப முயற்சி செய்தும் அவரது வேண்டுகோள் ஒவ்வொரு முறையும் நிராகரிக்கப்பட்டது. எனவே என்ன நேர்ந்தாலும் எப்படியாவது பேரரசரின் பிடியிலிருந்து தப்பித்துச் செல்ல வேண்டும் எனத் தீர்மானித்தார். அதன் முதல் கட்டமாகத் தன்னோடு ஆக்ராவிற்கு வந்தவர்களை தெற்கே திருப்பி அனுப்ப பேரரசரின் அனுமதி பெற்றார். சிவாஜி தனிமையாக்கப்பட்டு விட்டார் எனப் பேரரசர் மகிழ்ந்தார். இப்போது சம்பாஜியும், ஹிரோஜி பர்ஜந்த், மதாரி மெஹதர் என்ற இரு பணியாளர்கள் மட்டுமே சிவாஜியுடன் இருந்தனர்.

பின்னர் ஒரு நாள் சிவாஜி உடல் நலமில்லாதவரைப் போல் பாசாங்கு செய்தார். கடுமையான வயிற்றுவலி இருப்பதாகத் தெரிவித்தார். மருத்துவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் நோயாளிக்கு உரிய சிகிச்சைகளைத் தொடங்கினர். அவர் தான் விரைவில் குணமடைய வேண்டி திருத்தொண்டர்களுக்கும் முகம்மதிய குருக்களுக்கும் பெரிய கூடைகளில் இனிப்புகளை அனுப்பி வைத்தார்.

### ஆக்ராவிலிருந்து தப்பித்தல்:

ஆரம்பத்தில் வெளியில் உள்ள காவலாளிகள் கூடைகளைத் திறந்து சோதனை செய்வது வழக்கம். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல வழக்கமாகத் தாங்கள் செய்யும் பணியில் களைப்புற்று சோதனையை நிறுத்திக் கொண்டனர். ஒரு நாள் மாலை சிவாஜி ஹிரோஜியை அவருடைய படுக்கையில் தூங்குமாறு செய்து அவனது காலைப் பிடித்து விடுமாறு மதாரியை கேட்டுக் கொண்டார். பின்னர், வெளியே செல்ல இருந்த கூடைகள் இரண்டினுள் சிவாஜியும் சம்பாஜியும் ஒளிந்து கொண்டனர். இனிப்புகள்தான் கூடைகளில் இருக்கும் எனக் கருதி அவை சோதனை செய்யப்படாமல் வெளியில் அனுப்பப்பட்டன. ஏற்கனவே திட்டமிடப்பட்டு இருந்த இடத்தை வந்து அடைந்ததும் சிவாஜியும் சம்பாஜியும் கூடைகளை விட்டு வெளியேறினர். மேலும் தொடர்ந்து செல்ல அவர்களின் நம்பிக்கைக்குரிய ஊழியர்கள் குதிரைகளுடன் தயாராக காத்து இருந்தனர். இதற்கிடையே, ஹிரோஜியும், மதாரியும் மருந்து வாங்கச் செல்வதாகக் கூறி ஆக்ராவில் உள்ள வீட்டை விட்டு வெளியேறினர். மாமன்னரை சிறையிலிருந்து காப்பாற்ற அந்த இரு பணியாளர்களும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து விலைமதிப்பற்ற இவ்வுயரிய பணியைச் செய்தனர்.

சிவாஜி தப்பிச் சென்றது மறுநாள்தான் பேரரசருக்குத் தெரிய வந்தது. அவர் கடுங்கோபம் அடைந்தார். அவரது படைத்தலைவர்கள் அச்சம் அடைந்தனர். சிவாஜியைக் கண்டுபிடிக்க ஒற்றர்கள் எல்லா இடங்களுக்கும் அனுப்பட்டனர். ஆனால் எல்லா முயற்சிகளும் வீணாயின. தப்பித்துச் சென்ற மராட்டியச் சிங்கம் மீண்டும் பேரரசரின் வலையில் அகப்படவில்லை. மாறுவேடத்தில் சிவாஜி மகாராஷ்டிரா நோக்கிச் சென்றார். சம்பாஜியை மதுராவில் உள்ள ஒரு பாதுகாப்பான இடத்தில் சேர்த்துவிட்டு ராஜ்காட்டை அடைந்தார். சிவாஜி நலமாகத் திரும்பி வந்ததைக் கண்ட ஜீஜாமாதா பெருமகிழ்ச்சி அடைந்தார்.

இரண்டு மாதங்களுக்குப் பின் சம்பாஜியும் நலமுடன் ராஜ்காட் வந்து சேர்ந்தார். இவ்வாறு பெருந்திறமையுடனும் துணிவுடனும் சிவாஜி பேரரசரிடமிருந்து தப்பி தன் நாட்டிற்குத் திரும்பி வந்தார். இந்நிகழ்ச்சி கி.பி. 1666- இல் நடந்தது.



மாமன்னர் சிவாஜி ஆக்ராவிலிருந்து தப்பித்தல்

## சுயகற்றல்

### 1. கோடிட்ட இடங்களை நிரப்புக:

(அ) மாமன்னர் சிவாஜி பேரரசர் ஔரங்கசீப்பின்....... பிறந்த நாள் அன்று அரசவைக்கு வருகை தந்தார். (ஐம்பதாவது, நாற்பதாவது, அறுபதாவது)

(ஆ) மாமன்னர் சிவாஜி இளைஞர் சம்பாஜி ராஜேவை.......... வில் உள்ள பாதுகாப்பான இடத்தில் விட்டார். (ஜான்சி, மதுரா, டெல்லி)

### 2. ஒரே வாக்கியத்தில் விடை எழுதுக:

(அ) சிவாஜி ஆக்ராவிற்குச் செல்லும்முன் சுயராஜ்ய நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைத்தார் ?

(ஆ) ஆக்ராவில் சிவாஜியுடன் வெளியேறியவர்கள் யாவர் ?

(இ) சிவாஜி தான் விரைவில் குணமடைய என்ன செய்தார் ?

### 3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக:

(அ) சிவாஜி கோபத்துடன் ஔரங்கசீப் அவையில் இருந்து வெளியே சென்றது ஏன் ?

(ஆ) ஆக்ராவிலிருந்து தப்பித்துச் செல்ல சிவாஜி என்ன தந்திரத்தை பயன்படுத்தினார் ?

### செயல்கள் :

ஆக்ராவில் இருந்து சிவாஜி தப்பிக்கும் காட்சியைத் தெளிவாக படம் வரைந்து அதனை வண்ணமிட்டுக் காட்டுக.

# 14. கோட்டை மீண்டது, ஆனால் சிங்கம் மாண்டது

### ஜீஜாமாதாவின் வேண்டுகோள்:

ஜெய்சிங்கிடம் சிவாஜி ஒப்படைத்த 23 கோட்டைகளும் மொகலாயர்களிடமே இருந்தன. அவற்றுள் ஒன்றுதான் கொண்டானா கோட்டையாகும். ஒருநாள் ஜீஜாமாதா சிவாஜியிடம், 'சிவபா, வலிமை மிக்க கொண்டானா கோட்டையை எதிரிகளிடம் விட்டுவைப்பது நமக்கு பாதுகாப்பானது அல்ல. நீ அதை மீண்டும் கைப்பற்ற வேண்டும்,' என்று கூறினார். சிவாஜியின் மனதிலும் இந்த எண்ணம் இருந்து கொண்டே இருந்தது. கொண்டானா மொகலாயர்களிடம் இருந்தது அவருக்கு மிகுந்த கவலை அளித்தது. சிவாஜி, ஜீஜாமாதா ஆகிய இருவருமே மிகுந்த கவலை அடைந்தனர். அது அவர்களுக்கு ஒரு குறையாகவே இருந்தது. கொண்டானாவை மீண்டும் கைப்பற்ற சிவாஜி திட்டம் தீட்ட ஆரம்பித்தார். இந்த பொறுப்பை யாரிடம் கொடுக்க முடியும்?ஏனெனில் கொண்டனாவைக் கைப்பற்றுவது மிகவும் கடினமான செயல் ஆகும்.

### தானாஜி மாலுசரே :

ஆரம்பத்திலிருந்தே தானாஜி மாலுசரே சிவாஜியின் நண்பராவார். அவர் கொங்கணத்தில் மகாட் அருகில் உள்ள உமர்தே கிராமத்தைச் சேர்ந்தவர். அவர் சிவாஜி ஒப்படைக்கும் எந்த பணியையும் முழுமனதுடன் செய்ய எப்பொழுதும் தயாராக இருந்தார். தானாஜி வலிமையும் கட்டான உடம்பையும் கொண்டவர். வீரமும் அறிவுத்திறனும் உள்ளவர். சிவாஜியிடம் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார்.

### முதலில் கொண்டானாவின் திருமணம்:

தானாஜி தனது ஒரே மகன் ராய்பாவின் திருமணத்திற்காக விறுவிறுப்பாக ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். வீட்டிலுள்ள அனைவரும் திருமண ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தனர். திருமணத்திற்கு



தானாஜியின் உறுதிமொழி

நான்கு நாட்களே இருந்தன. திருமணத்திற்கு சிவாஜி மகாராஜாவையும் ஜீஜாமாதாவையும் அழைக்க வேண்டுமென்று தானாஜி எண்ணினார். அவர்களுக்கு திருமண அழைப்பிதழ் கொடுப்பதற்காக தானாஜி சேலார் மாமாவுடன் சென்றார். அழைப்பைப் பெற்றதும் சிவாஜி சேலார் மாமாவிடம், ''சேலார் மாமா நீங்கள் சென்று திருமணத்தை நடத்துங்கள். திருமணத்திற்கு என்னால் வர இயலாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கொண்டானாவை திரும்பவும் மீட்க உறுதி எடுத்துள்ளேன்,' என்று கூறினார்.

இதைக் கேட்டதும் தானாஜி, ''மகாராஜா, தானாஜி உயிருடன் இருக்கும்போது இந்த கடினமான மற்றும் ஆபத்தான போரில் ஈடுபடப் போகிறீர்களா? பிறகு என்னைப் போன்றவர்கள் இருந்து பயன் என்ன? இது நடக்காது. நான் முதலில் கொண்டானாவை மீட்டு, கொண்டானாவிலேயே எனது மகன் திருமணத்தை பிறகு நிகழ்த்துவேன். ராய்பாவின் திருமணத்தை நிறுத்தி வைக்கிறேன். இப்போரை வழிநடத்த எனக்கு அனுமதி தாருங்கள். நான் வெற்றி பெறுவதற்காக என்னை வாழ்த்துங்கள்,' என்றார்.

**தானாஜியின் திட்டம்:** இந்த மன உறுதியுடன் தானாஜி போரை வழிநடத்தும் பொறுப்பேற்று கொண்டானாவை நோக்கிப் புறப்பட்டார். அந்தக் கோட்டையானது அப்போது ஜெயசிங்கால் பணியமர்வு செய்யப்பட்ட உதயபானின் நேரடி ஆதிக்கத்தில் இருந்தது. உதயபான் நாணயமும் விழிப்புணர்வும் உள்ள அதிகாரி ஆவார். அந்தக் கோட்டைக்கு இரண்டு நுழைவு வாயில்கள் இருந்தன. இரண்டு வாயில்களிலும் உதயபானின் ஆட்களால் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பிறகு எப்படி தாக்குதலை மேற்கொள்வது? தானாஜி ரகசியமாக கோட்டையைப் பற்றி விளக்கமாக ஆய்வு செய்தார். மேற்குப் புறத்தில் உள்ள செங்குத்துப்பாறை காவலர்கள் இல்லாமல் இருந்தது. அந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் நடத்த



கொண்டானாவில் தானாஜியின் போர் நடவடிக்கை

தானாஜி முடிவு செய்தார். தனது திட்டத்தை தன்னுடைய தம்பியிடம் விளக்கிக் கூறினார். அவர், ‘‘நீ ஐநூறு போர்வீரர்களை அழைத்துச் சென்று கல்யாண் வாயிலை அடையவும். மற்ற முன்னூறு வீரர்களுடன் நான் இந்த செங்குத்துப்பாறை மீது ஏறி கோட்டைக்குள் செல்கிறேன். நாங்கள் அங்கு சென்றதும் கல்யாண் வாயிலைத் திறந்து விடுவோம். பிறகு நீங்கள் உள்ளே வந்து எங்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள். நாம் இருவரும் சேர்ந்து மொகலாயப் படைகளை வீழ்த்தி கோட்டையைக் கைப்பற்றுவோம்,‘ என்று கூறினார். முடிவு செய்யப்பட்ட இத்திட்டத்துடன், சூர்யாஜியும் தானாஜியும் வெவ்வேறு வழிகளில் சென்றனர்.

**செங்குத்தான மலையேற்றம் :** காரிருள் சூழ்ந்த இரவு. தானாஜியும் அவருடைய வீரர்களும் செங்குத்தான மலையின் அடிவாரத்தில் ஒன்று கூடினர். சுற்றிலும் சில்வண்டுகளின் ஒலியைத்தான் கேட்க முடிந்தது. தானாஜியின் படையிலுள்ள ஐந்தாறு பேர் முதலில் மலைச்சரிவில் ஏறத்தொடங்கினர். அது மிக உயரமாகவும் செங்குத்தாகவும் இருந்தது. ஆனால் அவர்கள் சமாளித்தபடி பாறைகளில் கவனமாக கால் வைத்தும், விரல்களை பாறை இடுக்குகளில் நுழைத்தும் அந்த கடினமான மலைமீது ஏறத் தொடங்கினர். நிதானமாக தைரியத்துடன் ஏறி உச்சியை அடைந்தனர். அவர்கள் பாதுகாப்பான இடத்தை அடைந்ததும் ஒரு பெரிய கயிற்றைக் கட்டி மலைச்சரிவில் தொங்க விட்டனர். மற்றவர்கள் அனைவரும் அக்கயிற்றைப் பிடித்துக் கொண்டு குரங்குகளைப் போல் ஏறினார்கள்.

**தானாஜியின் வீரம் :** இவ்வேளையில் சூர்யாஜி கல்யாண் வாயிலை அடைந்தார். கதவுகள் திறக்கப்படுவதற்காக அவர் காத்திருந்தார். கோட்டையில் போர் தொடங்கியது. உதயபான் இத்தாக்குதலைக் கேள்வியுற்றார். போர் முரசு ஒலிக்கப்பட்டது. உதயபானின் படையினர் தானாஜியின் வீரர்களைத் தாக்கினர். தீவட்டி வெளிச்சத்தில் இரு படைகளுக்கும் இடையில் பயங்கரமான போர் நடைபெற்றது. மாவளர்கள் கல்யாண் வாயிற் கதவுகளைத் திறந்து விட்டனர். தானாஜி வீரமிக்க சிங்கத்தைப்போல் போரிட்டுக் கொண்டிருந்தார். உதயபான் அவரைத் தாக்கினார். இருவரும் பலமிக்கவர்கள். ஆதலால் இருவருக்கும் இடையே சண்டை பயங்கரமாக நடந்தது. தானாஜியின் கேடயம் உடைந்தது. எனவே தனது மேலங்கியைக் கழற்றி கேடயமாகச் சுற்றிக்கொண்டு உதயபானின் வாள்வீச்சைத் தடுத்து தொடர்ந்து சண்டையிட்டார். முடிவில் இருவரும் படுகாயமுற்று வீழ்ந்தனர். இப்போரில் தானாஜி மரணமடைந்தார்.

**கோட்டை மீண்டது. ஆனால் சிங்கம் மாண்டது:** தானாஜி இறந்ததும், மராட்டிய வீரர்கள் தங்களுக்கு ஒரு தலைவர் இல்லாததைக் கண்டு பின்வாங்கி ஓடத் தொடங்கினர். அதே வேளையில் சூர்யாஜியும் அவரது வீரர்களும் போர் நிகழ்ந்த இடத்தை வந்தடைந்தனர். சூர்யாஜி தன் அண்ணன் இறந்ததை அறிந்து ஆழ்ந்த வருத்தமுற்றார். ஆனால் இது வருந்துவதற்கான நேரமல்ல. எனவே அவர் தொடர்ந்து போரிட்டார். எந்தக் கயிற்றால் மாவளர்கள் கோட்டைக்குள் ஏறி வந்தார்களோ அக்கயிற்றை அவர் துண்டித்துவிட்டார். பிறகு பின்வாங்கிச் செல்லும் மாவளர்களின் வழியை மறித்துக் கொண்டு, ‘‘உங்கள் தந்தை போர்க்களத்தில் இறந்து கிடப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? கோழைகளைப் போல் புறங்காட்டி ஓடுவது உங்களுக்கு வெட்கமாக இல்லையா? எதன் உதவியால் மேலே ஏறி வந்தீர்களோ அக்கயிறு வெட்டப்பட்டுள்ளதால் புறங்காட்டி ஓடும் உங்கள் வழி அடைக்கப்பட்டு விட்டது. எனவே உங்களுக்கு ஒரேயொரு வழிதான் உள்ளது. அது நீங்கள் இந்த மலை உச்சியிலிருந்து குதித்து இறக்க வேண்டும் அல்லது எதிரிகளைப் போரிட்டு அழிக்க ‘வேண்டும்,‘ என்று ஆவேசமாக கூறினார்.

எனவே மாவளர்கள் மீண்டும் போராடி எதிரிகளைத் தாக்கினர். போர் தீவிரமாக நடந்தது. இறுதியில் மாவளர்கள் கொண்டானா கோட்டையைக் கைப்பற்றினர். ஆனால் சிங்க நெஞ்சம் கொண்ட தங்கள் தலைவர் தானாஜியை இழந்தனர். இச்செய்தியைக் கேட்ட சிவாஜியும் ஜீஜாமாதாவும் மிகுந்த துக்கமடைந்தனர். சிவாஜி தனது துக்கத்தை ‘‘கோட்டை மீண்டது ஆனால் சிங்கம் மாண்டது’’ என்று ஒரே வாக்கியத்தில் வெளிப்படுத்தினார்.

கொண்டானா கோட்டையை மீட்க தன் இன்னுயிரை ஈந்த அந்த மாபெரும் வீரரின் நினைவாக கொண்டானா கோட்டையின் பெயர் சின்ஹாகாட் என மாறியது. இந்த நிகழ்ச்சி 1670 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதன் பின் உமர்தேவுக்குச் சென்று ராய்பாவின் திருமணத்தை சிவாஜி தானே முன்னின்று சிறப்பாக நடத்தி வைத்தார்.

## 1. சரியான விடைக்குரிய வண்ணமிடுக.

(அ) தானாஜி வாழ்ந்த இடம்.

(1) மகதம் ○ (2) சிப்லூன் ○

(3) உமர்தே ○ (4) ரத்தினகிரி ○

(ஆ) ஜெய்சிங்கினால் பணியமர்வு செய்யப்பட்ட உதயபான்........... கோட்டைக்கு தலைமை வகித்தார்.

(1) புரந்தர் ○ (2) கொண்டானா ○

(3) ராய்காட் ○ (4) பிரதாப்காட் ○

(இ) தானாஜியின் சகோதரர் பெயர்.

(1) ராய்பா ○ (2) சூர்யாஜி ○

(3) முரார்பாஜி ○ (4) பிரங்கோஜி ○

## 2. ஒரே வாக்கியத்தில் விடையளி

(அ) கொண்டானா யாருடைய பொறுப்பில் இருந்தது ?

(ஆ) கொண்டானா கோட்டையைப் பற்றி ஜீஜாமாதா சிவாஜியிடம் கூறியது என்ன ?

(இ) கொண்டானா போருக்கு பொறுப்பேற்று நடத்தியவர் யார் ?

## 3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடையளி :

(அ) சேலார் மாமாவிடமிருந்து அழைப்பிதழ் பெற்றபோது சிவாஜி கூறியது யாது ?

(ஆ) அஞ்சி ஓடிய மாவளர்களிடம் சூர்யாஜி கூறியது யாது ?

## செயல்

உங்கள் பகுதியில் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்களைப் பட்டியலிடுக.

# 15. மறக்க முடியாத விழா

**முடிசூட்டு விழா நடந்தது ஏன்?:** சிவாஜி ராய்ரேஷ்வர் கோயிலில் சுயராஜ்ய உறுதிமொழி எடுத்துக் கொண்டார். சுயராஜ்யத்தை உருவாக்கும் முயற்சியின் போது சிவாஜி பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இவை எல்லாவற்றையும் துணிவுடனும் மதிநுட்பத்தடனும் எதிர் கொண்டார். சுயராஜ்யம் விரைவாக வளர்ச்சியடைந்தது. பாஜிபிரபு, முரார்பாஜி, தானாஜி போன்றோர் சுயராஜ்யத்திற்காக இரத்தம் சிந்தி தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தனர். இவ்வாறாக பலரின் அர்ப்பணிப்பாலேயே சுயராஜ்யம் உருவானது. இந்த அரசு எப்போதும் எதிரிகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது.

இந்த சுயராஜ்யத்தைப் பிற அரசுகளும் பெரிய, சிறிய நிலப்பரப்புகளை உடைய இளவரசர்களும் ஓர் அரசாக அங்கீகரிக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டு சிவாஜி தனக்குத் தானே முடிசூட்டிக் கொள்ள தீர்மானித்தார். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு மராட்டிய குடிமக்களுக்கு நீதியும் மகிழ்ச்சியும் தரக்கூடிய ஒரு மாமன்னர் மகாராஷ்டிராவில் தோன்றினார். நிலையான சுயராஜ்யம் உருவாகியுள்ளதை எல்லோரும் அறிய வேண்டும் என்பதற்காக சிவாஜி தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டார். இதைத் தன் சுயநலத்திற்காகவோ தனிப்பட்ட மகிழ்ச்சிக்காகவோ அவர் செய்யவில்லை. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட சுயராஜ்யம் உறுதியான நிலையில் இருப்பதை பறைசாற்றவே சிவாஜி இதனைச் செய்தார்.

**சுயராஜ்யத்தின் தலைநகர்:** சிவாஜி தன் நாட்டிற்கு ராய்காட்டைத் தலைநகரமாகத் தேர்ந்தெடுத்தார். ராய்காட் பலமான மலைக்கோட்டை ஆகும். இது நாட்டின் நிர்வாகத்திற்கும் எதிரிகளை கண்காணிப்பதற்கும் ஏற்றதாக இருக்கும் என சி வாஜி எண்ணினார்.

சிவாஜி சிப்ளூனிலுள்ள தனது படைகளைப் பார்வையிட்டார். பிரதாப்காட்டில் உள்ள பவானி தேவியை வழிபட்டு வந்தார். அவருடைய நினைவாக கோயிலுக்குத் தங்க குடை ஒன்றையும் பரிசாக வழங்கினார்.

**முடிசூட்டு விழாவிற்கான ஏற்பாடுகள்:** விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட ஒரு தங்க அரியணை செய்யும்படி சிவாஜி கட்டளை இட்டார். அதன்மீது வெண்கொற்றக் குடையும் வைக்கப்பட்டது. அரசர்கள், கற்றறிந்த இளவரசர்கள், அந்தணர்கள், உள்ள அனைத்து தளபதிகள் மற்றும் அதிகாரிகள் சிவாஜியின் அதிகாரத்தின் கீழ் ஆகியோருக்கு முடிசூட்டு விழா அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. வாரணாசியிலிருந்து வந்த 'காகப்பட்டர்' விழாவிற்கு தலைமைக் குருவாக செயல்பட்டார். காகப்பட்டர் பைத்தானைச் சேர்ந்தவராயினும் வாரணாசியை வாழ்விடமாகக் கொண்டவர். இவர் வாரணாசியில் பெரிதும் மதிக்கப்பட்ட பண்டிதர் ஆவார்.

சிவாஜி முடிசூட்டு விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்தார். ஏழுநதிகள் மற்றும் கடல்களிலிருந்து நீர் கொண்டுவர ஆட்கள் அனுப்பப்பட்டனர். ஏறக்குறைய ஐம்பதாயிரம் மக்கள் ராய்காட்டில் கூடி இருந்தனர். எங்கு நோக்கினும் விருந்தினர் தங்குவதற்கான சிறியதும் பெரியதுமான கூடாரங்களும் பெரிய பந்தல்களும் அமைக்கப்பட்டிருந்தன.

**முடிசூட்டு விழா:** முடிசூட்டு விழா நாளும் வந்தது. உண்மையிலேயே அது ஒரு மங்களகரமான நன்னாள் ஆகும். இசைக்கலைஞர்கள் தங்கள் இசைக் கருவிகளை இசைத்தனர். பாடகர்கள் பாடத் தொடங்கினர். பாட்டும் இசையும் விண்ணில் பரவியது. மகிழ்ச்சி ஆரவாரம் எங்கும் ஒலித்தது. சிவாஜி மகாராஜா தங்கத்தினாலான இருக்கையில் அமர்ந்தார். அவரது தலைக்குமேல் வெண்கொற்றக்குடை இருந்தது. சாமரம் எற்பாடு செய்யப்பட்டது. வேதியர்கள் ஒவ்வொருவரும் நெய், தயிர், தேன் கலசங்களைக் கைகளில் ஏந்தி நின்றனர். கங்கை, சிந்து, யமுனை, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, காவிரி முதலிய ஏழு நதிகள் மற்றும் கடலிலிருந்து கொண்டுவந்த நீர் நிரம்பிய தங்கக்கலசத்தை காகப்பட்டர் சுமந்து வீச நின்றார். அக்கலசத்தை காகப்பட்டர் சிவாஜியின் தலைக்கு மேல் பிடித்தபடி முடிசூட்டு மந்திரங்களை ஓதினார். பாத்திரத்தில் இருந்த நூற்றுக்கணக்கான மிகச் சிறிய துளைகள் வழியாக நீர் சொட்டுச் சொட்டாக சிவாஜியின் மீது விழுந்தது. புனித நீராட்டலுக்குப் பின்னர் மாமன்னர் சிவாஜி எழுந்து ஜீஜா அன்னையின் பாதங்களைத் தொட்டு ஆசி பெற்றார். ஜீஜா அன்னை அவரை மார்போடு அனணத்துக் கொண்டார். அவருடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிரம்பியது. அவருடைய



சிவாஜியின் முடிசூட்டு விழா

முப்பதாண்டு முயற்சிக்கான பலன் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார். சிவாஜி பிறப்பதற்கு முன்பிருந்தே அவர் கண்ட கனவுகள் யாவும் நனவாகின. அவரது கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. மாமன்னர் சிவாஜியும் மிகவும் மனம் நெகிழ்ந்தார். அவர்கள் இருவருக்கும் மங்களம் உண்டாகட்டும்!

ஜீஜா அன்னையிடம் ஆசிபெற்ற பின்னர் மாமன்னர் சிவாஜி அரியணையில் அமர்ந்தார். அவருக்கு அருகில் மகாராணி சொயராபாயும் இளவரசர் சம்பாஜி ராஜேவும் அமர்ந்தனர். இருபக்கமும் எட்டு அமைச்சர்கள் நின்றிருந்தனர். காகப்பட்டர் தங்கம் மற்றும் முத்துக் குஞ்சங்கள் வரிசையாக தொங்கவிடப்பட்ட வெண்கொற்றக் குடையை சிவாஜியின் தலைக்குமேல் பிடித்து "வீர மரபின் அணிகலனாகத் திகழும் முடியுடை வேந்தன் சிவசத்திரபதிக்கு வெற்றி கிடைக்கட்டும்," என்று வாழ்த்தினார். அவையில் இருந்த அனைவரும் மாமன்னர் சிவாஜிக்கே வெற்றி ! என்று ஒருமித்த குரலில் வாழ்த்தினர். கோட்டை எங்கும் குண்டுகள் முழங்கின. மாமன்னர் சிவாஜி வாழ்க எனும் ஒருமித்த குரல் மகாராஷ்டிரா முழுவதும் எதிரொலித்தது. கி.பி 1674 இல் சிவாஜியின் முடிசூட்டு விழா நடந்தது. அந்த ஆண்டிலிருந்து சிவாஜி முடிசூட்டு விழா நாள்காட்டி என்ற ஒரு புதிய நாள்காட்டியையும் சிவாஜி தொடங்கினார். புதிய சகாப்தத்தை ஏற்படுத்திய அரசர்களைப் போன்று சிவாஜியும் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடங்கினார். முடிசூட்டுவிழா ஆண்டிலிருந்து இச்சகாப்தம் ஆரம்பமானது. அவர் தனது முடிசூட்டு விழா நாளில் நாணயங்களை வெளியிட்டார். வெவ்வேறு நாட்டுத் தூதுவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். ஆங்கிலேயர் தங்களது வெளிநாட்டுத் தூதுவர் ஆக்ஸிடென் என்பவரை விலையுயர்ந்த அன்பளிப்புடன் அனுப்பி வைத்தனர். இவ்விழாவைக் காண தொலைதூரத்திலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். இம்முக்கிய நிகழ்ச்சி உலகம் முழுவதும் தெரிய வந்தது. சிவாஜியின் புகழ் எங்கும் பரவியது.

## சுயகற்றல்

**1. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

(அ) சிவாஜி ....... நிஜ தனது நாட்டிற்கு தலைநகராகத் தேர்ந்தெடுத்தார். (சின்ஹாகாட், ராய்காட், பன்ஹாலாகாட்)

(ஆ) கி.பி. ...................... இல் சிவாஜியின் முடிசூட்டுவிழா நடைபெற்றது (கி.பி. 1674, கி.பி. 1675, கி.பி. 1647)

**2. ஒரே வாக்கியத்தில் விடை எழுதுக.**

(அ) தங்கக்கலசம் எந்த ஏழு நதிகளின் நீரால் நிரப்பப்பட்டது ?

(ஆ) சிவாஜி தான் முடிசூடிய ஆண்டிலிருந்து தொடங்கிய நாள்காட்டி எது ?

**3. இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடைதருக.**

(அ) சிவாஜி ஏன் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்டார் ?

(ஆ) சிவாஜி தனது நாட்டின் தலைநகரமாக ராய்காட்டை தேர்ந்தெடுத்தது ஏன்?

(இ) ஜீஜா அன்னையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிரம்பியது ஏன்?

**செயல்**

(அ) மாமன்னர் சிவாஜி தனது முடிசூட்டுவிழாவின் போது வெளியிட்ட நாணயங்கள் பற்றிய தகவல்களை உனது ஆசிரியரிடமிருந்து கேட்டறிக.

(ஆ) பல்வேறு தபால் தலைகளைச் சேகரிக்க. உங்கள் வகுப்புத் தோழர்களின் உதவியுடன் அவற்றினைக் கொண்டு கண்காட்சி ஒன்றிற்கு ஏற்பாடு செய்க.

# 16. தென்னகப் படையெடுப்பு

**போர்த் திட்டம்:** முடிசூட்டு விழா முடிந்தது. ஆனால் அதன் மகிழ்ச்சி அதிக நாட்கள் நீடிக்கவில்லை. முடிசூட்டுவிழா முடிந்த சில நாட்களில் அதாவது 1674 ஆம் ஆண்டு ஜூன் 17-ஆம் நாள் ஜீஜாமாதா இயற்கை எய்தினார். சிவாஜியை தங்கள் பாதுகாவலர் என்றே மக்கள் கருதினர்.சிவாஜிக்கு அவரது தாயார் மிகவும் ஆதரவாக இருந்தார். சிவாஜியின் வாழ்க்கையில் ஜீஜாமாதா உண்மையான வழிகாட்டியாகவும் குருவாகவும் திகழ்ந்தார். தன்னுடைய தாயின் இழப்பு சிவாஜியை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியது. எனினும் தாயின் மறைவுக்கு துக்கம் அனுசரிக்கக் கூட அவருக்கு நேரமில்லை. தனது அரசை நிர்வகிக்கும் பெரும் பொறுப்பு அவருக்கு இருந்தது.

அவர் கர்நாடகத்தைத் தாக்க தீர்மானித்தார். இப்போது அடில்ஷாவின் மீது சிவாஜிக்கு சிறிதளவு கூட பயம் இல்லை. அடில்ஷா தனது வலிமையை முற்றிலுமாக இழந்துவிட்டார். ஆனால் மராட்டிய அரசை அழிக்க மொகலாயப் பேரரசராகிய ஔரங்கசீப் வாய்ப்பிற்காக காத்திருந்தார். ஆனால் அவர் எப்போது இந்த புதிய அரசை தாக்கி கைப்பற்றுவார் என்பது தெரியவில்லை.

மொகலாயர்களின் தாக்குதல்களைத் தடுக்க தெற்கில் ஒரு சக்தி மிக்க அடித்தளத்தை ஏற்படுத்த சிவாஜி எண்ணினார். எனவே தென்னகத்தை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வர முடிவு செய்தார். இந்த போர்ப் பணிகளை மேற்கொள்ள அவர் கோல்கொண்டாவிலுள்ள குதுப்ஷாவின் உதவியை நாடினார். அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் சிவாஜிக்குத் தேவையான உதவிகளைச் செய்ய தயக்கமின்றி சம்மதித்தார்.

இப்போருக்கு மற்றொரு காரணமும் இருந்தது. தெற்கிலுள்ள தஞ்சாவூர் ஜாகீரானது சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரன் வியங்கோஜி ராஜேயின் நிர்வாகத்தின் கீழ் இருந்தது. தன் தந்தையின் கர்நாடகாவிலுள்ள ஜாகீரும் அவரிடம்தான் இருந்தது. வியங்கோஜி ராஜேயின் உதவி கிடைக்கலாம் என்ற ஓர் எண்ணமும் சிவாஜியின் மனதில் இருந்தது.

**கோல்கொண்டாவைப் பார்வையிடல்:** சிவாஜி கர்நாடகத்திற்குச் செல்ல புறப்பட்டார். கோல்கொண்டாவின் அபுல்ஹாசன் குதுப்ஷா தம்மை சந்திப்பதற்காக சிவாஜிக்கு அழைப்பு விடுத்திருந்தார். சிவாஜி முதலில் குதுப்ஷாவின் தலைநகரத்திற்குச் சென்று பார்வையிட்ட பின்னர், தென்னகம் முழுவதையும் வெல்வதற்காக படையெடுப்பைத் தொடரலாம் என்று தீர்மானித்தார்.

கோல்கொண்டா குதுப்ஷா அரசின் தலைநகராகும். சிவாஜியை வரவேற்க அவர் மிகப்பெரிய ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இருவரும் சந்திப்பதற்கு ஒரு சிறப்பு மண்டபமும் அமைத்திருந்தார். சிவாஜி தலைநகருக்குள் நுழைந்ததும் மக்கள் அவரைக் காண சாலையின் இருபுறமும் வரிசையாக நின்றிருந்தனர். சிவாஜியின் வீரச் செயல்களைப் பற்றிய செய்திகள் நாலாபுறமும் பரவி இருந்தது. சிவாஜி அப்சல்கானைக் கொன்றது, செயிஷ்டகானைத் தோற்கடித்தது, ஆக்ராவிலிருந்து தப்பித்து வந்தது ஆகிய அனைத்து வியப்பூட்டக் கூடிய நிகழ்வுகளும் நாடு முழுவதும் பரவியிருந்தது. இக்காரணங்களால் மாமன்னர் சிவாஜி சிறப்பான வரவேற்பைப் பெற்றார். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மக்கள் மகாராஜா மீது பூமழை பொழிந்தனர். இந்த அற்புதமான வரவேற்பை ஏற்றுக்கொண்டு சிவாஜி குதுப்ஷாவின் அரசவைக்குள் நுழைந்தார். குதுப்ஷா அவரை எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் சென்று அவருக்கென்று சிறப்பாக தயாரிக்கப்பட்ட அரியணையில் தமக்குச் சமமாக அமர்த்தி. வரவேற்பு அளிக்கப்பட்டது. அவர்



**சிவாஜி மகாராஜாவின் வரலாற்றுச் சிறப்பு மிக்க கோல்கொண்டா வருகை**

மகாராஜாவின் வரவேற்பில் எந்தவித குறையும் வைக்கவில்லை. வரவேற்பை ஏற்றுக் கொண்டவுடன் சிவாஜி கர்நாடகாவை முற்றுகையிடப் புறப்பட்டார்.

**செஞ்சியின் வெற்றி :** சிவாஜி கிழக்குக் கடற்கரையை அடைந்தார். சென்னைக்குத் தெற்கே செஞ்சிக்கோட்டை உள்ளது. இது ராய்கோட்டையைப் போல் பலமான ஒரு மிகப்பெரிய கோட்டையாகும். சிவாஜி அதை முற்றுகையிட்டு கைப்பற்றினார். இவ்வாறு தெற்கில் சுயராஜ்யத்திற்கு ஒரு பலமான அடித்தளம் உருவாக்கப்பட்டது. பின்பு அவர் வேலூர் கோட்டையை முற்றுகையிட்டார். முற்றுகை பல மாதங்கள் நீடித்தும் கோட்டையை பிடிக்க முடியவில்லை. சிவாஜி அருகிலுள்ள குன்றிலிருந்து பீரங்கிகளை இயக்கிப் பல நாட்களுக்குப் பிறகே கோட்டையைக் கைப்பற்ற முடிந்தது. அவரது தென்னாட்டுப் படையெடுப்பால் பல கோட்டைகளும், இருபது லட்சம் வருமானம் உள்ள ஒரு நிலப்பகுதியும் அவரது ஆட்சியின் கீழ் வந்தது.

**வியங்கோஜி ராஜேயுடன் சந்திப்பு :** மாமன்னர் சிவாஜி தன்னைச் சந்திக்குமாறு தனது ஒன்றுவிட்ட சகோதரன் வியங்கோஜி ராஜேவை அழைத்தார். வியங்கோஜி ராஜே வேண்டா வெறுப்பாக வந்தார். சிவாஜி அவரை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றார். அவரைத் தன் பக்கம் இருக்குமாறு இயன்ற அளவு முயற்சித்தார் சுயராஜ்ய பணியில் தனக்கு உதவுமாறு சிவாஜி வியங்கோஜி ராஜேவை கேட்டுக்கொண்டார். சில நாட்கள் வியங்கோஜி ராஜே சிவாஜியுடன் தங்கியிருந்தார். ஆனால் ஒரு நாள் இரவு சிவாஜி மகாராஜாவிடம் சொல்லிக் கொள்ளாமலேயே தஞ்சாவூருக்குத் திரும்பிவிட்டார். தஞ்சாவூரிலிருந்து திரும்பிய அவர் சிவாஜியின் படைகளைத் தாக்கினார்.



**சிவாஜி மகாராஜா-வியங்கோஜி ராஜே சந்திப்பு**

சிவாஜியின் வீரர்கள் தங்களைத் தாக்கிய வீரர்களுக்குத் தக்க பேரிழப்பை ஏற்படுத்தினர். வியங்கோஜி ராஜே தோற்கடிக்கப்பட்டார். தனது சகோதரனின் இந்த நடத்தையால் சிவாஜி மகாராஜா மிகுந்த வேதனை அடைந்தார். சிவாஜி வியங்கோஜி ராஜேவுக்கு புரியும்படி கடிதம் எழுதினார். செஞ்சிக்கு தென்பகுதியிலுள்ள சில இடங்களை அவருக்குக் கொடுத்தார். கர்நாடகாவிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய பகுதியை வியங்கோஜியின் மனைவி தீபாபாய்க்குப் பரிசாகக் கொடுத்தார். வியங்கோஜி ராஜேவுக்கு எழுதிய கடிதத்தில் சிவாஜி, ''உன்னுடைய எதிரிகளிடத்தில் நம்பிக்கை வைக்காதே, வீரவழியைப் பின்பற்று,'' என்று குறிப்பிட்டிருந்தார்.

கர்நாடகாவின் வெற்றிக்குப் பின் சிவாஜி ராய்காட்டிற்கு திரும்பினார். ஆனால் இப்படையெடுப்பு அவரைப் பாதித்தது. உடல்நலக் குறைவு ஏற்பட்டபோதும் ஜிஞ்ஜிராவின் சித்திக்கு எதிராகத் தனது கடற்படையை அனுப்ப வேண்டியிருந்தது. இவ்வேளையில் மாமன்னரின் வயது ஐம்பதாயிருந்தது. முப்பத்தைந்து ஆண்டுகளாக எவ்வித ஓய்வுமின்றி தொடர்ந்து உழைத்துக் கொண்டிருந்தார்.

**மக்களின் பாதுகாவலரின் மறைவு :** கி.பி. 1680 ஏப்ரல் மாதம் 3 ஆம் நாள் மக்களை ஆழ்துயர்க்கடலில் மூழ்கவிட்டு மக்களின் பாதுகாவலர் சிவாஜி இறந்தார்.

தனது வாழ்க்கையில், மகாராஜா அரும்பெரும் செயல்களைச் சாதித்தார். அவர் பலமிக்க எதிரிகளையும் வென்று இந்தவி சுயராஜ்யத்தை நிறுவினார். அவருக்கு ஈடு இணையாக இந்தியாவில் யாரும் இல்லை எனலாம். சிவாஜி ஒரு தேசிய மாமனிதர் ஆவார்.




The following foot notes are applicable : (1) © Government of India, Copyright : 2014. (2) The responsibility for the correctness of internal details rests with the publisher. (3) The territorial waters of India extend into the sea to a distance of twelve nautical miles measured from the appropriate base line. (4) The administrative headquarters of Chandigarh, Haryana and Punjab are at Chandigarh. (5) The interstate boundaries amongst Arunachal Pradesh, Assam and Meghalaya shown on this map are as interpreted from the "North-Eastern Areas (Reorganisation) Act. 1971," but have yet to be verified. (6) The external boundaries and coastlines of India agree with the Record/Master Copy certified by Survey of India. (7) The state boundaries between Uttarakhand & Uttar Pradesh, Bihar & Jharkhand and Chattisgarh & Madhya Pradesh have not been verified by the Governments concerned. (8) The spellings of names in this map, have been taken from various sources.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக :

(அ) வியங்கோஜிராஜே தெற்கிலுள்ள ஷஹாஜிராஜேயின்............. ஜாகீரை நிர்வகித்தார். (வேலூர், தஞ்சாவூர், பெங்களூர்)

(ஆ) ....... குதுப்ஷா அரசின் தலைநகராகும். ( டெல்லி, செஞ்சி, கோல்கொண்டா)

2. ஒரே வாக்கியத்தில் விடையளி :

(அ) சிவாஜி மகாராஜா வியங்கோஜி ராஜேயை சந்திப்பதின் நோக்கம் என்ன?

(ஆ) சிவாஜி மகாராஜா வியங்கோஜி ராஜேவை என்ன செய்யும்படி கேட்டுக் கொண்டார்?

(இ) சிவாஜி மகாராஜா வியங்கோஜி ராஜேவிற்கு எழுதிய கடிதத்தில் என்ன எழுதினார்?

3. காரணம் கூறுக.

(அ) சிவாஜி மகாராஜா தென்பகுதியை தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர தீர்மானித்தார்.

(ஆ) சிவாஜி மகாராஜா வியங்கோஜி ராஜேவுக்கு புரியும்படி கடிதம் எழுதினார்.

செயல்

சிவாஜி மகாராஜாவும் வியங்கோஜி ராஜேயும் சந்தித்துப் பேசிய உரையாடலை நடித்துக் காட்டுக.



சிவாஜி மகாராஜாவின் சமாதி-ராய்காட்

# 17. கோட்டைகள் மற்றும் கடற்படைகளின் மேலாண்மை

சுயராஜ்யத்தை நிறுவுவதற்காக சிவாஜி பல பகைவர்களை வெற்றி கொண்டார். அது போர் அல்லது ஆளுகையாக இருக்கட்டும், சிவாஜியின் மேலாண்மை திறனை அனைத்து துறைகளிலும் காண முடிகிறது. இப்பாடத்தில் நாம் மாமன்னர் சிவாஜியின் மேலாண்மை திறன்கள் பற்றிய தகவல்களை அறிய உள்ளோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- **மேலாண்மைத் திறன் என்றால் என்ன?**
மேலாண்மை திறன் என்பது திட்டமிட்ட இலக்கை அடைய, மேற்கொண்ட பணியை சரியான முறையில் செய்வதாகும்.

மாமன்னர் சிவாஜியின் மேலாண்மை திறன் அவரது வாழ்நாளில் அவர் போரிட்ட அனைத்து யுத்தங்களின் எல்லா நேரங்களிலும் தெரிய வருகிறது. அதுபோன்றே, அவரது ஒட்டுமொத்த மேலாண்மையையும் காண முடிகிறது. அவற்றின் சில உதாரணங்கள் பின்வருமாறு.

### கோட்டைகளைக் கட்டுதல்

மாமன்னர் சிவாஜி தமது சுயராஜ்யத்தை கோட்டைகளின் துணை கொண்டு பாதுகாத்தார். 'ஆஜ்ஞாபத்ர' என்ற சிவாஜி காலத்து நூலில் அல்லது 'அரச கட்டளையில்' கோட்டைகளின் முக்கியத்துவம் பின்வருமாறு சரியாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. 'முழு இராஜ்யத்தின் சாராம்சம் கோட்டைகளாகும்'. மாமன்னர் சிவாஜி தமது இளமை பருவத்தில் சையாத்ரி மலைத் தொடர்கள் வழியே சுற்றித்திரிந்தார். எண்ணற்ற வேளைகளில் சையாத்ரியில் அமைந்திருந்த கோட்டைகளை உற்றுநோக்கி இருக்கிறார். சுயராஜ்ய பாதுகாப்பில் கோட்டைகளின் முக்கியத்துவத்தை அவர் புரிந்திருந்தார்.

மாமன்னர் சிவாஜி வனக்கோட்டை, மலைக்கோட்டை மற்றும் கடற்கோட்டை ஆகிய மூன்று வகைக் கோட்டைகளைக் கட்டினார். கடற்கோட்டை ஜஞ்சிரா என்று அழைக்கப்படுகிறது. அவர் ஹிரோஜி இந்துல்கர் மற்றும் அர்ஜோஜி யாதவ் போன்ற நிபுணர்களைக் கொண்டு ராஜ்காட், பிரதாப்கட், சிந்து துர்கா போன்ற பல புதிய கோட்டைகளைக் கட்டினார். அவ்வாறே, ராய்கட்டின் புதிய கோட்டைகளைக் கட்டினார். அது மட்டுமல்ல, சிந்துர்க், தோர்ணா, ராங்ணா, போன்ற வேறு சில பழைய கோட்டைகளையும் பழுதுபார்த்தார். அவரிடம் கிட்டத்தட்ட 300 கோட்டைகள் இருந்தன.

**உங்களுக்குத் தெரியுமா?**

- மாமன்னர் சிவாஜியின் இளைய புதல்வரான சத்ரபதி ராஜாராம் மகாராஜாவின் ஆணையின் பேரில், ராமசந்திரபந் அமாத்ய என்பவர் 'ஆஜ்ஞாபத்ர' (அரச கட்டளை) என்ற நூலை எழுதினார் என்று நம்பப்படுகிறது. இந்நூலில் சிவ சத்ரபதியின் அரசியல் பற்றிய தெளிவான பிரதிபலிப்பு வெளிச்சத்துக்கு வருகிறது.

**செய்து பார்க்க**

- தீபாவளி விடுறையில் நண்பர்களின் துணையுடன் ஏதேனும் ஒரு கோட்டையின் மாதிரியை உருவாக்குக.
  - கோட்டையை உருவாக்குவதற்கு தேவையான பொருள்களின் பட்டியலை உருவாக்குக.
  - கோட்டைக்கான இடத்தை தேர்வு செய்க.
  - கோட்டையிலுள்ள வீடுகள் மற்றும் குடிநீர் ஆகியவற்றுக்கான ஏற்பாடு எவ்வாறு இருக்கும் என்பதற்கான திட்ட வரைபடத்தை தயாரிக்க.

**கூறுங்கள் பார்ப்போம்**

- உங்களது சுற்றுப்புறத்திலுள்ள கோட்டை அல்லது குகை சிற்பத்தின் பெயரைக் கூறுக.
- எப்பொருள்கள்/கோட்டையில் எக்கட்டடங்கள் உள்ளன?
- கோட்டை எவ்வகையை சேர்ந்தது?



**கோட்டையை கட்டுதல்**

## கோட்டைகளின் மேலாண்மை

மாமன்னர் சிவாஜி கோட்டைகளின் பாதுகாப்பிற்காக திட்டவட்டமான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

ஒவ்வொரு கோட்டையிலும் கோட்டைத்தலைவர், ஆவணக் காப்பாளர் மற்றும் பண்டகக் காப்பாளர் ஆகிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். கில்லேதாரின் கீழ் ஆவணக் காப்பாளர் மற்றும் பண்டகக் காப்பாளர் பணியாற்றினர்.

இவ்வதிகாரிகளின் பணிகளை பின்வருமாறு கூற முடியும்.

### கோட்டைத்தலைவர் (கில்லேதார்)

- கோட்டையைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தல்.
- ஆவணக் காப்பாளர் மற்றும் பண்டகக் காப்பாளர் ஆகியோருக்கு ஆணை வழங்குதல்.
- அரசின் கடிதக் குறிப்புகள், அறிவுறுத்தல்கள் மற்றும் ஆணைகளைப் பின்பற்றுதல்.

### ஆவணக்கப்பாளர் (சப்னீஸ்)

- கோட்டையிலுள்ள வரவு செலவுகளுக்கு கணக்கு வைத்தல்
- கோட்டையிலும் அதற்கு கீழும் உள்ள மக்களிடம் வரி வசூலித்தல்.
- கடிதப் போக்குவரத்தை கவனித்தல்.

### பண்டகக் காப்பாளர் (கார்கானீஸ்)

- கோட்டையில் வாழும் மக்களுக்கு தானியங்கள் மற்றும் பொருள்களை வழங்குதல்.
- யுத்த வேளையில் பீரங்கிகள் மற்றும் போர்த் துப்பாக்கிகளுக்குத் தேவையான தளவாடங்களை (வெடி மருந்துகளை) ஏற்பாடு செய்தல்.
- கோட்டையிலும் அதன்மீதும் உள்ள கட்டடங்களை கவனித்தல் மற்றும் செப்பனிடுதல்.

## பீரங்கி மற்றும் வெடிமருந்துகள்

மாமன்னர் சிவாஜியின் காலத்தில் கோட்டைகளைப் பாதுகாக்க சிறியதும் பெரியதுமான பலவகை பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டன. இப்பீரங்கிகள் கோட்டையின் சுவர்களிலும், புற அரண்களிலும் (கொத்தளங்களிலும்) வைக்கப்பட்டன. புரந்தர், பீம்கட் போன்ற சில கோட்டைகளில் பீரங்கி தயார் செய்யும் தொழிற்சாலைகளும் இருந்தன. இரும்பு, பித்தளை மற்றும் தாமிரம் போன்ற உலோகங்களிலிருந்து பீரங்கிகள் தயாரிக்கப்பட்டன. மழைக்கால நாட்களில் கோட்டையிலுள்ள பீரங்கிகள் துருப்பிடிக்கக் கூடாது என்பதற்காக அவற்றிற்கு மெழுகுப் பூச்சு அளிக்கப்பட்டது. பீரங்கிகளால் பகைவர்களை தாக்குவதற்காக இரும்பு, கல் மற்றும் குல்பி குண்டுகள் (இதில் காரீய குண்டுகள் இருக்கும்) ஆகியவை பயன்படுத்தப்பட்டன. பீரங்கி தாக்குதலுக்கு வெடிக்கும் கலவை பயன்படுத்தப்பட்டது.

**கலந்துரையாடுக**

- கோட்டையிலுள்ள துருப்பிடிக்கக் கூடாது பீரங்கிகள் என்பதற்காக அவற்றிற்கு மெழுகுப் பூச்சு அளிக்கப்பட்டது.

**கூறுங்கள் பார்ப்போம்**

- மாமன்னர் சிவாஜியின் கடற்படையிலுள்ள கப்பல்களின் வகைகளைக் கூறுக. எ.கா. பெருங்கப்பல், துடுப்புப்படகு, பீரங்கிப் கப்பல், மீன்பிடிப்படகு, வணிகக் கப்பல், தோணி
- சுதந்திர இந்தியாவின் கடற்படையிலுள்ள கப்பல்களின் பெயர்களைக் கூறு.

## கடற்படை

கடற்படை என்பது போர்க் கப்பல்களின் கூட்டம் ஆகும். ஆங்கிலேயர், போர்த்துக்கீஷியர், சித்திஸ் மற்றும் டச்சுக்காரர்களிடம் வலிமையான கடற்படை



கடற்படையைக் கண்காணிக்கும் மாமன்னர் சிவாஜி

இருந்தது. அவர்களுள் சிலர் கடற்கரையோரக் கிராமங்களில் கொள்ளையடித்தனர். அங்குள்ள மக்களை சித்திரவதை செய்தனர். மாமன்னர் சிவாஜி இந்த கடற் பகைவர்களை நிரந்தரமாக அடக்குவதற்காக சுதந்திரமான கடற்படையை உருவாக்கினார்.

மாமன்னர் சிவாஜி சிறியதும் பெரியதுமான கப்பல்களை, படகுகளை உருவாக்குவதற்காக கப்பல் பட்டறைகளை எழுப்பினார். கடலிலுள்ள பழைய கோட்டைகளை வென்று, தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டார். சுவர்ணதுர்க், விஜயதுர்க் போன்ற கடற்கோட்டைகளை அவர் செப்பனிட்டார். அவர் மால்வனுக்கு அருகிலுள்ள குர்ட்டே தீவில் சிந்துதுர்க் என்னும் புதிய கடற்கோட்டையைக் கட்டினார். அது போன்றே, மும்பைக்கு அருகில் காந்தேரி கோட்டையையும் கட்டினார்.

சுயராஜ்ய கடற்படையில் கோலி, பண்டாரி, ஆகரி போன்ற பல்வேறு ஜாதி-சமய போர் வீரர்கள் இருந்தனர். தௌலத்கான், மாயனாக் பண்டாரி, லாய் பாட்டீல், தர்யாசாரங் துகோஜி ஆங்ரே போன்றோர் கடற்படைப் போரில் அவரது காலத்தில் புகழ் பெற்றவர்களாவர்.

மராட்டிய கடற்படையால், ஆங்கிலேயர், போர்த்துக்கீசியர், சித்திஸ் மற்றும் டச்சுக்காரர் போன்ற கடற் பகைவர்கள் அவர்களைக் கண்டு பயப்படத் தொடங்கினர். இதனால், எதிரிகளால் சுயராஜ்யத்திற்கு ஏற்படும் சிக்கல் குறைந்தது. அவர் சுதந்திரமான கடற்படை அமைத்து அதன் பலத்தால் தமது கடல் ஆட்சி எல்லையை வரையறை செய்து கடற்கரைக்கு அருகிலுள்ள பகுதிகளில் தனது உரிமையை நிலைநாட்டினார். தமது கடற்கரைப் பகுதியை பாதுகாத்தார். இடைக்காலத்தில் இந்தியாவில் மாமன்னர் சிவாஜி அமைத்ததே முதல் சொந்த கடற்படை ஆகும். ஆகவேதான் மாமன்னர் சிவாஜி 'இந்திய கடற்படையின் தந்தை' என்று முறையாக கௌரவிக்கப்படுகிறார்.

**மாமன்னர் சிவாஜியின் உளவுத்துறை:** மாமன்னர் சிவாஜியின் இராணுவத்தில் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட உளவுத்துறை இருந்தது பஹிர்ஜி நாயக் இத்துறையின் தலைவர் ஆவார். சூரத் போர்நடவடிக்கை போன்ற போர் நடவடிக்கைகளில் வெற்றி கிடைப்பதற்கு அவருக்குக் கிடைத்த துல்லியமான தகவல்கள் பெரிதும் உதவின. சிவாஜியின் ஒற்றர்கள் பகைவர் முகாம்களின் விளக்கமான தகவலைக் கண்டுபிடித்தனர். மாமன்னர் சிவாஜி எந்தவொரு தாக்குதலையும் செய்வதற்கு முன், ஒற்றர்களிடமிருந்து தகவலைப் பெற்று அதன்பின்பே தாக்குதலைத் திட்டமிட்டார்.

**கொரில்லா போர் தந்திரம்:** மாமன்னர் சிவாஜியின் போர்த் திட்டமுறையில் குறிப்பாக கொரில்லா போர்த் தந்திரங்கள் முக்கியமானவையாகும். கொரில்லா போர்த் தந்திரத்தில் நமக்கு வசதியான இடத்தில் மற்றும் அனுகூலமான வேளையில் பகைவர்கள் மீது திடீரென, எதிர்பார்க்காத தாக்குதல் நடத்துதல், எதிரிகள் மீள்வதற்கு நேரம் கொடுக்காமலும் பாதுகாப்பான இடத்தை அடையவிடாமல் தாக்குவதும் இதில் உள்ளடங்கும். இத்தந்திரத்தை பயன்படுத்தும்போது சிவாஜி மகாராஜாவிற்கு சயாத்ரி மலையிலுள்ள அடர்ந்த காடுகள், மலைக் கோட்டைகள் மற்றும் அவரது குடிமக்களின் ஆதரவு ஆகியவை உதவின.

**உங்களுக்குத் தெரியுமா?**

- சிவாஜியின் படை வீரர்கள் ஒழுக்கம் உடையவர்களாக இருந்தனர். வீரர்கள் பெண்களை மரியாதையுடன் நடத்தினர். ஆகவே, 'பெண்களின் பாதுகாவலர்' என அழைக்கப்பட்டார். எனவே மாமன்னர் சிவாஜியின் புகழ் எல்லா இடங்களிலும் பரவியது. அவர் வீரர்களிடம் மது அருந்தக் கூடாது; அவரது குடிமக்களுக்கு தொந்தரவு தரக்கூடாது; அவர்களிடமிருந்து மிரட்டிப் பணம் பறிக்கக் கூடாது என கண்டிப்பாக எச்சரித்திருந்தார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

- மாமன்னர் சிவாஜியின் சில கூட்டாளிகள் கான்ஹோஜி ஜெதே, பாஜி பாசல்கர், பிரங்கோஜி நர்சாளா, பிரதாப்ராவ் குஜர், சிதோஜி நிம்பால்கர் மற்றும் சித்தி ஹிலால் ஆவர்.

1. **கூறுங்கள் பார்ப்போம்!**

(அ) கோட்டைகளின் முக்கியத்துவத்தைக் கூறும் நூல்................

(ஆ) கடற்கோட்டை................ என்றும் அழைக்கப்படுகிறது.

2. **நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதைக் கூறுக.**

(அ) மாமன்னர் சிவாஜி 'இந்திய கடற்படையின் தந்தை' என்று முறையாக கௌரவிக்கப்படுகிறார்.

(ஆ) மாமன்னர் சிவாஜியின் மேலாண்மையை எந்தெந்த துறைகளில் காணக் கிடைக்கிறது?

3. **கோட்டையில் பின்வரும் அதிகாரிகளின் இரு பணிகளை எழுதுக.**

(அ) கோட்டைத் தலைவர்
1. ......... 2. .........

(ஆ) ஆவணக் காப்பாளர்
1. ......... 2. .........

(இ) பண்டகக் காப்பாளர்
1. ......... 2. .........

4. மகாராஷ்டிரா எல்லைக் கோட்டு நிலப்படத்தில் பின்வரும் இடங்களைக் காட்டுக.

(அ) சிந்துதுர்க் (ஆ) விஜயதுர்க்

(இ) மும்பை (ஈ) பிரதாப்கட்

5. **மாமன்னர் சிவாஜியின் மேலாண்மைத் திறன்களிலுள்ள எந்த பண்புக்கூறு உங்களுக்கு மிகவும் பிடிக்கிறது? இப்பண்புகளை உங்களது அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?**

## செயல்பாடு

(அ) 'மாமன்னர் சிவாஜியுடன் பேட்டி நடத்துதல்' என்ற ஒரு நிகழ்வை நாடகமாக வகுப்பில் வழங்குதல்.

(ஆ) இந்திய கடற்படையிலுள்ள போர்க் கப்பல்கள் பற்றிய தகவல்களைப் பெறுக.

(இ) பல்வேறு வகையிலான கோட்டைகளை சுற்றிப் பார்க்கவும். மேலும், கோட்டையின் பல்வேறு பகுதிகளின் பெயர்களை கண்டுபிடிக்கவும்.

# 18. மக்கள் நலனுக்கான சுயராஜ்யத்தின் நிர்வாகம்



**உங்களால் கூற முடியுமா?**

- மாமன்னர் சிவாஜி போரிட்ட பல்வேறு அரசுகளின் பெயர்களைக் கூறவும்.

மாமன்னர் சிவாஜி பல அந்நிய சக்திகளுக்கு எதிராக நீண்ட காலம் போராடினார். அவர்கள் அடில்ஷாஹி மற்றும் மொகலாய சக்திகள், போர்த்துக்கீசியர்கள் மற்றும் ஜஞ்சி ராவின் சித்திகள் ஆவர். இவ்வாறு ஒரு சுதந்திர ஹிந்தவி சுவராஜ்யம் உருவாக்கப்பட்டது.

சுமூகமாக வேலை செய்வதற்காக, மாமன்னர் சிவாஜி நிர்வாகத்தை எட்டு துறைகளாகப் பிரித்தார். ஒவ்வொரு துறைக்கும் பொறுப்பான ஒரு அமைச்சரை நியமித்தார். இதுவே அவருடைய பிரபலமான எட்டு அமைச்சர்களைக் கொண்ட அவையாகும். சுயராஜ்யம் என்பதன் பொருள் விளங்கும்படி மாமன்னர் சிவாஜியின் சுயராஜ்யமானது மக்களின் நலனுக்காக நடத்தப்பட்ட அரசாகத் திகழ்ந்தது. இது எட்டு அமைச்சர்களின் உதவியுடன் நடத்தப்பட்டது. மாமன்னர் சிவாஜி அவர்கள் தாமே முன்வந்து இந்த எட்டு அமைச்சர்களையும் பிற முக்கிய அதிகாரிகளையும் அவர்களது தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் நியமித்தார்.



**உங்களுக்குத் தெரியுமா?**

உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் ஆகும். ஒரு மக்கள் நலனுக்கான அரசில், மக்களின் இந்த தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றன. பெண்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். பொது மக்கள், விவசாயிகள் ஏமாற்றப்படுவதில்லை. யாருக்கும் அநீதி செய்யப்படுவதில்லை. நீதி விரைவில் நிலைநாட்டப்படுகிறது. விவசாயமும் தொழில்களும் நன்றாக வளர்கின்றன. நாட்டுப்புற கலைகள் செழிக்கின்றன. மக்கள் மகிழ்ச்சியான மனநிறைவான வாழ்க்கையை வாழ முடியும்.

மாமன்னர் சிவாஜி உருவாக்கிய சுயராஜ்யத்தில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். எனவே, மகாராஷ்டிர மக்களிடையே நம்பிக்கை, சுய மரியாதை மற்றும் தேசபக்தி போன்ற குணங்கள் சிறப்பாக வெளிப்பட்டன.

**எட்டு பேர் கொண்ட சிவாஜியின் அமைச்சரவை**

| எண் | அமைச்சரின் பெயர் | பதவி | பணி |
|---|---|---|---|
| 1. | மோரே திரிம்பக் பிங்ளே | பிரதான் (முதலமைச்சர்) | அரசு நிர்வாகம் செய்தல் |
| 2. | ராம் சந்திர நீலகண்ட முஜிம்தார் | அமாத்யா (நிதி அமைச்சர்) | வருவாய் மற்றும் வரவு செலவு கவனித்தல் |
| 3. | ஹம்பீர்ராவ் மொஹித்தே | சேனாபதி (பாதுகாப்புத்துறை அமைச்சர்) | பாதுகாப்பு படைத்துறையை வழிநடத்துதல் |
| 4. | மோரேஷ்வர் பண்டித்ராவ் | பண்டித்ராவ் (அறநிலையத்துறை அமைச்சர்) | மதம் சார்ந்த பணிகளை கவனித்தல் |
| 5. | நிராஜி ராவாஜி | நியாயதீஷ் (நீதி அமைச்சர்) | நீதி வழங்குதல் |
| 6. | அன்னாஜி தத்தோ | சச்சீவ் (தலைமைச் செயலர்) | அரசு ஆணைகளை அனுப்புதல் |
| 7. | தத்தாஜி திரிம்பக் வாக்னீஸ் | மந்திரி (தகவல் தொடர்பு) | தகவல் தொடர்பு பரிவர்த்தனைகளை கவனித்தல் |
| 8. | ராமச்சந்திர திரிம்பக் டபீர் | சுமந்த் (வெளியுறவுத்துறை அமைச்சர்) | வெளிநாடுகளுடனான உறவை பேணுதல் |



**சோடி எருதுகள் மற்றும் அடிப்படை பொருள்களை மாமன்னர் சிவாஜி பகிர்ந்தளித்தல்**

**நீங்கள் செய்யவேண்டியவை சில**

● பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள 'சுற்றுச் சூழல் பாதுகாப்பு அரசாணைப்' பகுதியை பெரிய எழுத்தில் எழுதி அவற்றை அட்டவணையாக தயார் செய்யவும். அதனை வாசித்துக் வகுப்பறையில் காட்டவும்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

இயற்கை சுற்றுச் சூழலில் இயற்கையான நிலம், காற்று, மழை, ஆறுகள் மற்றும் நீரோடைகள், கடல்கள், காடுகள், பறவைகள் மற்றும் விலங்குகள், சூரியனிலிருந்து பெறப்பட்ட ஒளி நிடவொளி போன்ற காரணிகளும் அடங்கும். நன்மை பயக்கும் இந்த சுற்றுச்சூழலை மனிதன் பயன்படுத்துவது அவனது தேவைகளை நிறைவு செய்ய மட்டுமே ஆகும்.

இந்த சுற்றுச்சூழல் காரணிகளை அழிப்பதைத் தவிர்க்க மாமன்னர் சிவாஜி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மாமன்னர் சிவாஜி தனது அரசாட்சியில் உள்ள மக்கள் காடுகளை அழிக்காமல் பார்த்துக் கொண்டார். 'அரசாணையில்' இருந்து அவர் பின்வருவனவற்றைப் போல பல உத்தரவுகள் பிறப்பித்திருப்பதைக் காணலாம். கடற்படைக்காக, படகுகள் கட்டுதல் மற்றும் பல்வேறு அளவுகளில் கப்பல்கள் கட்டுமானப் பணி மற்றும் அவற்றின் தூலங்கள், கொடிக்கம்பங்கள், துடுப்புகள் போன்றவற்றை கட்டுவது அவசியம். இதற்காக மரக்கட்டைகள் தேவை. இந்த மரக்கட்டைகளைப் பெற தேக்கு மரங்களை மட்டுமே வெட்ட வேண்டும். அதிகமான தேக்கு மரங்கள் தேவைப்பட்டால், அதை வெளிப்பிரதேசங்களிலிருந்து வாங்க வேண்டும். ஆனால் எக்காரணத்தைக் கொண்டும் மா, பலா அல்லது பிற மரங்களை வெட்டக்கூடாது. அவை ஓரிரு ஆண்டுகளில் வளர்பவை அல்ல. மக்கள் தங்கள் குழந்தைகளைப்போல அவற்றை வளர்க்கிறார்கள். அவற்றை வெட்டுவது மக்களுக்கு துன்பத்தை ஏற்படுத்துவதாகும்.



**சுற்றுச்சூழல் பாதுகாப்பு**

அதை செய்யக் கூடாது. ஒரு மரம் பெரிதும் தேய்ந்துபோகும்போது கூட, உரிமையாளருக்கு பணம் செலுத்தி அவரது ஒப்புதலைப் பெற்ற பின்னரே அதை வெட்ட வேண்டும்.

**எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்!**

சுற்றுச்சூழலைப் பேணுதல் மற்றும் பாதுகாத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் நாள் ‘உலக சுற்றுச்சூழல் தினம்’ ஆகக் கொண்டாடப்படுகிறது.

## நீர் மேலாண்மை

மாமன்னர் சிவாஜி மக்களுக்கு குடிநீர் கிடைப்பதற்காக, சுயராஜ்ய கிராமங்களுக்கு அருகே பல்வேறு நீர்த்தேக்கங்களை கட்டினார். விவசாயத்திற்கு தண்ணீர் கிடைக்க கால்வாய்கள் தோண்டப்பட்டன. இதனால்,விளைபொருள்கள் அதிகரித்தன. வறட்சியின் தீவிரத்தை சுயராஜ்யத்தில் மக்கள் ஒருபோதும் உணரவில்லை. மாமன்னர் சிவாஜியின் ஆட்சியின்போது, கோட்டைகளில் வாழும் மக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருந்தது. மாமன்னர் சிவாஜி, கோட்டைகளில் தண்ணீருக்கு முறையான ஏற்பாடுகளை செய்வதில் அக்கறை காட்டினார். கோட்டையை கட்டுவதற்கு முன்பு, அந்த இடத்தில் தேவையான அளவு நீர் வசதி இருக்கிறதா என்று ஆய்வு செய்யப்பட்டது. தண்ணீர் இல்லையெனில், மழைக்காலம் துவங்குவதற்கு முன்பு, ஏரிகள் மற்றும் நீர்த்தேக்கங்கள் அங்கு கட்டப்பட்டன. மழைநீர் சேமிக்கப்பட்டது.

சேமித்து வைக்கப்பட்ட நீர் சிக்கனமாக பயன்படுத்தப்பட்டது. இத்தகைய நீர் சுயராஜ்ய மேலாண்மை காரணமாக, கோட்டைகளில் உள்ள மக்களும் பிற மக்களும் வறட்சி காலங்களில் கூட தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படவில்லை.



மாமன்னர் சிவாஜி நீர்த்தேக்கங்களையும் கால்வாய்களையும் அமைத்து குடிநீர் மற்றும் நீர்ப்பாசன வசதிகளை செய்தல்

**உங்களால் கூற முடியுமா?**

- நாம் ஏன் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும்?
- உனது கிராமத்திற்கு அருகில் அல்லது ஏரியின் பெயரை கூறவும்.
- நீர் மேலாண்மை என்றால் என்ன?
- நீர் மேலாண்மைக்கான அரசின் திட்டங்கள் யாவை?

**உங்களுக்கு தெரியுமா?**

- மகாராஷ்டிராவை நிரந்தரமாய் வறட்சி இல்லாத மாநிலமாக மாற்றுவதற்காக 'ஜல்யுக்த ஷிவார்' என்ற திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது.

## வறட்சி நிவாரணம்

மாமன்னர் சிவாஜி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பல்வேறு வசதிகளை வழங்கினார். அவர் வரிகளை தள்ளுபடி செய்தார். எனவே சுயராஜ்யத்தில் மக்களுக்கு வறட்சியின் தீவிரம் குறைந்தது. வறட்சி ஆண்டில், அரசின் தானிய களஞ்சியங்களில் சேமித்து வைக்கப்பட்ட தானியங்களை மாமன்னர் சிவாஜி மக்களுக்கு இலவசமாக விநியோகித்தார். வறட்சி காலங்களில் பல்வேறு கோட்டைகளை பழுதுபார்த்தல், அணைகள், நீர்த்தேக்கங்கள் கட்டுதல் மற்றும் கால்வாய்கள் தோண்டும் பணிகளை மேற்கொண்டார். இவ்வாறு, விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் அல்லது 'பாலுட்டேடர்கள்' வறட்சியின் தீவிரம் அறியாமல் தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்தினார்கள்.

விவசாயி செல்வந்தரானதால், அவர் காலணி, உடைகள் போன்றவற்றை வாங்க முடிந்தது. இது கைவினைஞர்களுக்கு வேலை வழங்கியது. அதுவரை வீடின்றி இருந்தவர்கள், சொந்தமாக வீடு கட்டும் திறனை வளர்த்துக் கொண்டனர். இது கொத்தனார்கள், தச்சர்கள், இரும்புக் கொல்லர்கள், செங்கல்

தயாரிப்பவர்களுக்கு வேலை வழங்கியது. இவ்வாறு விவசாயிகளோடு கைவினைஞர்களும் மகிழ்ச்சியாகவும் செல்வந்தர்களாகவும் மாறினர்.



**உங்களால் கூற முடியுமா?**

- உன்னுடைய கிராமத்தில் / வட்டாரத்தில் உள்ள சந்தையின் பெயரைக் கூறவும்.
- சந்தைக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன?

## கடல் வர்த்தகம் மற்றும் பிற சந்தைகள்

மாமன்னர் சிவாஜி தனது சுயராஜ்யத்தை நன்கு பாதுகாப்பதற்காகவும் அதனை ஒட்டியுள்ள கடல்மீது தனது ஆட்சியை நிலைநாட்டவும் தனது சொந்த கடற்படையை வளர்த்தார். ஆனால் அதோடு முடிந்துவிடவில்லை. வர்த்தகத்தை சுயராஜ்யத்தில் மேம்படுத்துவதற்காக கட்டப்பட்ட சிறப்பு சரக்குக் கப்பல்களும் அவரிடம் இருந்தன. ராஜாபூர் போன்ற வர்த்தக துறைமுகங்களை உருவாக்கினார். ராய்காட்டில் ஒரு சிறப்பு சந்தையை கட்டினார். புனேவுக்கு அருகில் உள்ள கேத் சிவாபூரில் ஒரு தனி சந்தையை தொடங்கினார். பெரிய நகரங்கள் மற்றும் சாலையோர கிராமங்களில் சந்தைகளை உருவாக்கினார். வீர்மாதா ஜிஜாபாயின் உத்தரவின்படி புனேவுக்கு அருகிலுள்ள பாஷனில் ஒரு புதிய 'பெத்' அல்லது குடியேற்றம் நிறுவப்பட்டது. இது 'ஜிஜாப்பூர்' என்று குறிப்பிடப்பட்டது.

மாமன்னர் சிவாஜி சுயராஜ்யத்திற்குள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக வெளிப் பிரதேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு அதிக வரி விதித்தார். போர்த்துக்கீசிய தேசத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கு அதிக வரி விதித்தார். இது விலை உயர்ந்ததாக இருந்தது. மறுபுறம், சுயராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பை மக்கள் மலிவான விலையில் வாங்குவதற்காக அதன் மீதான வரியை குறைத்தார். இது, சுயராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பு வர்த்தகத்தை அதிகரித்தது. இதனால், உள்ளூர் வர்த்தகம் ஊக்குவிக்கப்பட்டது.

மாமன்னர் சிவாஜி சுயராஜ்யத்தில் வர்த்தகம் மற்றும் தொழில்களின் வளர்ச்சிக்கு முயற்சிகளை மேற்கொண்டார். அவர் தனிப்பட்ட முறையில் தனது குடிமக்கள் வணிகர்களால் ஏமாற்றப்படாமலிருக்கும்படி கவனித்துக் கொண்டார். கொங்கன் பகுதியில் தேங்காய் மற்றும் வெற்றிலை வர்த்தகத்தால் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள் என்பதை அறிந்து அந்த பிரதேசத்தின் சுபேதாரை எச்சரித்தார்.

## பெண்களுக்கு மரியாதை

மாமன்னர் சிவாஜி போர்க் காலங்களில் எதிரி முகாமில் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எந்த வகையிலும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்று உத்தரவிட்டார். உண்மையாகவே, அவர்கள் மிகுந்த மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். மாமன்னர் சிவாஜியின் நடத்தை பல சந்தர்ப்பங்களில், பெண்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதற்கான இலட்சியத்தை அமைத்தது.

மராட்டிய இராணுவம் கர்நாடகாவின் பேல்வடி கோட்டையை கைப்பற்ற அணிவகுத்துச் சென்றது. மல்லம்மா தேசாய் என்ற துணிச்சலான பெண் கோட்டையை பாதுகாப்பதற்காக பெரும் போரில் ஈடுபட்டார். மாமன்னர் சிவாஜி அவளுடைய தைரியத்தைப் பற்றி அறிந்ததும், அவர் அவளை தனது தங்கை என்று அழைத்து, அவளுடைய கோட்டையையும் கிராமங்களையும் மரியாதையுடன் திருப்பித்தந்து அவருக்கு 'சாவித்ரி' என்ற பட்டத்தை வழங்கினார்.

## தூய்மை குறித்து விழிப்புணர்வு

மாமன்னரின் ஆட்சியின்போது பொது இடங்களிலும் வீடுகளிலும் சிறந்த தூய்மையை பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. எலிகள், தேள், பூச்சிகள் மற்றும் எறும்புகள் போன்ற விலங்குகள் நுழைவதைத் தடுக்க வீட்டைச் சுற்றி 'நிர்குடி' மரங்களினால் வேலி அமைக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தினார்.



**மாமன்னர் சிவாஜி பேல்வாடியின் மல்லம்மா தேசாயியை கௌரவித்தல்**

ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் கிருமிகளை ஒழிப்பதற்காக, புகை எழுப்பி அழிக்க வேண்டும். இதுபோன்று உத்தரவுகளை சிவாஜி பிறப்பித்தார் என்பது காணக்கிடைக்கிறது.

சாலையில், சந்தைகளில் மற்றும் கோட்டையில் குப்பைகளை விட்டுவைக்கக் கூடாது என்று மக்களுக்கு எச்சரிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் மீறி குப்பைகளை பல்வேறு இடங்களில் குவித்து கோட்டையின் வைத்திருந்தால், அது கீழே வீசப்படக் கூடாது. அது அந்த இடத்திலேயே எரிக்கப்பட வேண்டும் மற்றும் சாம்பலானது பின்முற்றத்தில் வளர்க்கப்படும் காய்கறிளுக்கு எருவாகப் பயன்படுத்தப்பட வேண்டும். மாமன்னர் சிவாஜியின் கோட்டைகள், பீரங்கிகள் மற்றும் துப்பாக்கிகளை நிர்வகித்தல், அவரது கடற்படை, சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், நீர் மேலாண்மை, கடல் வர்த்தகம், சந்தைகள், தூய்மை மற்றும் சுகாதாரம் ஆகியவை இன்றும் நமக்கு ஒரு வழிகாட்டும் சக்தியாகும்.

## ஹிந்தவி சுயராஜ்யம்

ஹிந்தவி சுயராஜ்யம் என்பது மாமன்னர் சிவாஜியின் கனவாகும். இந்துஸ்தானில் வாழ்ந்த எவரும், அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ‘ஹிந்தவி’ ஆவார். அவர்களின் அரசு என்பது ‘ஹிந்தவி சுயராஜ்யம்’ ஆகும்.

## மத சகிப்புத்தன்மை

மாமன்னர் சிவாஜி மத சகிப்புத்தன்மை கொண்டவராக இருந்தார். போர்க்காலங்களில், அவர் ஒருபோதும் மசூதிகளுக்கு எந்தத் தீங்கும் செய்யவில்லை. திரு குர் ஆன் பிரதிகளைக் கண்டால், உரிய மரியாதையுடன் முகமதியர்களிடம் சேர்த்து விடுவார். முகமதியர்களை அவர் ஒருபோதும் வெறுக்கவில்லை. தனது மதத்தை மாற்றிய ஒருவர் தனது சொந்த மதத்திற்குத் திரும்ப விரும்பினால், சிவாஜி அவருக்கு உதவினார். அவருடைய மைத்துனர் பஜாஜி நாயக் நம்பல்கர் பிஜப்பூரைச் சேர்ந்த அடில்ஷாவின்

சேவையில் இருந்தார். அடில்ஷா அவரை முஸ்லிம் நம்பிக்கையை ஏற்றுக்கொள்ளச் செய்தார். பஜாஜி பிஜப்பூரை தனது இல்லமாக மாற்றினார். அவருக்கு யாதொரு குறையுமில்லை, ஆனால் அவருடைய மதத்திலிருந்து மாறியது அவருக்கு வருத்தமளித்தது. ஒரு நாள், அவர் தனது சொந்த மதத்திற்கு திரும்பி வர மனம் வைத்தார். மாமன்னர் சிவாஜி அவரை மீண்டும் தனது மதத்திற்கு வரவேற்றார். நேத்தோஜி பால்கரின் நிலைமையும் இது போன்றதே ஆகும். அவரது மதம் மாற்றப்பட்டது. ஆனால் அவர் சொந்த மதத்திற்கு திரும்ப விரும்பினார். மாமன்னர் சிவாஜி அவரை மீண்டும் தனது மதத்திற்குள் ஏற்றுக் கொண்டார்.

**நினைவில் நிற்கும் சிவாஜி:** அடிமைத்தனம் என்ற காரிருளில் சிவாஜி ஒரு ஒளிக்கீற்றாக விளங்கியவர். அனைத்து கடினமான சூழ்நிலைகளையும் சிறப்பாக வென்று

### உங்களுக்கு தெரியுமா?

- மாமன்னர் சிவாஜி துறவிகள் மற்றும் சான்றோர்கள் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். அவர் கோவில்களை நேசித்தார். மசூதிகளையும் பாதுகாத்தார், அவர் பகவத் கீதை மற்றும் திருக் குர்ரான் இரண்டையும் மதித்தார். கிறிஸ்தவ மக்களுக்கும் தேவாலயங்களுக்கும் பாதுகாப்பு அளித்தார். கல்விமான்களை கௌரவித்தார். பரமாநந்தர், காகப்பட்டர், துண்டிராஜ், பூஷண் மற்றும் பிற கல்விமான்களையும் ஆதரித்தார். திருத்தொண்டர்களான துக்காராம், ராம்தாஸ், பாபா யாகூத், மௌனிபாபா ஆகியோரையும் கௌரவித்தார்.



**நினைவில் நிற்கும் சிவாஜி**

முன்னேறிச் சென்றவர். சக்திவாய்ந்த எதிரிகளுடன் போரிடும்போது புத்தி சாதுர்யத்தாலும், சாமர்த்தியத்தாலும் தன்னுடைய வலிமையை அதிகரித்துக் கொண்டவர். தோழர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்து, எதிரிகளை அடிபணியச் செய்வதில் வெற்றி கொண்டவர். இத்தகைய அனைத்து குணங்களையும் கொண்டவர் சிவாஜி. இவர் ஒரு சிறந்த மகன், முன்மாதிரியான தலைவர், குடிமக்கள் மீது அக்கறை கொண்ட தலைவர். திறமையான ஒருங்கிணைப்பாளர், மக்கள் நல நிர்வாகி, இராஜதந்திரம் மிக்கவர். மிகச் சிறந்த குதிரை வீரர். எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர் மற்றும் புதிய யுகத்தை உருவாக்கியவர். இவ்வாறு சிவாஜி என்ற ஆளுமையைப் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் பார்க்கும்போது மீண்டும் மீண்டும் நினைவிற்கு வருவது யாதெனில்,

அவருடைய அற்புதமான உருவத்தை
வீரதீரச் செயல்களை,
அளப்பெரிய சாதனைகளை
நினைவு கூர்வோம்!

## சுயகற்றல்

### 1. காரணம் கூறுக

(அ) ஒரு தனி இந்தவி சுயராஜ்யம் உருவாக்கப்பட்டது.

(ஆ) சுயராஜ்யத்தில் மக்கள் வறட்சியின் தீவிரத்தை உணரவில்லை.

(இ) மாமன்னர் சிவாஜி மல்லம்மா தேசாயியை கௌரவித்தார்.

### 2. கோடிட்ட இடங்களை நிரப்பி அட்டவணையை முழுமையாக்கவும்.

| எண் | அமைச்சரின் பெயர் | பதவி | பணி |
|---|---|---|---|
| 1. | மோரே திரிம்பக் பிங்ளே | ------ | அரசு நிர்வாகம் செய்தல் |
| 2. | ------------ | அமாத்யா (நிதி அமைச்சர்) | வருவாய் மற்றும் வரவு செலவு கவனித்தல் |
| 3. | ஹம்பீர்ராவ் மொஹித்தே | சேனாபதி (பாதுகாப்புத்துறை அமைச்சர்) | ------------ |
| 4. | மோரேஷ்வர் பண்டித்ராவ் | ------ | மதம் சார்ந்த பணிகளை கவனித்தல் |
| 5. | ------------ | நியாயதீஷ் (நீதி அமைச்சர்) | நீதி வழங்குதல் |
| 6. | அன்னாஜி தத்தோ | ------ | அரசு சட்ட திட்ட ஆணைகளை ஆனுப்புதல் |
| 7. | ------------ | ------ | தகவல் தொடர்பு பரிவர்த்தனை கவனித்தல் |
| 8. | ராமச்சந்திர திரிம்பக் டபீர் | சுமந்த் (வெளியுறவுத்துறை அமைச்சர்) | ------------ |

### 3. கலந்துரையாடவும்

சுற்றுச்சூழலில் உள்ள பல்வேறு காரணிகள் அழிக்கப்படாமல் இருக்க மாமன்னர் சிவாஜி எவற்றை உறுதிபடுத்தினார்? சுற்றுச்சூழலை பாதுகாக்க நீ என்ன செய்வாய்?

### 4. படித்து கூறவும்.

நீர் மேலாண்மை பற்றி படிக்கவும் மற்றும் அதை உன்னுடைய சொற்களில் எடுத்துரைக்கவும்.

**செயல்:**

(அ) உங்கள் பள்ளி வளாகத்தில் ஒரு சந்தையை அமையுங்கள். பல்வேறு பொருள்கள் மற்றும் அவற்றின் விலைகளை பட்டியலிடுங்கள். இதற்காக உள்ளூர் சந்தையை பார்வையிடவும்.

(ஆ) உங்களுடைய பள்ளியின் சுற்றுப்புறங்களில் என்ன மரங்கள் நடப்பட்டுள்ளன? அவற்றை பாதுகாக்க நீங்கள் என்ன செய்வீர்கள்?

## சுற்றுப்புற பாதுகாப்பிற்கான அரச கட்டளை

ராமச்சந்திர பந்த் அமாத்யா அரச கட்டளையை (ஆஜ்ஞாபத்ர) எழுதினார். அது சிவாஜியினுடைய கொள்கைகளைப் பிரதிபலிக்கிறது. கீழ்க்கண்ட பகுதி சுற்றுச்சூழல் பற்றிய அவரது கருத்தினை விளக்குகிறது.

கடற்படைக்கான கப்பல்கள் உருவாக்க மரப்பலகைகள், உத்திரங்கள், பாய்மரங்கள் மற்றும் மரத்தின் பல பாகங்கள் தேவைப்படுகின்றன. காடுகளிலுள்ள தேக்கு மற்றும் பிற மரங்களின் பயனுள்ள பகுதிகளை அரசு அனுமதியுடன் மட்டுமே வெட்ட வேண்டும். இது தவிர தேவையான எல்லாவற்றையும் பிற பகுதிகளிலிருந்து வாங்கி வர வேண்டும். ஒருவரது சுயராஜ்யத்தில் மாமரம், பலாமரம் மற்றும் வேறு ஏதாவது மரங்கள் வளர்ந்து வந்தாலும் அவற்றை வெட்டக் கூடாது. ஏனெனில் இந்த மரங்கள் ஓரிரு ஆண்டுகளில் வளர்ந்து மரமாகி விடுவதில்லை. மக்கள் இம்மரங்களைத் தங்களுடைய குழந்தைகளைக் கவனிப்பது போல் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். அம்மரங்களை வெட்டினால் அவர்களின் மனம் துக்கத்திற்கு உள்ளாகும். பிறருக்குத் துன்பம் விளைவித்து ஒருவன் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றும்போது அதனால் அப்போது பலன் கிடைத்தாலும் இறுதியில் அவன் அதன் பலன் முழுவதையும் இழந்து நிற்பான். அதுமட்டுமன்றி மக்களுக்கு இன்னல் விளைவிக்கும் மன்னன் பாவத்திற்கு உள்ளாவான். இம்மரங்கள் இல்லை எனில் நாட்டிற்கு பேரிழப்பு ஏற்படுகிறது. இக்காரணங்களால் இச்செயல்கள் நேரிட அனுமதிக்கக் கூடாது. ஒரு மரம் பெருமளவில் சேதமடைந்து பயனற்று இருந்தாலும் மர உரிமையாளரின் சம்மதம் பெற்று அதற்குரிய தொகையைக் கொடுத்து ஈடுசெய்து அவரின் மனதைப் புண்படுத்தாமல் மரத்தை வெட்ட வேண்டும். எவரையும் இந்தச் செயலின் போது கட்டாயப்படுத்துதல் கூடாது.







செஞ்சிக் கோட்டை தற்போது தமிழ் நாட்டில் உள்ளது. தெற்குப் படையெடுப்பின்போது இக்கோட்டையை மாமன்னர் சிவாஜி வென்றார். இக்கோட்டை எப்போதும் பலமானதாகவும், வெற்றி கொள்ள கடினமானதாகவும் இருந்தது. இருப்பினும் மாமன்னர் முந்தைய பாதுகாப்பு அரண்களை அழித்துப் புதிய அரண்களையும் வாயிற் கோபுரங்களையும் கட்டி கோட்டையை வலிமை மிக்கதாக்கினார். சகாஜி ராஜே சிவாஜிக்கு இளம் வயதிலேயே தாக்க முடியாத அல்லது வெல்வதற்குக் கடினமான கோட்டையை உருவாக்க பயிற்சி அளித்திருந்தார். இந்தத் தருணத்தில் சிவாஜி அந்த அறிவைப் பயன்படுத்தி இருப்பது புலப்படுகிறது. பின்னர் மாமன்னர் ராஜாராம் இக்கோட்டை மீது தலைநகரை நிறுவினார். அவர் கோட்டையில் இருந்தபோது மொகலாயர்கள் கோட்டையை முற்றுகையிட்டனர். ஆனால் மாமன்னர் ராஜாராம் முற்றுகையிடப்பட்ட நிலையிலும் கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகள் கோட்டையைப் பாதுகாத்தார். அவ்வளவு காலமும் கோட்டையினுள் அவரால் பாதுகாப்பாக இருக்க முடிந்தது. ஏனெனில் மாமன்னர் சிவாஜி தொலைநோக்குப் பார்வையோடு அக்கோட்டையை மேலும் பலப்படுத்தி இருந்தார்.



பவானி தேவி - பிரதாப்காட்

**அன்பு குழந்தைகளே!**

யாராவது ஒருவர் உங்களை தகாத முறையில் தொடுவதைப் பற்றி நீங்கள் சங்கடமாக உணர்ந்தால், நீங்கள் அமைதியாக இருக்கக் கூடாது. நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்றால்.

1. உங்களை நீங்களே குற்றம் சொல்லாதீர்கள்.
2. நீங்கள் நம்பும் ஒருவரிடம் சொல்லுங்கள்.
3. நீங்கள் போக்சோ மின் பெட்டி மூலம் தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கும் தெரிவிக்கலாம்.

நீங்கள் ஒரு பாதுகாப்பற்ற தொடுதலைப் பெறும்போது, நீங்கள் மோசமாகவும், குழப்பமாகவும் மற்றும் உதவியற்றவராகவும் உணரலாம்.
நீங்கள் மோசமாக உணர வேண்டியதில்லை, ஏனெனில் அது உங்கள் தவறு அல்ல.




இந்த பொத்தானை அழுத்தவும்

போக்சோ மின் பெட்டி NCPCR@gov.in

நீங்கள் 18 வயதுக்குட்பட்டவராகவோ, துன்பப்படுத்தப்பட்டவராகவோ, குழப்பத்திற்கு உட்பட்டவராகவோ, தவறான நேர்மையற்ற முறையில் பயன்படுத்தப்பட்டவராகவோ, மனக் கலக்கத்திற்கு உட்பட்டவராகவோ அல்லது அப்படிப்பட்ட துன்பத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை அறிந்தவராகவோ இருந்தால்...

1098 என்ற எண்ணுக்கு அழைக்கவும்... ஏனென்றால் சில எண்கள் நல்லவை!
சில எண்கள் வாழ்க்கையை மாற்றும்!!




துன்பத்தில் உள்ள குழந்தைகளுக்கான தேசிய 24 மணிநேர கட்டணமில்லா அவசர தொலைபேசி சேவையான சைல்ட்லைன் 1098, பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் ஆதரிக்கப்படும் சைல்ட்லைன் இந்திய நிறுவனத்தின் முன்முயற்சியாகும்.

புதிய விடியலை நோக்கி
Towards a new dawn

**ஆசிரியர் குறிப்பு :** நல்ல தொடுதல்-கெட்ட தொடுதல் (குட் டச்-பேட் டச்) குறித்து மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்




மேற்கண்ட கடிதம் மாமன்னர் சிவாஜி டிசம்பர் 11, 1676 அன்று பர்கானா முர்காட்டின் (மாவட்டம்: கோலாப்பூர்) தேசாய் ருத்ரப்ப நாயக்கிற்கு அனுப்பினார். அதில் எதிரியின் இராணுவ சோதனைச் சாவடிகளை அழித்து தங்களுடைய சொந்த சோதனைச் சாவடிகளை அமைக்கும்படி கேட்டுக்கொண்டார். கடிதமானது மோடி எழுத்தில் எழுதப்பட்டுள்ளது.


மகாராஷ்டிர மாநிலப் பாட நூலாக்கம் மற்றும் கலைத்திட்ட ஆய்வுக் கழகம், புனே.

सा विद्या या विमुक्तये

महाराष्ट्र राज्य पाठ्यपुस्तक निर्मिती व अभ्यासक्रम संशोधन मंडळ

आपल्या सभोवतालचे जग भाग २ इयत्ता चौथी (तामिळ माध्यम)

₹ 60.00